விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + XVI
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 24 ஞாயிற்றுக்கிழமை (10.11.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 326

## மன்னாரில் எருமை குறுக்கே பாய்ந்ததில்

### மோ.சைக்கிள் விபத்து; பொலிஸார் உயிரிழப்பு

(மன்னார்)

மன்னாரில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில்பதுளை

15

### சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டி ஒழிந்துள்ளது

## புலிகளை அழித்ததனால் தமிழ் மக்களை ஏமாற்றலாம் என நினைக்கின்றனர் – சம்பந்தன்

(வவுனியா)

புலிகளை அழித்ததனால் எம்மையும் தமிழ் மக்களையும் ஏமாறலாம் என நினைக்கின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

மேலும் சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டி மறைமுகமாக ஒழிந்துள்ளது எனவும் சுட்டிக் காட்டினார்.

வவுனியாவில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்

15

### நாமல் தமிழர்கள் சார்பில் பேச முன்

# திருமலையில் மாணவர்களை கொன்றது யார் என கூற வேண்டும்

### இரா.சம்பந்தன் கேள்வி

(வவுனியா)


நாமல் ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வந்து தமிழ் மக்கள் சார்பாக பேச முன்னர் திருகோணமலையில் 5 மாணவர்களை யார் கொன்றார்கள் என்பதை கூறவேண்டும் எனத் தெரிவித்துள்ளார் இரா.சம்பந்தன்.

சஜித் பிரேமதாஸவை ஆதரித்து நேற்று வவுனியாவில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாமல் ராஜபக்ஷ ஒரு சின்னப் பொடியன். அவரைப் பற்றி பேசுவது அழகான விடயமல்ல. ஆனால் ஒரு விடயத்தை சொல்ல வேண்டும். தமிழ் இளைஞர்கள் சார்பாக

15



### புள்ளடியிடத் தவறின்

## வாக்குச்சீட்டு மீண்டும் ஒருமுறை வழங்கப்படாது

(கொழும்பு)

வாக்காளர்கள் தங்களுக்கு வழங்கப்படும் வாக்குச்சீட்டில் சரியான ஒருவருக்கு புள்ளடியிடத் தவறினால் அவர்களுக்கு மீண்டும் வாக்குச்சீட்டு வழங்கப்படாது என தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர்

15

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாளை யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மக்கள் சந்திப்புக்காக நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாண்த்துக்கு வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு வரும் சந்திரிகா யாழ்.வீரசிங்கம் மண்டபத்திலும் தெல்லிப்

15

### ஜனநாயகத்தின் மீது

## கோத்தபாய ராஜபக்ஷவுக்கு நம்பிக்கையில்லை

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

80 பக்கங்களைக் கொண்ட கோத்தாவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒரு

15

## கோத்தா வெற்றி பெற்றால் இனி தேர்தலே நடைபெறாது

### எம்.ஏ. சுமந்திரன் எச்சரிக்கை

(வவுனியா)

கோத்தபாய இம்முறை வெற்றி பெற்றால் இனி தேர்தல் ஒன்றே நடைபெறாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்

தமிழரசுக் கட்சி

16

### சுண்டிக்குளம் கடற்கரையில்

## 83 கிலோ கஞ்சாவுடன் கடற்படையால் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளம் கடற்கரையில் 83 கிலோ கேரள கஞ்சாவுடன் ஒருவரை கடற்படையினர் கைது



15

### 2 வருடங்களில்

## யுத்தத்தை நானே முடித்தேன்

### மகிந்த ராஜபக்ஷ

(நுவரெலியா)

இந்த நாட்டில் 30 வருட காலமாக நடைபெற்றுவந்த யுத்தத்தை நிறுத்துவதாக

15

## தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரம் தயார்

### – அமைச்சர் மனோ கணேசன்

(மட்டக்களப்பு)

அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் தற்போதும் தயார் நிலையில் இருப்பதாக தெரிவிக்கும் அமைச்சர்

15

### ஜனாதிபதித் தேர்தல்

## குற்றச்சாட்டை நிராகரித்தார் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித்தேர்தலில போட்டியிட பயமாக

15

### சஜித்தை ஆதரித்த முடிவு தவறு

## ரெலோவின் யாழ். மாவட்ட குழு நேற்று தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதென தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைமைக்குழு எடுத்த தீர்மானம் பிழையானது.

15

### வடக்கு, கிழக்கு மக்கள்

## அரசியலுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறார்கள்

### ஜனாதிபதி வேட்பாளர் சஜித்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மக்கள் அரசியலுக்காக மட்டுமே பயன்படுத்தப் படுகிறார்கள் என புதிய

15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# KANTAR LANKA

## பதவி வெற்றிடங்கள்

சந்தை ஆய்வு தொடர்பாக வடக்கு (யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு) ஆகிய இடங்களுக்கான பதவிவெற்றிடம்.

**முழு நேரம்**

நேரடியாக வீடுகளிற்கு சென்று தரவுகளைச் சேகரிக்கும் திறமையுள்ளவர்கள் / அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**கவர்ச்சிகரமான கொடுப்பனவு**

விண்ணப்பதாரிகள் கீழ்வரும் முகவரி / E-mail முகவரிக்கு விண்ணப்பத்தினை அனுப்பவும்.
மேலதிக விபரங்களுக்கு கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொள்ளவும்.

randima.jayaneththi@kantar.com
Santhirapalan.Nimalesvaran@kantar.com

**வடமாகாணம்**
**கள நிறைவேற்றதிகாரி இல. 2A, அம்மன் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல :**
**077 358 6600 / 011 523 5785 / 077 615 6566**

(C-8185)

# கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

**கல்வி வளர்ச்சி அறக்கட்டளை கிளிநொச்சி**

கிளிநொச்சியில் இயங்கிவரும் வலிந்துதவும் சமூக அமைப்பான எமது நிறுவனத்திற்கு கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகிறது.

## தகைமைகள்

- HNDA பட்டம் பெற்றவராக இருத்தல் அல்லது க.பொ.த உயர்தரத்தில் வணிகப்பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்துள்ளதோடு, குறித்த பதவியில் மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி கிளிநொச்சி மாவட்டத்தை வதிவிடமாக கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேற்குறித்த தகைமைகள் கொண்ட விண்ணப்பதாரி சுயமாக தயாரித்த விண்ணப்பப் படிவங்களை 20.11.2019 க்கு முன்னர் நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்க முடியும்.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி**

கல்வி வளர்ச்சி அறக்கட்டளை,
இல.82A, கரடி போக்கு கிளிநொச்சி,
செயலாளர் கல்வி வளர்ச்சி அறக்கட்டளை.

(C-8177)

# வாடகைக்கு

கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள 554A எனும் இலக்கத்தை உடைய கடை வாடகைக்கு உண்டு.

நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
**077 854 9383**

(279)

# ON CALL சேவை

உங்கள் வீட்டிற்கு தேவையான பொருட்களை எங்களுக்கு அழைத்து பட்டியல் படுத்துங்கள் சில மணி நிமிடத்திற்குள் வீட்டிற்கு பொருட்களை கொண்டு வந்து சேர்க்க நாங்கள் தயாராக உள்ளோம். பலசரக்குப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் சமையல் பொருட்கள் போன்றவற்றை உங்கள் வீட்டு வாசலில் தர தயாராக உள்ளோம்.

உடனே அழையுங்கள் **077 886 8514** (279)

# மணமகன் தேவை

யாழ் இந்து குடும்பத்தைச் சேர்ந்த 1982 இல் பிறந்த A/L படித்த ஏழு செவ்வாய் (வியாழன் உடன் குரு சேர்ந்து இருப்பதனால் குற்றம் நீங்கலாக) மணமகளுக்கு மணமகன் தேவை. எதிர்பார்ப்பு அரச உத்தியோகம் விரும்பத்தக்கது.

**T.P : 076 565 5283** (C-8179)

# தவறிவிட்டது

இணுவில் தெற்கு இணுவில் எனும் முகவரியை உடைய ராஜராஜேஸ்வரன் இந்திரஜித் (702690471V) ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், அலுவலக அடையாள அட்டை வாகனவரி காப்புறுதிப்பத்திரம் என்பன மல்லாகம் நீதிமன்றத்திற்கும் கே.கே.எஸ் வீதி, இணுவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழுள்ள முகவரியில் ஒப்படைக்கவும் (சன்மானம் வழங்கப்படும்.) **ரா.இந்திரஜித்**
**பரராஜ சேகரப்பிள்ளையார் கோவிலடி.**
(917) **இணுவில் தெற்கு. 077 630 1144**




# சபரிமலை யாத்திரைக்கான மாலை அணியும் நிகழ்வு

சடகோப ராமானுஜ ஐயப்ப பக்த திருவாபரண குழுவின் ஏற்பாட்டில் சபரிமலை யாத்திரைக்கான மாலை அணியும் நிகழ்வு 17.11.2019 (ஞாயிறு) காலை 8.00 மணியளவில் யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள "அரசடி விநாயகர் தேவஸ்தானத்தில்" நடைபெறும். இதில் கன்னிச் சாமிகளுக்கு (முதல் தடவையாக மாலை அணியும் சாமிகள்)

- கறுப்பு நிற வேட்டி சால்வை
- உருத்திராட்சம், துளசிமாலை என்பன இலவசமாக வழங்கப்படுவதுடன் குரு தட்சணையாக 1 ரூபாய் மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும். மூன்று வேளை உணவும் தங்குமிட வசதியும் இலவசமாக செய்து தரப்படும். சபரிமலை யாத்திரை செல்வதற்கான் பொறுப்பு அவர்களையே சாரும் யாழ்ப்பாணத்தில் இருமுடி கட்டி விரதத்தை முடிப்பவர்களுக்கு அதற்கான ஒழுங்குகள் இலவசமாக செய்து தரப்படும்.

மேற்குறிப்பிட்ட சேவையை பெற விரும்பும் சாமிகள் 15.11.2019 ற்கு முன்னர் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து முன்பதிவு செய்து கொள்ளவும். ஏனைய சாமிகளுக்கும் எவ்வித கட்டணமுமின்றி மாலை அணிவிக்கப்படும்.

**ந.சதீஸ்குமார் - இணைப்பாளர் / குருநாதர்**
**சடகோபராமானுஜ ஐயப்ப பக்த சபை திருவாபரண குழு.**
**யாழ்ப்பாணம்.** T.P .077 791 7753

(919)

# 31ம் நாள் வீட்டுக் கிருத்திய அழைப்பு



கடந்த 12.10.2019 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்தலைவி
அமரர்

## இராசகுரு கௌசலாதேவி

அவர்களின் 31ம் நாள் கிரியைகள் நாளை 11.11.2019 திங்கட்கிழமை காலை 04.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று அஸ்தி 6.00 மணி யளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து மதியம் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**மயிலியதனை, தொண்டைமானாறு.**
**இங்ஙனம் : குடும்பத்தினர்.**

(916)

# அயோத்தியில் இராமர் கோயில் கட்ட முடியும்

## உச்ச நீதிமன்றம் நேற்று பரபரப்பு தீர்ப்பு

(டில்லி)

அயோத்தியில் பாபர் மசூதி, வெற்றிடத்தில் கட்டப்படவில்லை என்றும், பாபர் மசூதியின் அடித்தளத்தில் இருக்கும் அமைப்பு இஸ்லாமிய முறைப்படி கட்டப்படவில்லை எனவும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தனது தீர்ப்பில் சுட்டிக்கட்டினார்.

அயோத்தியில் சர்ச்சைக்குரிய 2.77 ஏக்கர் நிலம் யாருக்குச் சொந்தம் என்ற வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த நிலையில் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையிலான அமர்வு நேற்றுச் சனிக்கிழமை தீர்ப்பு வழங்கியது.

ரஞ்சன் கோகாயின் தீர்ப்பின் படி, பாபர் மசூதி மிர்பாகியால் கட்டப்பட்டது என்றும், இறையியல் விவகாரங்களில் நீதிமன்றம் தலையிடுவது சரியானதல்ல எனவும் தெரிவித்தார்.

அத்துடன், ஒரு பிரிவினரின் நம்பிக்கையை மறு பிரிவினர் மறுக்க முடியாது. மசூதியில் 1949 ஆம் ஆண்டில் சிலைகள் வைக்கப்பட்டன.

மதச்சார்பின்மையே அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படை. அதன்படியே உச்சநீதிமன்றம் அமைக்கப்பட்டது என்றும் கூறினார்.

தொல்லியல் துறை ஆதாரங்களைப் புறக்கணிக்க முடியாது எனத் தெரிவித்த அவர், தொல்லியல் துறை ஆதாரங்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவையாக காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

அயோத்தியில் காலியிடத்தில் பாபர் மசூதி கட்டப்படவில்லை. பாபர் மசூதியின் அடித்தளத்தில் இருக்கும் அமைப்பு இஸ்லாமிய முறைப்படி கட்டப்படவில்லை.

1857 ஆம் ஆண்டிற்கு முன் வரை இந்துக்கள் சர்ச்சைக்குரிய கட்டடத்தில் வழிபடத் தடையில்லை. 1857 ஆம் ஆண்டு கட்டடத்தின் உட்பகுதிக்கும் வெளிப் பகுதிக்கும் இடையே தடுப்புகள் உருவாக்கப்பட்டன.

பாபர் மசூதி இருந்த இடம் முழுக்க முழுக்க தங்கள் இடம் என இஸ்லாமிய அமைப்புக்கள் நிரூபிக்கவில்லை. 1992 ஆம் ஆண்டு பாபர் மசூதி இடிக்கப்பட்டது. உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை மீறிய செயல். எனவே இஸ்லாமியர்களுக்கு மாற்று நிலம் வழங்க வேண்டும்.

ஒரு பிரிவினரின் நம்பிக்கையை மறு பிரிவினர் மறுக்க முடியாது. மசூதியில் 1949 ஆம் ஆண்டில் சிலைகள் வைக்கப்பட்டன.

அயோத்திதான் இராமர் பிறந்த இடம் என்று இந்துக்கள் கருதுகிறார்கள். அதை மறுக்க முடியாது: அதே இடத்தை இஸ்லாமியர்கள் பாபர் மசூதி என்று அழைக்கிறார்கள். ஆவணங்களின் படி சர்ச்சைக்குரிய நிலம் அரசுக்குச் சொந்தமானது.

மத நம்பிக்கை ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை உரிமை. பாபர் மசூதி கட்டப்படுவதற்கு முன் அந்த இடம் இஸ்லாம் முறைப்படி இல்லை என நீதிபதி தனது தீர்ப்பில் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)



# ஐ.தே.க.குண்டை வெடிக்கச்செய்து விட்டு எம்மீது பழியைப்போட சதிமுயற்சி!

## எரானின் கடிதம் குறித்து கம்மன்பில காட்டம்

(பொலநறுவை)

ஐக்கிய தேசியக் கட்சி குண்டொன்றை வெடிக்கச்செய்துவிட்டு, அந்தப் பழியை பொதுஜன பெரமுனவின் மீது சுமத்துவதற்கு சதி நடவடிக்கையில் இறங்கியுள்ளதா? என்ற நியாயமான சந்தேகமொன்று எழுந்துள்ளதாக பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில எம்.பி.தெரிவித்தார்.

பொலநறுவையில் நேற்று முன்தினம் ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த 6 ஆம் திகதி அமைச்சர் எரான் விக்கிரமரத்ன தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அக்கடிதம் அவரின் தாய் மொழியான ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

அந்தக் கடிதத்தில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் அடுத்த வாரத்தில் குண்டொன்றை வெடிக்கச் செய்ய திட்டமிட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் தனக்கு நம்பகமான தகவல் கிடைத்ததாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். இதனால், உடனடியாக தேசிய பாதுகாப்புச் சபையைக் கூட்டுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அத்தகவல்களில் கூறப்பட்டிருந்ததாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

குண்டு வெடிப்பு தொடர்பான விடயம் என்பதனால், அமைச்சர் எரான் அந்த கடிதத்தை முதலில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அல்ல, பொலிஸ்மா அதிபருக்கே எழுதியிருக்க வேண்டும் எனவும் கம்மன்பில மேலும் தெரிவித்தார். (இ-7)

# முகநூல் களியாட்டத்தில் ஈடுபட்ட 9 யுவதிகள் உட்பட 30பேர் கைது

## கஞ்சா, ஹசீஸ் போதைப்பொருட்களும் மீட்பு

(மீகொட)

மீகொட கம்பேயாஹேன பகுதியில் அமைந்துள்ள ஹோட்டலொன்றில் இடம்பெற்ற முகநூல் களியாட்ட நிகழ்வில் கலந்து கொண்ட 9 யுவதிகள் உள்ளிட்ட 30 பேர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் போதைப்பொருள் பாவனையுடன் இடம்பெறும் களியாட்ட நிகழ்வு பற்றி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில 9 யுவதிகளும் 21 இளைஞர்களும் உள்ளடங்குகின்றனர். இவர்களிடமிருந்து கேரளக் கஞ்சா, ஹசீஸ் போதைப்பொருள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் அனைவரும் போதைப்பொருள் பாவித்திருந்ததுடன், அவர்களில் ஏழு பேரிடமிருந்து 27 கிராம் கஞ்சாவும் ஒருவரிடமிருந்து 200 மில்லி கிராம் ஹசீஸ் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த இளைஞர், யுவதிகள் 18 தொடக்கம் 25 வயதுடையவர்கள் என விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. அதேவேளை, சந்தேக நபர்களை ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மீகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# வாக்காளர் அட்டையின்றியும் வாக்களிக்கலாம்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)


ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக வாக்காளர் பட்டியலில் தமது பெயர் உள்ளடக்கப்பட்டிருக்கும் அனைத்து வாக்காளர்களும் உத்தியோகபூர்வ தங்களது வாக்காளர் அட்டை இன்றியும் வாக்களிக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இதனைத் தெரிவித்தார்.

"வாக்களிப்பின் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டையை சமர்ப்பித்து வாக்களிக்க வேண்டும் என்றும், ஜனாதிபதி தேர்தலின் உத்தியோகபூர்வ முதலாவது பெறுபேற்றை 17 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் வெளியிடக் கூடியதாக இருக்கும்" எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)




# ஆண்களுக்கான உலகக்கிண்ண ஹொக்கி தொடர் இந்தியாவில்



2023ஆம் ஆண்டுக்கான ஆண்களுக்கான உலகக் கிண்ண ஹொக்கி தொடர் இந்தியாவில் நடைபெறவுள்ளது.

சர்வதேச ஹொக்கி சம்மேளனம் இது குறித்த அறிவித்தலை வெளியிட்டுள்ளது.இதற்கமைய எதிர்வரும் 2023ஆம் ஆண்டு ஜனவரி 13ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை ஆண்டுக்கான உலகக் கிண்ண ஹொக்கி தொடர் இந்தியாவில் நடைபெறவுள்ளது.

இதேவேளை மகளிருக்கான உலகக் கிண்ணத் தொடரை 2022ஆம் ஆண்டு ஸ்பெய்ன் மற்றும் நெதர்லாந்து நாடுகள் இணைந்து நடத்த உள்ளன.இந்தத் தொடர் ஜுலை முதலாம் முதல் 22ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாறவேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்கு உண்டு

கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள் (628)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.



# பதவி வெற்றிடம்

## பராமரிப்பாளர்கள்

### தகைமைகள்

1.க.பொ.த சாதாரண தரத்திற்கு குறையாத கல்வித்தகைமை

2.அரச பதவிகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற அதிபர், ஆசிரியர்கள், ஏனைய அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பராமரிப்புத்துறையில் அனுபவம் மிக்கவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பித்தல் விரும்பத்தக்கது.

3.வயதெல்லை 25 க்கு குறையாமல் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4.விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும் இல்லக்குழந்தைகளை அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து சைவநெறி ஒழுக்கத்திற்கு அமைவாக வழிப்படுத்தும் ஆற்றல்,தியாக சிந்தனை,சமூக அர்ப்பணிப்பு மிக்க உணர்வோடு இருத்தல் வேண்டும்.

## முச்சக்கரவண்டி சாரதி(பெண்)

### தகைமைகள்

1.இல்ல நடைமுறைகளுக்கு அமைவாக இல்லத்தில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய நல்ல தேக ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

2.வயதெல்லை 30-45

3.க.பொ.த சாதாரண தரத்திற்கு குறையாத கல்வித்தகைமை.

## சாரதி-ஆண்

### தகைமைகள்

1.இல்ல நடைமுறைகளுக்கு அமைவாக இல்லத்தில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய நல்ல தேக ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

2.வயதெல்லை 40-55

3.க.பொ.த சாதாரண தரத்திற்கு குறையாத கல்வித்தகைமை.

## குறிப்பு


- இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்ற வேண்டும்.
- உணவு,தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

25/11/2019ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்/நேரிலும் சமுகமளித்து விண்ணப்பிக்க முடியும்.

தலைவர்,மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,
ஜெயந்தி நகர்,கிளிநொச்சி
0214923118

(C-8183)


# ஸ்மித்தின் ஆட்டம் வியக்க வைக்கின்றது-சொகைப் அக்தர்



நுட்பமும் ஸ்டைலும் இல்லாமல் விளையாடும் அவுஸ்ரேலியக் கிரிக்கெட் அணியின் ஸ்டீவ் ஸ்மித், ஒரு தனி ரகம் என பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அக்தர் கூறியுள்ளார்.

சமீபத்தில் வெளியிட்டுள்ள யூ டியூப் காணொளியில் இந்த விடயத்தினை அவர் குறிப்பிட்டுள்ளார். இதில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

'ஸ்டீவ் ஸ்மித் இப்படி துடுப்பெடுத்தாடுவது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஸ்டீவ் ஸ்மித்திடம் நுட்பம் இல்லை, ஸ்டைலும் இல்லை. ஆனாலும் அவர் சிறப்பாகத் திகழ்கிறார்.

அவர் எப்படி சிறப்பாக துடுப்பெடுத்தாட முடிகிறது என்பது எனக்குத் தெரியவில்லை. என் காலத்தில் அவர் விளையாடியிருந்தால் நிச்சயம் என் பந்தில் காயமடைந்திருப்பார். அவரைக் காயப்படுத்த நான் முயற்சி செய்திருப்பேன்.

ஆனால் அவர் விளையாடுவதைப் பார்த்தால் காயப்படுத்துவதும் முடியாத காரியம் என்று தெரிகிறது. மிக நன்றாக விளையாடுகிறார், இப்படி விளையாடுவதில் இவர் ஒரு தனி ரகம்' என கூறினார்.

பந்தை சேதப்படுத்திய விவகாரத்திற்கு பிறகு ஓராண்டு தடையிலிருந்து மீண்டு வந்த ஸ்டீவ் ஸ்மித், தற்போது களத்தில் ருத்ரதாண்டவம் ஆடிவருகிறார்.

நடைபெற்று முடிந்த ஆஷஸ் தொடரில் ஓட்டங்களை அள்ளிக்குவித்து பல சாதனைகளை பதிவு செய்த ஸ்மித், தற்போது நடைபெற்ற பாகிஸ்தான் அணிக்கெதிரான ரி-20 தொடரிலும் அபாரமாக துடுப்பெடுத்தாடினார்.

# தடுமாறும் ரிசாப் பன்டிற்கு ஜாம்பவான் சங்காவின் அறிவுரை




இந்திய வீரர் ரிஷப் பந்த் துடுப்பாட்டம் மட்டுமின்றி தற்போது விக்கெட் கீப்பிங்கிலும் தொடர்ந்து சொதப்பி வரும் நிலையில் இலங்கை ஜாம்பவான் சங்கக்காரா அறிவுரை வழங்கியுள்ளார்.

உலகக் கிண்ணத்தை தொடர்ந்து டோனி ஓய்வெடுத்து வரும் நிலையில், ரிஷப் பந்த் அவரின் இடத்தை பிடித்துள்ளார். இளம் வீரரான ரிஷப் பந்த் அந்த இடத்தை தக்க வைத்துக்கொள்வார் என அனைவரும் எதிர்பார்த்தனர்.

இந்நிலையில், மேற்கிந்திய தீவுகள் மற்றும் தென் ஆபிரிக்கா அணிகளுக்கு எதிரான தொடரில் துடுப்பாட்டத்தில் சொதப்பி வந்த ரிஷப், தற்போது வங்கதேச அணிக்கு எதிராக நடைபெற்று வரும் தொடரில் விக்கெட் கீப்பிங்கிலும் சொதப்பி வருகிறார்.

இதனால், அவர் மீதான விமர்சனங்கள் தொடர்ந்து அதிகரித்துள்ளது. இந்நிலையில் இலங்கை ஜாம்பவானும் தற்போது எம்சிசி கிரிக்கெட் கிளப்பின் முதல் பிரித்தானியர் அல்லாத தலைவராக பொறுப்பேற்றுள்ள குமார் சங்கக்காரா, பந்துக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.


சங்கக்காரா கூறியதாவது, விக்கெட் கீப்பராக ஸ்டம்புகளுக்குப் பின்னால் நேர்த்தியாக இருப்பது முக்கியம். அது அவருக்கு நம்பிக்கையைத் தரும், அணித் தலைவர் ரீவியூ கேட்பதில் உதவ தனது அழைப்புக்கு முன்னுரிமை அளிப்பார்.

விடயங்களை எளிமையாக வைத்திருப்பது மற்றும் அவரது பலவீனத்தைப் புரிந்துகொள்வது பந்துக்கு முக்கியம். விக்கெட் கீப்பராக உத்தியுடன் திட்டமிட்டு செயற்பட வேண்டும். ஏனென்றால் அவரைப் பொறுத்தவரை இப்போது நிலைமையை எளிமையாக வைத்திருக்க வேண்டும், அழுத்தத்தில் இருக்கக்கூடாது.

துடுப்பாட்டம் குறித்து அவருடன் யாராவது பேச வேண்டியது முக்கியம், பந்தை அழுத்தத்திலிருந்து விலக்கி சுதந்திரமாக விளையாட விட வேண்டும் என சங்கக்காரா அறிவுரை வழங்கியுள்ளார்.

# நாட்டிற்கே ஒளிதரும் மின்சார சபையை இருளில் இருந்து உடன் மீட்க வேண்டும்

## ஜனாதிபதி வலியுறுத்து



(கொழும்பு)

நாட்டிற்கே ஒளிதரும் மின்சார சபையை இருளில் இருந்து மீட்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தினார்.

இலங்கை மின்சார சபையின் நட்டம் இந்த ஆண்டு 89 பில்லியன் ரூபாவாகுமென ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற "விதுலி புராணய" நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மின்சார சபையில் ஏற்பட்டிருக்கும் இந்தப் பாரிய நெருக்கடி குறித்த பொறுப்பிலிருந்து பொது மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவிற்கு விலகிக்கொள்ள முடியாதென்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை நீர்வழங்கல், பெற்றோலியம் மற்றும் இலங்கை விமான சேவை ஆகிய நிறுவனங்களிலும் இடம்பெறும் முறைகேடுகள் நாட்டை பாரிய பொருளாதார வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி அரசாங்கம் என்ற வகையில் தீர்மானங்களை மேற்கொள்கின்றபோது இந்த நிறுவனங்களிலிருந்து நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார். (இ-7)

## மரண அறிவித்தல்

### அமரர் கனகசூந்தரம் வில்வமங்களம்



நாவலடி, மயிலிட்டிக்கரையைப் பிறப்பிடமாகவும் சந்தை வீதி, காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் வில்வமங்களம் 06.11.2019 அன்று காலமானார்.

அன்னார் விமலராணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற விமலராஜ் மற்றும் விமலாஜினி (பிரான்ஸ்), காலஞ்சென்ற விமலராகினி மற்றும் விமலவேணி (அபிவிருத்தி உத்தியோகத்தர், செட்டிகுளம் பிரதேச செயலகம்), விமலாணி ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயகுமாரின் (பிரான்ஸ்) மாமனாரும் அனோறிஸின் (பிரான்ஸ்) பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10.11.2019 இன்று ஞாயிற்றுக்கிழமை 8.00 மணிக்கு காங்கேசன்துறை புதுவீட்டு ஒழுங்கையில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று மயிலிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


சந்தைவீதி,
காங்கேசன்துறை.

(287)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### அமரர் சவரிமுத்து ஜோசேப் புவிராஜசிங்கம் (பவா)



கரணவாய் கிழக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து ஜோசேப் புவிராஜசிங்கம் (பவா) கடந்த 08.11.2019 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து ஞானப்பு அம்மா தம்பதியரின் அன்பு மகனும், வேலுப்பிள்ளை திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமனும், காலஞ்சென்ற கார்மேல் கொற்றி பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், பிறிடா(கரவெட்டி), சீலன் (சுவிஸ்), ஞானம் (கனடா), சக்தி (லண்டன்), லோஜினி (கொழும்பு), ஜெனிற்றா (கரவெட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தசநாயகம், பேபி(சுவிஸ்), துஷியந்தி(கனடா), பிறேமினி (லண்டன்), ஏனஸ்ட் (நியுகல்வள ஹாட்வெயர்-கொழும்பு), முரளிதரன் (கார்மேல் பல்பொருள் வாணிபம்-கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிரோஷ் (PNB-Rate உரிமையாளர்), ஜென்சி (நெல்லியடி முன்பள்ளி ஆசிரியர்), ஒஸ்மன்(கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ஆசிரியர்), அனோஜா, கெவின், கார்மேல் (சுவிஸ்), கலிஸ்ரா, அனிஸ்ரா, அன்ரனி(கனடா), விஜய், துஷானி(லண்டன்), அரோன், தினோஜ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற தோமஸ் புவிராஜசிங்கத்தின் அன்புத்தம்பியும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் (11.11.2019) திங்கட்கிழமை நாளை காலை 11.00 மணியளவில் கரவை தேவமாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

பின்னர் நல்லடக்கத்திற்காக கரவை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிங்கமஹால்
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

(சி-8176)

தகவல்:-
குடும்பத்தினர்
077 176 2824

## இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
உத்தரம், அத்தம்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | ராகு |
| | | | |
| | | | |
| சனி, குரு, கேது | சுக் | சூரி, புத | செவ் |

**10.11.2019**

ஐப்பசி 24, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

திரயோதசி பிற்பகல் 5.33 மணிவரை

ரேவதி முன்னிரவு 6.44 மணிவரை

சுபநேரம் 9.05-10.35 மணிவரை

இராகுகாலம் 4.35-6.05 மணிவரை

நபிகள் நாயகம் பிறந்த தினம்

வளவன்

**மீனம்** — மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், ஆலய வழிபாடு ஆனந்தம் தரும், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**மேடம்** — திடீர் பயணங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், ரோக பயமுண்டு.

**இடபம்** — பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**மிதுனம்** — மன நிறைவு கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கும்பம்** — சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், செல்வநிலை உயரும் நாள், செல்வாக்கு மேலோங்கும் நாள், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கடகம்** — பிற இனத்தவர்களால் பெருமைகள் வந்து சேரலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தந்தை வழி உறவில் அனுகூலமுண்டு.

**மகரம்** — உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இடம்பெறலாம், போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், உறவினர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர்.

**சிம்மம்** — தொழில் ரீதியாக சில குழப்பங்கள் தோன்றி மறையும், உடல்நலனில் அதிக கவனம் செலுத்த வேண்டிய நாள், கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** — கூட்டு முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், வாகன சுகமுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், கற்பனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்** — விருந்தினர் வருகையுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**துலாம்** — நீண்டநாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கன்னி** — கேளிக்கை கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

## தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை

# கோத்தாவால் முடிந்தது சஜித்தால் ஏன் முடியவில்லை?

## அங்கஜன் கேள்வி; கூட்டமைப்பின் மீதும் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

கோத்தபாய ராஜபக்ஷவால் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து யாழில் வாக்குறுதியை வழங்க முடியுமென்றால் ஏன் சஜித் பிரேமதஸவால் முடியாமல் போனது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கேள்வி எழுப்பினார்.

கடந்த மாதம் ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்காக யாழ்ப்பாணம் வருகை தந்த மொட்டு சின்னத்தில் போட்டியிடும் கோத்தபாய ராஜபக்ஷ மக்கள் மத்தியில் தடுப்பில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் 274 பேரையும் குறுகியகாலப் புனர்வாழ்வுக்குட்படுத்தி விடுதலை செய்வேன் என உறுதியளித்திருந்தார்.

அது மட்டுமல்லாமல் 13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தி வடமாகாணத்தை வளமான மாகாணமாக மாற்றுவேன் எனவும் கூறியிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்த ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாஸ தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் எந்தவிதமான வாக்குறுதிகளையும் வெளியிடவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சஜித் பிரேமதாஸவுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியுள்ள நிலையில் ஏன் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து வாக்குறுதியை வழங்க முடியாமல் போனது.



இரு ஜனாதிபதி வேட்பாளர்களும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். அதில் ஒருவருக்கு முடியும் என்றால் ஏன் மற்றவருக்கு முடியாது என தமிழ் மக்கள் நன்கு உணர வேண்டும்.

தமிழ் மக்களின் தீர்வு விடயங்களில் சிங்கள மக்கள் குழும்பாத வகையில் திருப்திப்படுத்தி தீர்வை முன்வைக்கக்கூடிய ஆளுமை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டணிக்கே உள்ளது என்பதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் நானும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறேன்.

நல்லாட்சி அரசாங்கத்தை தாங்கிப்பிடிக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரும் நல்லாட்சிக்கு பக்கபலமாக இருக்கின்ற நிலையில் யாழ்.மாவட்டத்தில் சமூக விரோதச் செயற்பாடுகளும் போதைவஸ்து கலாசாரங்களும் அதிகளவில் தலைதூக்கியுள்ளன.

சட்டம் ஒழுங்கு அமைச்சு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திடம் காணப்படும் நிலையில் யாழ்.மாவட்டத்தில் ரவுடிக் குழுக்களும் போதைப்பொருள் வியாபாரிகளின் ஆதிக்கமும் தலைதூக்கியுள்ளன.

இரவு நேரங்களில் வீதியில் செல்வோர் அச்சத்துடன் பயணிக்கும் நிலையில் தனிமையில் வாழ்வோர் திருட்டுக்காகக் கொலை செய்யப்படுவதும் யாழில் அதிகரித்துள்ளது.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத்தாருங்கள் என வாக்களித்த மக்கள் கேட்டால் சலுகைகளுக்காக அரசாங்கத்திடம் கையேந்த முடியாது. அவ்வாறு கையேந்தினால் தமது உரிமைப் போராட்டம் மறைக்கப்பட்டு விடும் என தமிழ்க் கூட்டமைப்பினர் தெரிவிக்கின்றனர்.

அப்படியானால் பாராளுமன்ற உறுப்பினருக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் தீர்வையற்ற வாகனப் பத்திரங்கள், அரசாங்க வீடு மற் றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் களை இவர்களால் நிராகரிக்க முடியுமா?

இந்நிலையில் யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துவரும் சட்ட விரோதச் சௌற்பாடுகளுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரும் பொறுப்பாளிகள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)-

## பழைய பானையில் புதிய கஞ்சி சஜித்

# தமிழ் மக்களை மீண்டும் ஏமாற்றக் கூட்டமைப்பு தயார்

## டக்ளஸ் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து யாழ்.மக்களை மீண்டும் ஏமாற்றத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தயாராகி விட்டதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கொழும்புத்துறைப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரித்து தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஆதரவில் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தமிழ் மக்கள் திருப்தியடையும் வகையில் எதனையும் செய்ததில்லை.

அவ்வாறான நிலையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த சஜித் பிரேமதாஸ தற்போது புதிய ஜனநாய்க முன்னணியில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவது பழைய பானையில் புதிய கஞ்சியை ஊற்றுவது போலாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராகச் செயற்படும் சஜித் பௌத்த கொள்கைகளை முதன்மைப்படுத்துபவராகவே செயற்பட்டு வருகிறார்.

அதுமட்டுமல்லாது வடக்குக் கிழக்கில் தொல்பொருள் திணைக்களத்தால் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் குறித்த ஜனாதிபதி வேட்பாளரே பொறுப்பேற்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித்தை ஆதரிக்கப் போவதாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் ஒருமித்து அறிக்கை வெளியிட்ட நிலையில் நல்லாட்சி அரசிற்கு ஆதரவை வழங்கி தமிழ் மக்களுக்கு எதைப் பெற்றுக் கொடுத்தார்கள்.

சஜித் ஜனாதிபதியானதும் தானே பிரதமர் என மார் தட்டும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலப்பகுதியில் தமிழ் மக்கள் ஏற்கக் கூடிய தீர்வை முன்வைக்கவில்லை.

புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்படும், தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என வீர வசனம் பேசியவர்கள்



தற்போது சஜித் ஆட்சியில் தீர்வு கிடைக்கும் என்கிறார்கள்.

யார் ஆட்சிக்கு வந்தாலும் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களின் ஆதரவை தம்வசம் வைத்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைப் பிரதிநிதித்துவப்படுத் துபவர்களால் மட்டுமே தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்க முடியும்.

இதனை நன்கு தெரிந்தும் தெரியாதவர்கள் போல் பாசாங்கு செய்யும் தமிழ்க் கூட்டமைப்பினர் மீண்டும் உணர்ச்சிப் பேச்சுக்களால் தமிழ் மக்களை முட்டாள்களாக்கப் பார்க்கின்றனர்.

எனவே தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தலைமையாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லாத நிலையில் தமிழ் மக்களின் எதிர்காலத்திற்காக நான் கொடுக்கும் வாக்குறுதியை தாரக மந்தி ரமாகச் செயற்படுத்துவேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தின் பண்பாட்டுப் பெருவிழா கடந்த வியாழக்கிழமை கரணவாய் மூத்த விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் பிரதேச செயலர் ஈ.தயாரூபன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறந்த நாடகக் கலைஞர்கள், கிராம உத்தியோகத்தர்கள் ஐவருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

(படங்கள்:-மகாலிங்கம்)

# ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பது எப்படி? யாழில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்கொன்றை அளிப்பது எப்படி? என்பது குறித்த கலந்துரையாடல் இன்று 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லூர் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் (நல்லூர் கமநல சேவை நிலையம் அருகாமை) இடம்பெறும். இதில் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்-பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் கருத்துரை வழங்குவார். (இ-5)



வண்ணார்பண்ணை பாக்கியம் பாலர் பாடசாலையின் கலை விழா கடந்த புதன்கிழமை யாழ்ப்பாண பொது நூலக கேட்போர் கூடத்தில் பாலர் பாடசாலை இயக்குநர் லதா கந்தையா தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்களாக கிருபா லேணர்ஸ் அதிபர் அ.கிருபாகரன், யாழ்.பொது நூலக நூலகர் திருமதி சு.சதாசிவம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காத்தான்குடியில் சாதாரண முஸ்லிம்கள் அனைவரும் சஹ்ரான் மீது கடும் கோபத்திலேயே இருந்தனர்

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி சாட்சியம்

(கொழும்பு)

நான் மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய போது மொஹம்மட் சஹ்ரானை அறிந்திருந்தேன். அப்போது அவர் ஒரு மத போதகராக அல்லது விமர்சகராகவே கருதப்பட்டார்.

எனினும் அப்போதும் கூட காத்தான்குடி பகுதியிலுள்ள அனைத்து சாதாரண முஸ்லிம்களும் சஹ்ரான் மீது கடும் கோபத்திலேயே இருந்தனர் என குருநாகல் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும், குண்டுத் தாக்குதல்கள் இடம் பெறும் போது கொழும்பு மத்திய பொலிஸ் வலயத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகவும் இருந்த உபாலி ஜயசிங்க ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு முன்னிலையில் சாட்சியமளித்தார்.

உலகளவில் இஸ்லாம் மதத்தில் பிரதான இரு பிரிவுகள் அடையாளப்படுத்தப்படுகின்றன. எனினும் காத்தான்குடியில் அப்போது சுமார் 27 முஸ்லிம் உப பிரிவுகள் இருந்தன. அதில் ஒன்றுக்கே சஹ்ரான் தலைவனாக இருந்தார்.



சஹ்ரானின் நடவடிக்கைகள் அல்லது நிலைப்பாடுகள் சாதாரண முஸ்லிம்களை பாதித்ததால் அவர்களிடையே மோதல்களும் ஏற்பட்டிருந்தன. அதன் பின்னணியிலேயே சாதாரண முஸ்லிம்கள் சஹ்ரான் மீது கடும் கோபத்தில் இருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உயிர்த்த ஞாயிறு தினம் இடம்பெற்ற தொடர் தற்கொலை தாக்குதல்கள்களை மையப்படுத்தி அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க கடந்த செப்டெம்பர் 21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் சாட்சி விசாரணைகள் நேற்று முன்தினம் ஐந்தாவது நாளாகவும் நடைபெற்றது.

இந்நிலையில் 4 ஆவது சாட்சியாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஜயசிங்க மேற்கண்டவாறு சாட்சியளித்தார். (இ-7)


### கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்-2019

எமது பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடலும், புதிய நிர்வாகத்தெரிவும் எதிர்வரும் 17.11.2019 (ஞாயிற்றுக்கிழமை) காலை 09.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் பாடசாலை முதல்வர் தலைமையில் நடைபெற உள்ளதால் அனைத்து பழைய மாணவர்களும் தவறாது சமூகம் தந்து பாடசாலையின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் தங்கள் ஆலோசனைகளை வழங்கியுதவுமாறு வேண்டுகிறோம். (C-8174)

தலைவர் /அதிபர்,
பழைய மாணவர் சங்கம்,
கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

### ஜெயக்குமார் திருமணசேவை

வெளிநாட்டில் உள்ள மணமகன் மணகளுக்கு படித்த பட்டதாரி மணமகள், மணமகன் தேவை.

உள்நாட்டில் உள்ள மணமகனுக்கும் மணமகளுக்கும் படித்த பட்டதாரி மணமகன், மணமகள் தேவை.

தொடர்புக்கு:
0094 767 250 144,
0094 777 456 837
077 900 7091, 076 116 2017
(912)

### கடை வாடகைக்கு

யாழ். கஸ்தூரியார் வீதியில் கடை வாடகைக்கு உண்டு. (C-8183)
தொடர்புக்கு: 077 993 8348

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா

இன்றைய தினம் பிறந்த நாளைக் கொண்டாடும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்து மக்கள் பணியாற்ற வாழ்த்துகின்றோம்.

Best Wishes



உழைக்கும்
தோழர்களின்
நண்பரானீர்
உன்னத
தலைவனாய்
உருவெடுத்தீர்
மக்கள் சேவையை
மனதில் கொண்டீர்
மகேசனாகவே
மிளிர்ந்து நின்றீர்
இணையில்லாத்
தலைவனே உம்மை
ஆண்டுகள் நீடூழி
வாழ்த்துகின்றோம்

(910)

வாழ்த்துவோர்:
யாழ்ப்பாண பல்கலைக்கழக
ஜனநாயக ஊழியர் சங்கம்.

### கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BA,அரசதொழில் Germany<br>எதிர்பார்ப்பு:படித்தபெண்(உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: B/10208 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 19 ½ உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: உள்நாடு<br>தொ.இ: G/10209 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2 கி.பா: 42 ¼<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: Swiss PR<br>எதிர்பார்ப்பு: படித்தபெண், ஆங்கில அறிவு விரும்பத்தக்கது<br>தொ.இ: B/10210 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 3 கி.பா: செவ் 8 இல்<br>தகைமை/தொழில்:Computer Engineer<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் (உள்நாடு, வெளிநாடு)<br>தொ.இ: G/10211 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: 16 ½<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L, France PR<br>எதிர்பார்ப்பு: உள்நாடு<br>தொ.இ: B/10213 | பிறப்பு: 1996 .இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா: 22 ¼ சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/10212 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>கி.பா: 8<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:B.E(Eng),சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: B.Sc பட்டதாரி,ஆசிரியர்<br>தொ.இ: B/10215 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா: செவ் 8 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BA Economics, Canada<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,Canada<br>தொ.இ: G/10214 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# இலங்கையிலும் நோட்டாவை அறிமுகப்படுத்த வேண்டும்

## நாடாளுமன்றில் சிவசக்தி ஆனந்தன் வலியுறுத்து



# சம்பிரதாயத்திற்குக்கூட அழைத்து பேசாதவர்களுக்கு தமிழ் மக்கள் ஏன் வாக்களிக்க வேண்டும் எனவும் கேள்வி

(கொழும்பு)

கோரிக்கைகளை முன்வைத்த தமிழ்க் கட்சிகளை சம்பிரதாயத்திற்குக் கூட அழைத்துப் பேசாத உங்களுக்கு தமிழ் மக்கள் ஏன் வாக்களிக்க வேண்டுமென அரசதரப்பு மற்றும் எதிர்க்கட்சியை நோக்கி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கேள்வியெழுப்பினார்.

அத்துடன், வாக்களிக்க விரும்பாதோர் பயன்படுத்தும் வாக்களிப்பு முறையான நோட்டாவை இலங்கையிலும் அறிமுகப்படுத்துமாறு தேர்தல்கள் ஆணையாளரிடம் அவர் கோரிக்கையும் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி வேட்பாளர்களிடம் தமிழ்க் கட்சிகள் முன்வைத்த 13 அம்சக் கோரிக்கைகள் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு, கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள், மதத் தலைவர்கள், சுயாதீன அமைப்புக்கள் இணைந்து 5 கட்சிகளால் முன்வைக்கப்பட்ட 13 அம்சக் கோரிக்கைகள் கடந்த 70 வருட காலம் தீர்க்கப்படாதிருக்கும் முக்கியமான அம்சங்களே. அவற்றில் அரசியல் தீர்வு தவிர்த்து ஏனையவை யுத்தத்திற்குப் பின்னரான நிலைமைகளாகவே உள்ளன. அதாவது, அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குதல், அபிவிருத்தி, வேலைவாய்ப்பு ஆகியன காணப்படுகின்றன. இவை தனிநாட்டுக்கான கோரிக்கைகளல்ல.

தமிழ் மக்களின் மீதான இனப் படுகொலை காரணமாக தீர்க்கப்படாதிருக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் வகையிலேயே 13 அம்சக் கோரிக்கைகளை வேட்பாளர்களுக்கு கையளிக்க நடவடிக்கையெடுத்தோம். ஆனால், பொதுஜன பெரமுன வேட்பாளர் வெளிப்படையாக நாங்கள் அவர்களைச் சந்திக்கத் தயாரில்லையெனக் கூறிவிட்டார். அதேபோன்று சஜித் பிரேமதாஸவும் ஒரு படி மேலே சென்று எந்த உடன்படிக்கையிலும் கைச்சாத்திடப் போவதில்லை. அவர்களைச் சந்திக்கவும் தயாரில்லையெனவும் கூறியுள்ளார்.

இவ்வாறான நிலைமையில் நீங்கள் தமிழ் மக்களின் வாக்குகளை எதிர்பார்த்துக்கொண்டு எமது கோரிக்கைகளை நிராகரித்துக்கொண்டு சம்பிரதாயப்படியாவது சந்திக்கத் தயாரில்லாத நேரத்தில், தமிழ் மக்கள் உங்களுக்கு எந்த அடிப்படையில் வாக்களிக்க வேண்டுமென்பது தமிழ் மக்களிடம் இருக்கும் கேள்விகளாக இருக்கின்றன.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வரக்கூடாது என்பதற்காக இறுதிக்கட்ட யுத்தத்தை வழிநடத்தி, தளபதியாக இருந்து ஒன்றரை இலட்சம் மக்கள் கொல்லப்பட்டு, பில்லியன் கணக்கான சொத்துக்களை அழித்த ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக இருந்த சரத் பொன்சேகாவுக்கு வாக்களிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்திருந்தது. 2015 ஆம் ஆண்டிலும் மீண்டும் மகிந்த ராஜபக்ஷ வந்துவிடக்கூடாது என மைத்திரிபால சிறிசேனவுக்கு தமிழ் மக்கள் வாக்களித்தனர். ஆனால், கடந்த 5 வருடங்களில் என்ன செய்தீர்கள்? உங்களால் அடிப்படை வசதிகள் கூட தீர்க்கப்படவில்லை. யுத்தம் முடிந்து 10 வருடங்கள் கடந்துள்ளன. இன்னும் மக்கள் தற்காலிக வீடுகளில் வாழ்கின்றனர். உருப்படியான வீட்டுத்திட்டமும் கிடையாது. வடக்கு, கிழக்கில் வேலைவாய்ப்புக்களை பெரும்பான்மை இனத்தவர்களுக்கே வழங்குகின்றீர்கள். இவற்றுக்கு நிரந்தரத் தீர்வைக் காண வேண்டும்.

கடந்த 10 வருடங்களில் இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களிலும் மகிந்த ராஜபக்ஷ வரக்கூடாது என்பதற்காகவே தமிழ் மக்கள் வாக்களித்தனர். ஆனால், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை. இன்று இரண்டு பெரும்பான்மை வேட்பாளர்களும் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக இனவாதம் பேசுகின்றனர். கோத்தபாய ராஜபக்ஷ நான்தான் யுத்தத்தை முடித்து வைத்தேன் எனும் போது மறுபக்கத்தில் சஜித்தின் மேடையில் சரத் பொன்சேகாவோ தானே யுத்தத்தை வென்றதாகக் கூறுகின்றார். யுத்தத்தில் அழிக்கப்பட்ட சொத்துக்களுக்கு இன்னும் நஷ்டஈடு வழங்கப்படவில்லை. நீங்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இணக்கிய விடயங்களையே நடைமுறைப்படுத்தப் போவதில்லையென்றால் எப்படி தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கப் போகின்றீர்கள்?

தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லமுடியாத நிலைமையிலேயே இருக்கின்றனர். இந்நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குப் பொறுப்புள்ளது. இவர்கள் இணங்கிய விடயங்களை எவ்வாறு செயற்படுத்தப் போகின்றார்கள் என்பதை ஆராய வேண்டும். இந்தப் பொறுப்பைச் செய்ய வேண்டும்.

இதேவேளை, தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் சிங்களத் தலைவர்களுக்கு வாக்களித்து எந்தத் தீர்வையும் பெற்றதில்லை. இதனால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை போன்று நோட்டா என்ற முறைமையையும் தேர்தல்கள் திணைக்களம் கொண்டுவர வேண்டிய தேவையுள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். சிங்கள மக்களுக்கு நீங்கள் உண்மையைக் கூறுங்கள். தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சினை என்பதைக் கூறுங்கள். இவ்வாறான நிலைமையில் நாங்கள் இவருக்கு வாக்களித்தால் தீர்வு கிடைக்குமென என்ன உத்தரவாதத்தை தமிழ் மக்களுக்கு வழங்குவது. இதனால் இங்கும் நோட்டா என்ற முறை இருக்குமாக இருந்தால் வடக்கு, கிழக்கில் 50 வீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் நிராகரிக்கின்றனர் என்பதைக் காட்டியிருப்பர். இதனால் எதிர்காலத்தில் இந்த நோட்டா முறைமையைக் கொண்டுவர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-299)

# இலத்திரனியல் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

நவீன இலத்திரனியல் யுகத்தில் இலத்திரனியல் அறிவை ஏற்படுத்தும் முகமாக யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியில் முழுநேர இரண்டு வருட கற்கை நெறி மாணவர்களை உள்வாங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இக்கற்கை நெறியில்,

01. அடிப்படை மின்னியல், இலத்திரனியல்.

02. கையடக்க தொலைபேசி தொழில்நுட்பம்,

03. ஆடினோ தொழில்நுட்பம்.

04. கணனி தொழில்நுட்பம்.

05. CCTV தொழில்நுட்பம்.

06. PLC தொழில்நுட்பம்.

07. LCD, LED DISTAL தொழில்நுட்பம் போன்ற பாடப் பரப்புக்கள் அடங்கியுள்ளன.

இப்பாட நெறிக்கான தகைமைகளாக க.பொ.த. (சா/த) இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், தமிழ் மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம். முடிவுத் திகதி 29.11.2019.

இப்பாடநெறி முற்றிலும் இலவசமானது மாத்திரமின்றி அரசாங்கத்தால் உதவித் தொகை மற்றும் பருவகாலச் சீட்டுக்களும் வழங்கப்படும் என பணிப்பாளர் எஸ்.முகுந்தன் அறிவித்துள்ளார். (இ)

# பிரதான நகராக தம்புள்ள விவசாயிகளை தொழில் முனைவராக மாற்றவும் திட்டம் - கோத்தபாய

(தம்புள்ள)

நாட்டிற்கு வெங்காயம் விநியோகிக்கும் பிரதான பிரதேசமாக தம்புள்ளவை மாற்றுவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன் விவசாயிகளை விவசாய பொருளாதாரத்துடன் மாத்திரம் நிறுத்திவிடாமல் ஒரு தொழில் முனைவோராக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தம்புள்ளயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். நெல் உள்ளிட்ட மற்றைய பயிர்களுக்கும் மற்றும் வெங்காயத்திற்கும் உத்தரவாத விலையைப் பெற்றுக் கொடுத்து விவசாயிகளை பொருளாதார ரீதியில் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

உள்நாட்டு விவசாயிகளின் பொருளாதாரம் தொடர்பாக எவ்வித கவலையும் இன்றி வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ததன் ஊடாக உள்நாட்டு விவசாயிகள் கைவிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார் மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 120 | 100 | 90 | 140 |
| உருளைக்கிழங்கு | 160 | 120 | 120 | 115 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 160 | 250 |
| தக்காளி | 160 | 120 | 120 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 120 | 90 | 80 |
| கோவா | 140 | 150 | 140 | 95 | 160 |
| கரட் | 200 | 200 | 280 | 200 | 280 |
| பூசணி | 60 | 80 | 70 | 70 | 100 |
| புடோல் | 100 | 100 | 80 | 70 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 280 | 240 | 280 | 200 | 320 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 120 | 150 | 120 |
| பாகற்காய் | 300 | 160 | 240 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 40 | 80 | 60 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 160 | 160 | 120 | 150 | 160 |
| லீக்ஸ் | 250 | 120 | 240 | 140 | 280 |
| பீற்றூட் | 140 | 100 | 140 | 70 | 160 |
| கறிமிளகாய் | 300 | 180 | 240 | 200 | 240 |
| முருங்கைக்காய் | 280 | 300 | 300 | 320 | 300 |
| போஞ்சி | 150 | 150 | 140 | 150 | 160 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 80 | 70 | 100 |
| கீரை - 1பிடி | 50 | 40 | 50 | 50 | 60 |
| தேசிக்காய் | 160 | 120 | 160 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 40 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 150 | — | 350 | 150 | 300 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 40 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 30 | 20 |
| ஈரப்பலா | 50 | 100 | 80 | 160 | 120 |

# ஷரியா பல்கலைக்கழகம் குருகுலமாக மாறி விட்டதா?

## ரில்வின் கேள்வி

(நாவலப்பிட்டிய)

ஷரியா பல்கலைக்கழகம் தற்போது பௌத்த குருகுலமாக மாறி விட்டதா? என்ற கேள்வி நாட்டில் எழுந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.



நாவலப்பிட்டி பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்கவுக்கு ஆதரவான பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் மட்டக்களப்பில் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லா நிர்மாணித்து வரும் ஷரியா பல்கலைக்கழகத்திற்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் கடுமையான போராட்டங்களை நடத்தி, முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார்.

எனினும், தற்போது அந்தப் போராட்டங்கள் நின்று போயுள்ளன. ஹிஸ்புல்லாவும் ரத்ன தேரரும் கோத்தபாய ராஜபக்ஷவின் ஒரே மேடையில் இருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கோத்தாவுக்கு 14 இலட்சம் வாக்குகளை சு.கவால் பெற்றுக் கொடுக்க முடியும்

## திலங்க திடம்



(பொரளை)

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் 14 இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்று பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.**

பொரளையில் அமைந்துள்ள அவருடைய இல்லத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்னும் சில தினங்களில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமது ஆட்சிக்கால கட்டத்தில் நாட்டிற்கு சிறந்த தலைமைத்துவத்தையே வழங்கியது.

அதன் பின்னணியிலேயே நாம் இந்த ஜனாதிபதி தேர்தலின் போது கோத்தபாய ராஜபக்ஷவிற்கு எமது முழுமையான ஆதரவை தெரிவிக்கின்றோம்.

ஏனெனில், வடக்கில் பயங்கரவாதத்திற்கு துணை போன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் பயங்கரவாதத் தாக்குதலை மேற்கொண்ட சஹ்ரானுடன் தொடர்புபட்ட ரிசாத் பதியுதின் போன்றோர் சஜித் பிரேமதாஸவின் பக்கம் உள்ளனர். இந்நிலையில் அவரால் 50 வீத வாக்குகளை பெற்று வெற்றி பெற முடியாது.

சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க மகிந்த குடும்பத்தினருடனான தனிப்பட்ட கோப தாபங்களுக்காக அவருக்கு ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட பதவிகளை பெற்றுக்கொடுத்த சுதந்திரக் கட்சியின் எதிர்காலத்தைக் கவனத்தில் கொள்ளாமல் கட்சியிலிருந்து விலகி சென்றுள்ளார்.

இந் நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் மாத்திரம் சுமார் 14 இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற்றுக் கொள்ள முடியும். அந்த வகையில் எமது14 இலட்சம் வாக்குகள் கோத்தபாய ராஜபக்ஷவின் வெற்றிக்கு பெரும் பக்கபலமாக இருக்கும்.

நாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுமாறும் ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் கேட்டிருந்தோம் ஆயினும் அவர் ஆட்சிக்கு வந்தபோது மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று மக்களுக்கு வாக்களித்தமையை கருத்தில் கொண்டு அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டார்.

அதனையடுத்தே நாம் பொதுஜன பெரமுனவின் வேட்பாளருக்கு ஆதரவளிக்க தீர்மானித்தோம்.


கோத்தபாய ராஜபக்ஷவுடன் இணைந்து பலம் வாய்ந்த அரசாங்கத்தை அமைப்பதே எமது நோக்கமாகும். அந்த வகையில் ஜனாதிபதி மைத்திரி கோத்தபாயவின் அரசாங்கத்தில் உயர் பதவியொன்றை வகிப்பார் என எதிர்பார்க்கின்றோம். அதுவே எம்முடைய விருப்பமாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு சஜித்பிரேமதாஸ தேர்தலில் தோல்வி அடைவார் என்று நன்கு தெரியும் .

ஆகவே தான் , எம்.சி.சி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு அதீத ஆர்வம் காட்டுகின்றார். ஏனெனில் அவர் அமெரிக்காவிற்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்.

அதற்காகவே ஜனாதிபதி எவ்வளவோ எடுத்துக் கூறியும் அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஐ.தே.க.வே சஜித்தின் தோல்வியை ஏற்றுக்கொண்டுள்ளதுடன், கோத்தபாய வெற்றியை உறுதிப்படுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்புடன் உலக மீனவர் தினம்





(மாத்தறை)

23 ஆவது உலக மீனவர் தினம் மாத்தறையில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் ஹேரமன் குமார தலைமையில் மாத்தறை மீனவ அமைப்பின் ஏற்ப்பாட்டில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்.

ஜனநாயக வாய்ப்பிற்குள் மீனவ உரிமைகளை வென்று சமாதானம் மற்றும் தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவோம் எனும் தொனிப் பொருளில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வுக்குப் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் அரசியல் பிரமுகர்கள் வட கிழக்கைச் சேர்ந்த மீனவர் அமைப்புக்கள் சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# “விவாதத்தை எதிர்கொள்வதற்கு கோத்தாவிற்கு தைரியமில்லை” மகிந்தவிற்கு சஜித் சவால் கடிதம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், வேட்பாளர் சஜித் பிரேமதாஸ சில விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தலைக் கோரி எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஸவிற்கு சவால் விடுக்கும் வகையில், கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில், பிள்ளையான், வரதராஜப்பெருமாள், கருணா அம்மான் மற்றும் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா ஆகியோருடனான இரகசிய கொடுக்கல் வாங்கல்கள் எவ்வாறானவை எனத் தெளிவுபடுத்துமாறும் சஜித் வலியுறுத்தினார்.

நத்தார் தினத்தில் கடவுள் முன்பாக பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினரொருவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் சிறையிலுள்ள பிள்ளையானின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காக, அவரை விடுவிப்பதாக மகிந்த உறுதியளித்ததாகவும் சஜித் சுட்டிக் காட்டினார்.

கிழக்கு மாகாண மக்களின் பிள்ளைகளைக் கடத்திச்சென்று ஈழத்திற்காகப் போராடுவதற்கு நிர்ப்பந்தித்த பிள்ளையான் விடுவிக்கப்பட்ட பின்னர், கிழக்கு மாகாண மக்கள் மீண்டும் அச்சத்துடன் வாழ்வதற்கு இடமளிக்க வேண்டுமா? என சஜித் கேள்வி எழுப்பினார்.

மேலும், சட்டவிரோதமாக ஈழத்தை அறிவித்து, ஈழக்கொடியை ஏந்திய வரதராஜப்பெருமாளின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு எவ்வாறான வாக்குறுதிகள் வழங்கப்பட்டன எனவும் அக்கடிதத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

600 பொலிஸ் அதிகாரிகளைக் கொலை செய்த, தலதா மாளிகை மீது குண்டுத்தாக்குதல் நடத்திய, அரந்தலாவை கொலையை செய்த கருணா அம்மானுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இரகசிய உடன்படிக்கை எவ்வாறானது?

கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி தாக்குதலுடன் தொடர்புடைய பயங்கரவாதியாகக் கூறப்பட்ட எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, இரண்டாவது விருப்பு வாக்கை உங்கள் சகோதரரான கோத்தாவிற்கு அளிக்குமாறு கோருவதற்காக வழங்கிய இரகசிய வாக்குறுதி என்னவென தெளிவுபடுத்துமாறும் இந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

ராஜபக்ஷவின் அரசியல் கூட்டணியானது நாட்டிலுள்ள அனைத்து கடும்போக்குவாதப் பிரிவினரால் நிறைந்துள்ளதாகக் குறிப்பிட்ட சஜித் விவாதத்தை எதிர்கொள்வதற்கு கோத்தபாயவிற்கு தைரியமில்லை என்பதால், கேட்கப்பட்டுள்ள நான்கு கேள்விகளுக்கும் மகிந்தவிடம் மக்கள் பதிலை எதிர்பார்ப்பதாகவும் அக்கடிதத்தில் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மீண்டும் திறக்கப்படுகிறது ரஜரட்டை பல்கலைக்கழகம்!

(கொழும்பு)

வைரஸ் காய்ச்சல் காரணமாக மூடப்பட்டிருந்த ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் நான்கு பீடங்களும் எதிர்வரும் 25 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதன்படி தொழில்நுட்ப முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம், மனையியல் மற்றும் விவசாய பீடங்களின் கல்வி நடவடிக்கைகளும், பரீட்சைகளும் நடத்தப்படும் என்று பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

விடுதி வசதிகளைக் கொண்ட மாணவர்கள் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் மாலை 4 மணியளவில் விடுதிகளுக்கு சமூகமளிக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-7)

# பாலியல் துஷ்பிரயோகம்; விசாரணை செய்யாத 3 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி இடைநீக்கம்

(கேகாலை)

மனநலம் பாதிக்கப்பட்ட பெண்ணை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய சம்பவம் குறித்து உரிய விசாரணைகளை மேற்கொள்ளத் தவறியதற்காக ஹேமத்தகம பொலிஸ் நிலையத்தின் மூன்று பொலிஸ் அதிகாரிகள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கேகாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தேர்தல் பேரணியில் கலந்து கொண்டு விட்டு வீட்டிற்கு சென்று கொண்டிருந்த வேளை பெண்ணொருவரை இளைஞன் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக சப்ரகமுவ மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலின் படி ஆதாரங்களைக் கண்டுபிடிக்க தவறியதற்காக மூன்று பொலிஸ் அதிகாரிகள் நேற்றுப் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில், பொலிஸார் சந்தேகநபரை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# கோத்தாவுக்கு ஆதரவாக நுவரெலியாவில் பிரமாண்ட கூட்டம்






(ஹற்றன்)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் நுவரெலியா பகுதிக்கான பிரமாண்ட பிரசாரக் கூட்டம் நுவரெலியா நகர மத்தியில் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.பி. ரத்நாயக்க தலைமையில் நேற்று (சனிக்கிழமை) இந்தத் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ, ஜி.எல்.பீரிஸ், ஆறுமுகன் தொண்டமான், விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, திலும் அமுனுகம, மத்திய மாகாண முன்னாள் அமைச்சர்களான எம்.ரமேஷ்வரன், நிமல் பியதிஸ்ஸ மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.


இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியினுடைய நுவரெலியா மாவட்ட இளைஞர் அணியின் செயலாளர் மணித், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து கொண்டார்.

பெருமளவான ஆதரவாளர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)

### கோத்தாவின் வெற்றி நிச்சயம்

# சஜித்தின் அரசியல் கனவு 16-ம் திகதி கலைக்கப்படும்

## வீரவன்ச திட்டவட்டம்



(கொழும்பு)

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் அரசியல் கனவு நவம்பர் 16ஆம் திகதியுடன் கலைக்கப்படும் என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பொலநறுவை நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய பிரச்சினைக்குத் தீர்வு வழங்கும் விவகாரத்தில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ சிங்கள மக்களை ஏமாற்றுகின்றார்.

தமிழ் மொழியில் ஒரு விதமாகவும், சிங்களத்தில் மற்றொரு விதமாகவும் அவரின் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் மக்களுக்கு சமஷ்டியாட்சி முறை மைக்கு ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் அடிபணிந்துள்ளமை இம்முறையே ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பகாலத்திலிருந்து சட்டரீதியிலும், குறுக்கு வழியிலும் பல முயற்சிகளை முன்னெடுத்தது அவையனைத்தும் தோல்வியிலேயே முடிந்துள்ளது.

இனவாதிகளின் கட்டளைக்கு இணக்கம் தெரிவிக்காத பலமான தலைமைத்துவத்திலான அரசாங்கம் நிச்சயம் தோற்றம் பெறும்.

தேர்தலில் தோல்வி நிச்சயம் என்பதை ஐக்கிய தேசியக் கட்சி தற்போது உணர்ந்துள்ளது. கடந்த காலங்களில் முன்னெடுத்த முறையற்ற தேர்தல் பிரச்சாரங்கள் அனைத்தும் தோல்வியில் முடிந்துள்ளது.

தற்போது பயங்கரவாதி சஹ்ரானின் குடும்பத்தின் உதவியியையும் அமைச்சர்களான மங்கள சமரவீர, ராஜித சேனாரட்ன ஆகியோர் நாடியுள்ளனர்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கும் பயங்கரவாதி சாஹ்ரானுக்கும் தொடர்பு இருந்ததாக பயங்கரவாதி சஹ்ரானின் மனைவின் ஆதரவுடன் குறிப்பிடுவதற்கு அரசாங்கம் பல சதி முயற்சிகளை முன்னெடுக்கின்றது.

இவ்வாறான முறையற்ற செயற்பாடுகளுக்கு இம்முறை நாட்டு மக்கள் ஏமாறமாட்டார்கள்.

சிறந்த தீர்வை இம்முறை நாட்டு மக்கள் வழங்குவார்கள். அரசாங்கத்தின் அரசியல் சூழ்ச்சிகள் எதுவும் வெற்றிபெறாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் மின்சாரத்தடை

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று நண்பகல் மின்சாரத் தடை ஏற்பட்டுள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமான நிலையத்தின் பிரதான மின்சார விநியோகத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக பல முறை மின்சாரம் தடைப்பட்டதாகவும் விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மின்சார விநியோகத் தடையால் விமான நிலைய செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளதாகவும் எனினும் அந்தச் சிக்கல்கள் தற்போது சீர் செய்யப்பட்டுள்ளதாகவும் விமான நிலையம் மற்றும் விமான சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

சிறிது நேரத்தில் மின்சார விநியோகம் வழமைக்குத் திரும்பிய போதிலும், பழுது பார்க்கும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாக அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது. (இ-7)

# ஒன்றிணையாது போயிருந்தால் இரு சாராரும் அழிந்து போயிருப்போம்

## பசில் சுட்டிக்காட்டு



(கொழம்பு)

நாட்டில் அனைத்துத் துறைகளும் இன்று பின்னடைவை எதிர் நோக்கியுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தே ப அமைப்பாளர் பசில் ராஜபக்வு தெரிவித்தார்.

அவ் ,றான பின்னடைவைத் ,டுப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வழங்கும் ஒத்துழைப்பு அளப்பரியது எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நேற்று ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ பெறும் வெற்றிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மிகப்பெரும் பங்களிப்பை வழங்குவதாகக் கூறினார்.

ஒன்றிணையாது போயிருந்தால் இரு சாராரும் அழிந்து போயிருப்போம். கடந்த ஐந்து ஆண்டுகளைப் பற்றி ஒரு புத்தகம் எழுதினால் அதற்குக் கட்டாயம் அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்கும்.

சுதந்திரக் கட்சியின் அர்ப்பணிப்பு அளப்பரியது. நாட்டின் வெற்றிக்காக, சுகாதார நலன்களுக்கு அது பாரிய உந்துசக்தியாகும்.

வெற்றியின் பாரிய பங்கு சுதந்திரக் கட்சிக்கு உரித்தானது. அதற்கு பொதுஜன பெரமுனவிலுள்ள பலர் எதிர்ப்பை தெரிவிக்கலாம். எப்படியிருந்தாலும் உண்மை அதுதான் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சுவரொட்டி போட்டியில் முதலாமிடம்



(முதலாமிடம் பெற்ற இளைஞர் அணி)

(கொழும்பு)

எங்கள் எதிர்காலத்தை வண்ணமயமாக்குதல்' எனும் தலைப்பில் இலங்கை வனஜீவராசிகள் மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கத்தின் இளைஞர் அணி நடத்திய தேசிய மட்ட சுவரொட்டி போட்டி கடந்த வாரம் 3 ஆம் திகதி கொழும்பில் இடம் பெற்றது.

இதில் வடபிராந்தியத்திலிருந்து 12 பாடசாலைகள் பங்கு பற்றின. இதில் முதல் 3 இடங்களையும் முறையே யா/ஆணைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை.யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி. வ/ புதுக்குளம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் பெற்றுக் கொண்டன. (இ-5)



நாகர் கோவில் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா கடந்த 25 ஆம் திகதி அதிபர் கு.கண்ணதாசன் தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஆ.நித்திலவர்ணன், மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி ச.திரவியராசா, கல்லூரியின் முன்னாள் அதிபர் இ.சிவசங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்-மகாலிங்கம்)

# "அனைத்து உயிரினங்களின் மீதும் அன்பு செலுத்த வேண்டும்" ஜனாதிபதி வாழ்த்துச் செய்தி



முஹம்மது நபியின் பிறந்த தினமான மீலாத் நபி, உலக மக்களுக்கு நல்வழி காட்டுவதற்கான அவரது போதனைகளை மீள நினைவூட்டுவதற்கான ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மனிதர்கள் அனைவரும் சமமானவர்களே. இனம், குலம், நிறம் போன்ற எந்தவொரு விடயத்திலும் ஒருவர் மற்றவரை விட உயர்ந்தவரோ தாழ்ந்தவரோ அல்ல என்பது அவரது போதனையாக அமைந்தது. அனைத்து மனிதர்களுக்கும் சமமான உரிமை கிடைக்கப் பெற வேண்டுமென நபி போதித்தார்.

தனது முழு வாழ்வையும் அடிமைச் சமூகத்தின் விடுதலைக்காக அர்ப்பணித்த நபி சுரண்டலுக்கு எதிராகவும் குரல் கொடுத்தார். தொழிலாளர்களின் வியர்வை காயும் முன்னரே அவர்களுக்கான கூலி குறைவின்றி கொடுக்கப்பட வேண்டுமென அவர் போதித்தார்.

அவர் தனது தனிப்பட்ட வாழ்வில் கடைப்பிடித்த நற்பண்புகள் மற்றும் மனிதநேயத்திற்கான அவரது அர்ப்பணிப்புகள் ஆகியன மனிதர்களுக்கிடையில் பிரிவினைகளும் குரோதமும் வளர்ந்து காணப்படும் இக்காலத்தில் எம் அனைவருக்கும் சிறந்த முன்மாதிரியாக அமைகின்றன.

அனைத்து உயிரினங்களின் மீதும் அன்பு செலுத்த வேண்டுமென்ற நபியின் தத்துவம் எம் அனைவரினதும் அன்றாட வாழ்க்கை நடைமுறைக்கு வழிகாட்டுவதாக அமைய வேண்டுமென நபியின் இந்த பிறந்த தினத்தில் நான் உளப்பூர்வமாக பிரார்த்திக்கின்றேன்.

இலங்கைவாழ் முஸ்லிம் சமூகத்தினருக்கும் உலகெங்கிலும் வாழும் இஸ்லாமியர்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 7,083 மில்லியன் ரூபாவை பயன்படுத்தத் தவறிய 15 பல்கலைக்கழகங்கள்

## கோப் குழு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு வருடாந்தம் அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் நிதியில் 15 பல்கலைக்கழகங்களின் 794 வங்கிக் கணக்குகளில் 5,666 மில்லியன் ரூபா நிதி எஞ்சியிருப்பதாக 2017ஆம் ஆண்டு கணக்காய்வு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) சமர்ப்பித்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழகங்களுக்கு வருடாந்தம் மூலதன ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய பணிகளுக்கு அவை செலவு செய்யப்படாத ஒதுக்கீடுகளாக தக்கவைத்துக் கொள்ளப்பட்டிருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 2017.12.31 ஆம் திகதி வரை செலவு செய்யப்படாது தக்கவைத்திருந்த பணத்தொகையின் பெறுமதி 1,414 மில்லியன் ரூபா எனவும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய (கோப்) குழுவின் நான்காவது அறிக்கை நேற்றையதினம் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தியால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையில் பல்கலைக்கழகங்களில் காணப்படும் குறைபாடுகள் பல புலப்பட்டுள்ளன. திட்டவட்டமான மதிப்பீடு மேற்கொள்ளப்படாமல் உத்தேச மதிப்பீடுகளை தயாரித்தலும், ஆய்வுகளை நடைமுறைப்படுத்தல், ஆய்வு மற்றும் வெளியீடுகளை சர்வதேச மற்றும் தேசிய மாநாடுகளுக்கு சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு கல்விசார் பணியாட்தொகுதியின் கவனத்தை செலுத்த வைக்கின்றமை போதுமானதாக அமையாத காரணத்தினால் வருடாந்தம் திறைசேரியால் வழங்கப்பட்டிருந்த மூலதன ஒதுக்கீடுகள் முறையாகப் பயன்படுத்தப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்ழகங்களில் இவ்வாறு வங்கிக் கணக்குகளில் நிதியைப் பேணுவதற்குப் பதிலாக, திறைசேரியால் பஃகலைக்கழகங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியைக் குறைப்பதன் ஊடாக தனிநபரின் கடன்சுமையைக் குறைக்க முடியும் என்றும் கோப் குழு சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

# யாழ்.பல்கலையில் இந்திரஜித் சிறப்பு விரிவுரை





(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் வரலாற்றில் முதற் தடவையாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி கடந்த புதன்கிழமை "இலங்கையின் முன்னேற்றம் மற்றும் செழிப்பை மழுங்கச் செய்யும் பேரண்ட பொருளாதார அழுத்தத்தை நிவர்த்தி செய்வதற்கான கொள்கை வகுப்பு கட்டமைப்பை வலுப்படுத்தல்" எனும் தலைப்பில் சிறப்பு விரிவுரை ஒன்றை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆற்றினார். (இ-5-7)







யாழ்.மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திர விவசாயச் சம்மேளணம் கடந்த ஆறாம் திகதி புதன்கிழமை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் குப்பிழானில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் அகில இலங்கை ஸ்ரீலங்கா சுதந்திர விவசாய சம்மேளனத்தின் தலைவர் சேனதிஸாநாயக்கா மற்றும் செயலாளர் அநுர தேசப்பிரிய ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:- வர்ணன்)




# பிரதமர் அச்சங்கொள்வதை அவதானிக்கும் போது பெருமை

## பிள்ளையானின் கட்சி வெளிப்படுத்தல்

(ஏறாவூர்)

கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரு கட்சியின் தலைவரைப் பார்த்து இந்த நாட்டின் பிரதமர் அச்சங்கொள்வதை அவதானிக்கும் போது தாங்கள் பெருமைப்படுவதாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

மட்டு. ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் போராளிகளைப்பற்றி கருத்துத் தெரிவிக்க பிரதியமைச்சர் அமீர் அலிக்கு எந்தத் தகுதியும் இல்லையென தெரிவித்த அவர், முடியுமானால் தமிழ் மக்களின் வாக்குகளைப்பெறாமல் முஸ்லிம் மக்களின் வாக்குகளை மட்டும் பெற்று நாடாளுமன்ற உறுப்பினராக வந்து காட்டுமாறும் அவர் சவால் விடுத்தார்.

வகாப்பிய முஸ்லிம் பயங்கரவாத அமைப்பால் கிழக்கு மாகாணம் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வீதி புனரமைப்பு



(அக்கராயன்)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் அரசர்கேணி தம்பகாமம் இணைப்பு வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

குறித்த பிரதேச மக்களின் தொடர்ச்சியான வேண்டுகோளை ஏற்று பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் குறித்த வீதி மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

விவசாயக் கிராமமான தம்பகாமம் மற்றும் அரசர்கேணி ஆகிய பகுதிகளை நகரப் பகுதியுடன் இணைக்கும் பிரதான வீதியாக இது காணப்படுகின்றது.

வீதி புனரமைப்புப் பணிகள் முடிவடைந்தால் இப்பகுதி விவசாயிகளுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக காணப்படும் என தெரிவிக்கப்படுகின்றது குறிப்பிடத்தக்கது. (9-350)

# எத்தடை வரினும் மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்படும்

(பனிக்கன்குளம்)

மாவீரர் நாள் நினைவு தினத்தை முன்னிட்டு இடம்பெறும் தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தின் சிரமதானப் பணிகளில் மக்கள், சமூகமட்ட அமைப்புக்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொண்டு ஆதரவு தருமாறும் ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

மாவீரச் செல்வங்களின் மகத்தான நினைவுநாள் நவம்பர் 27 இல் இடம்பெறவுள்ளது. அந்த நாளை உணர்வெளிச்சியுடன் கடைப்பிடிப்பதற்கு துயிலும் இல்ல வளாகத்தில் பல பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதால் தாயக உறவுகள் மற்றும் பொது அமைப்புக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வழமை போன்றே எந்த நெருக்கடிகள் வந்தாலும் மாவீரர் நாள் நினைவு அனுஷ்டிக்கப்படும். அன்றைய தினம் பொது மக்களின் அச்சமின்றி கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (9-281)

# அமைதிபுரம், அம்பலப்பெருமாள்குளம் கிராமங்களுக்கு அடிப்படை வசதிகளை பெற்றுத் தருமாறு கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள மிகவும் பின்தங்கிய பிரதேசங்களாக காணப்படும் அமைதிபுரம், அம்பலப்பெருமாள்குளம் ஆகிய கிராமங்களில் வாழும் மக்கள் தமக்கான அடிப்படை வசதிகளைப் பெற்றுத் தருமாறு கோரியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள மிகவும் பின்தங்கிய கிராமங்களாகக் காணப்படும் அமைதிபுரம் மற்றும் அம்பலப்பெருமாள் குளம் ஆகிய கிராமங்களில் வாழும் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தினால் கடந்த ஒன்பது வருடங்களாக தாங்கள் சொல்லொணாத்துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதாவது, அமைதிபுரம் பகுதியில் குடிநீருக்கான பிரச்சினை பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றன.

அத்துடன் 13 கிலோமீற்றர் நீளமான உள்ளக வீதிகள் புனரமைக்கப்பட வேண்டியதுடன், மேட்டுநில விவசாயச்செய்கைகளுக்காக மேட்டுக்காணிகளைப் பெற்றுத்தருமாறும் 23 குடும்பங்களுக்கு நெற்செய்கை காணிகளை பெற்றுத்தருமாறும் மேற்படி கிராம மக்கள் கோரியுள்ளனர்.

இதேபோன்று அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தில் புனரமைக்கப்படாது காணப்படுகின்ற ஒன்பது கிலோமீற்றர் நீளமான பிரதான வீதிகளைப் புனரமைத்துத் தருமாறும் ஐந்து கிலோமீற்றர் நீளமான உள்ளக வீதிகளையும் புனரமைத்துத் தருமாறும் கோரியுள்ளனர்.

மேற்படி குறித்த இரண்டு கிராமங்களிலும் குறித்த அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் இங்கு வாழும் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அன்றாடம் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)



கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையின் வாசிப்பு மாத போட்டிகளின் பரிசளிப்பு விழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது. பாடசாலை முதல்வர் சு.சுதாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலய முதல்வர் அ.பங்கயற்செல்வன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

# திருட முற்பட்டவர் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(நெளுக்குளம்)

வவுனியா வைத்தியசாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை உடைத்து திருட முற்பட்டவர் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

குறித்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு வவுனியா வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்றது. வவுனியா வைத்தியசாலையில் கடமையாற்றும் பெண் ஊழியர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் வைத்தியசாலை வளாகத்தில், நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. குறித்த மோட்டார் சைக்கிளின் பெட்டியை உடைத்து அதில் திருடுவதற்கு ஒருவர் முயன்றுள்ளார்.

இதனை அவதானித்த வைத்தியசாலை ஊழியர்கள் குறித்த நபரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (9-299)

# கிளிநொச்சியில் வாள்வெட்டு நால்வர் வைத்தியசாலையில்

கிளிநொச்சிதட்டுவன் கொட்டி பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் வாள்வெட்டுச்சம்பவம் - ஒன்றுஇடம்பெற்றுள்ளது. குறித்த வாள்வெட்டுச் சம்பவத்தில் நால்வர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த பகுதியில் உள்ள கிராம உத்தியோகத்தர் ஒருவரின் சகோதரர்கள் மற்றும் உறவினர்களே இவ்வாறு வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கிராம உத்தியோகத்தர் அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்டவிரோத மண்ணகழ்வு தொடர்பில் தொடர்ச்சியாக மேற்கொண்ட தடுக்கும் நடவடிக்கையின் உச்சகட்டத்திலேயே இவ்வாறு வாள்வெட்டு சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில், நேர்மையான முறையில் தமது கடமைகளை நிறைவேற்றும் அதிகாரிகளிற்கு பாதுகாப்பற்ற நிலை தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் அதேவேளை, சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்க முற்படும் சமூக ஆர்வலர்கள் மீதும் இவ்வாறான அச்சுறுத்தல் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-100-312)




# கந்தசுவாமி கோவில் வளைவு சிவமோகன் எம்.பியால் திறப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் எழுந்தருளி மக்களுக்கு அருள் பாலித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீகந்தசுவாமி கோவிலிற்கு செல்லும் வீதியின் வளைவு புதுக்குடியிருப்பு நகர்பகுதியில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

ஆலய நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்வில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உப தவிசாளர் க.ஜெனமேஜயந் மற்றும் கல்வி சமூகத்தினர்,ஆலய நிர்வாகத்தினர் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஜ-281)





வவுனியா பொது வைத்தியசாலையின் நூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்களை வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

சமூக ஆர்வலர் இராசநாயகம் மோர்சிபவனால் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு தொகுதி மருத்துவம் சார்ந்த நூல்களை வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நந்தகுமாரிடம் கையளிக்கப்பட்டது.

விடாமுயற்சிகளைத் தொடர்ந்து
செய்வதே மேதைத்தனம்.
- எல்பர்ட் ஹப்பர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் ஒற்றுமைக்கு ஜனாதிபதித் தேர்தல் சவாலாகலாம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான நாட்கள் நெருங்கி வருகின்றது.

இந்நேரத்தில் தேர்தல் கால வாக்குறுதிகளுக்குப் பஞ்சமேயில்லை.

அது செய்வேன். இது செய்வேன் என்று வேட்பாளர்கள் கூறிவருகின்றனர்.

எனினும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர்களின் பிரசாரங்களையும் தேர்தல் விஞ்ஞாபனங்களையும் பார்க்கும்போது,

அவர்கள் பிடி கொடுக்காமல் வாக்குறுதிகளை வழங்கியுள்ளனர்.

அதிலும் குறிப்பாக தமிழ் மக்களுக்கான வாக்குறுதிகளை வழங்குகின்றபோது அதில் மிகக் கவனமாக முதன்மை வேட்பாளர்கள் செயற்பட்டுள்ளனர் என்பது பட்டவர்த்தனமாகத் தெரிகிறது.

அதாவது தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பட்டியல்படுத்தி இவற்றையெல்லாம் செய்வேன் என்று கூறாமல், இந்த நாட்டில் எல்லா இன மக்களும் ஒற்றுமையாக வாழும் சூழ்நிலை ஏற்படுத்தப்படும்.

நாட்டை அபிவிருத்தி செய்வேன். ஒரே குடையின் கீழ் ஆட்சியை உருவாக்குவேன் எனப் பொதுவான கருத்துக்களையே முதன்மை வேட்பாளர்கள் முன் வைத்திருப்பதைக் காண முடிகிறது.

இவ்வாறு முன்வைப்பதன் மூலம் தமிழ் மக்களுக்கு அதிகாரம் வழங்கப்படப் போகிறது என்ற கருத்து நிலை சிங்கள மக்களிடம் ஏற்படாமல் இருப்பது உறுதிபடுத்தப்படும்.

ஆக, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற முதன்மை வேட்பாளர்களின் முதற்பணி சிங்கள மக்கள் தம் மீது ஐயம் கொள்ளக் கூடாது என்பதுதான்.

அதிலும் சிறுபான்மை இன மக்களின் வாக்குகளில் குறைவுகள் ஏற்பட்டாலும் பரவாயில்லை. சிங்கள மக்களின் வாக்குகள் குறைந்து விடக்கூடாது என்பதில் முதன்மை வேட்பாளர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பதையும் நாம் அவதானிக்க முடிகிறது.

இத்தகைய நிலைமையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குரிய தீர்வைத் தருவேன் என்று சொல்வதற்குக்கூட பயம் கொள்ளும் ஜனாதிபதி வேட்பாளர்களிடம் இருந்து, தமிழ் மக்கள் எதனையும் பெற்றுவிட முடியுமா என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எதுவாயினும் ஜனாதிபதித் தேர்தல் என்பது நடந்து முடிந்த பின்பு யாரோ ஒருவர் ஜனாதிபதியாக அறிவிக்கப்படுவார்.

அவ்வாறு அறிவிக்கப்படுபவரே இந்த நாட்டின் அதிகாரமுடைய ஜனாதிபதியாக இருப்பார்.

எனவே யார் வாக்களித்தாலென்ன, வாக்களிக்காமல் விட்டாலென்ன ஜனாதிபதித் தேர்தல் நடப்பதும் ஜனாதிபதி ஒருவர் தெரிவாவதும் நிறைவேறப் போகிறது.

எனவேதான் இந்த இடத்தில் யாரை ஆதரிப்பது என்ற முடிவை தமிழ் மக்கள் எடுத்தாக வேண்டும்.

இத்தகைய முடிவை தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு ஒத்த முடிவாக எடுத்திருக்க வேண்டும்.

ஆனால் இங்கு தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையின்றி சிதறியுள்ளன.

இந்தச் சிதறல் தமிழ் மக்களின் ஒற்றுமைக்கும் குந்தகமாக அமையப் போகிறது.

ஆக, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தமிழினத்தின் ஒற்றுமைக்கும் சவாலானது என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

### தூக்குத் தண்டனை கைதிக்கு

## மன்னிப்பு வழங்கினார் ஜனாதிபதி மைத்திரி

வெளிநாட்டு பெண் ஒருவரைக் கொலை செய்த குற்றத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஜ/ட் சமந்த ஜயமகவை பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்கும் உத்தரவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ளார். பதவிக்காலம் நிறைவடைய 7 நாள்கள் மட்டுமே உள்ள நிலையில் இந்த உத்தரவை ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன வழங்கியுள்ளார்.

இந்த நிலையில் தூக்குத் தண்டனைக் கைதி ஜ/ட சமந்த ஜயமகவை பொது மன்னிப்பில் விடுவிக்கும் உத்தரவை ஜனாபதிபதி மைத்திரிபால சிறிசேன, சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளார். பொது மன்னிப்பு ஆவணாங்கள் தமக்குக் கிடைத்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது. (ம-3)

### ரெலோவின் ஆதரவு எனக்கே

## செல்வம் அடைக்கலநாதன் தடுமாறுகிறார் –சிவாஜிலிங்கம்

(வவுனியா)

ரெலோவினுடைய பலர் எனக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தடுமாறுகிறார் என ஜனாதிபதி வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின் பின் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மாத்திரமல்ல பல மாவட்டத்திலிலுள்ள ரெலோ உறுப்பினர்கள், முன்னணி தலைவர்கள் எனக்கு ஆதரவாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அவருக்கு முன்னிலையிலேயே எங்களுடைய வாக்குகள் சிவாஜிலிங்கத்திற்கு தான் என பலர் கூறியிருகின்றனர். அதே போல தமிழத் தேசிய கூட்டமைப்பில் ரெலோ அல்லாத கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட எனக்கு ஆதரவு என தெரிவித்துள்ளனர். அவர்களின் பெயரை நான் வெளியிட விரும்பவில்லை.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட கூட்டத்தில் செல்வம் அடைக்கலநாதன் கலந்து கொள்ளாமையிலிருந்து அவர் தடுமாறிக் கொண்டிருக்கின்றார் என்பது தெரிகின்றது என்றார். (ம-3,250)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2019

"மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர்"

- மூப்பர் அம்பிலோகியோஸ்
(கிரேக்க கிறிஸ்தவ மதகுரு)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

எண்ணெய் இல்லாத விளக்கு அணைந்து விடுவதைப் போல முயற்சி இல்லாமல் சோம்பேறியாக இருப்பவனிடம் சாதகமாக இருக்கும் விதிகூட தன் ஆதிக்கத்தை இழந்து விடுகிறது.

-அபிநவ வித்யா தீர்த்தர்

## 3 தமிழ் பிரதேச செயலகங்கள் அம்பாறையில் நிறுவப்படும்

### பிரதமர் இணக்கம் தெரிவித்ததாக ஏ.கே.கோடிஸ்வரன் தெரிவிப்பு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் நீண்டகால தேவையாக இருந்துவந்த மூன்று தமிழ் பிரதேச செயலகங்களை நிறுவுவதற்கு பிரதமர் ரணில் விக்கிரசிங்க இணக்கம் தெரிவித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே.கோடிஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கோடீஸ்வரன் தலைமையிலான குழுவொன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) கொழும்பில் சந்தித்தது. இந்த சந்திப்பின் போதே இவ்வாறு இணக்கம் காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் கல்முனை தமிழ் உப பிரதேச செயலகத்தை பிரதேச செயலகமாக தரமுயர்த்துமாறு பல தசாப்தங்களாக தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், இந்த கோரிக்கை சில மாதங்களுக்கு முன்னர் வலுத்து பல்வேறு போராட்டங்களுக்கும் வழிவகை செய்தது. எனினும் இது குறித்து தீர்வு எட்டப்படாத நிலை தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலின் போது புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித்பிரேமதாஸவை ஆதரிக்குமாறு இதன்போது வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

## கிளி/தருமபுர பிரதேசத்தில் இரு குண்டுகள் கண்டெடுப்பு

கிளிநொச்சி தருமபுரம் பிரதேச வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிட வேலையின் போது இரண்டு குண்டுகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வேலையாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பில் தருமபுர பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து நேற்று சனிக்கிழமை பொலிஸாரினால் குறித்த இரு குண்டுகளும் செயலிழக்கம் செய்யப்பட்டுள்ளது.

(ம்-3,316)

## அனுமதிப்பத்திரத்திற்கு முரணான மணல் அகழ்வில் ஈடுபட்ட 4 பேர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட D.M.குற்றத்தடுப்புப் பிரிவின் சதுரங்க அணியினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்றைய தினம் கல்லாறுப் பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது அனுமதிப்பத்திரத்துக்கு முரணான முறையில் மண் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தன் பேரில் 4 பேரும், அவர்களது 4 டிரக்டர்களும் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டு தருமபுர பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-3,316)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில் கொழும்புத்துறை ஒரு பகுதி, நெடுங்குளம், ஒரு பகுதி, உதயபுரம், மணியம் தோட்டம், மணியம்தோட்டம் ஐஸ் தொழிற்சாலை, தொம்பை வீதி, உடுவில் மேலதிக அரசாங்க அதிபர், அலுவலக வீதி, அம்பலவாணர் வீதி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் உளுக்குளம், மறக்கறம்பளை கணேசபுரம் பிரதேசம், செட்டிக்குளம் நகர பிரதேசம் ஒருபகுதி ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ கடவுளுக்காக நம்பிக்கையுடன் காத்திருப்போரே, நீங்கள் அனைவரும் உள்ளத்தில் உறுதி கொண்டிருங்கள்.

❖ ஒரு காலத்தில் இருளாய் இருந்த நீங்கள் இப்போது கடவுளோடு இணைந்து ஒளியாய் இருக்கிறீர்கள். ஆகவே ஒளி பெற்ற மக்களாய் வாழுங்கள்.

❖ இறைப்பற்றோடு சகோதர நேயமும், சகோதர நேயத்தோடு அன்பும் கொண்டு விளங்குமாறு முழு ஆர்வத்தோடு முயற்சி செய்யுங்கள்.

❖ நீங்கள் மேற்கொண்டுள்ள தொழிலைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே உங்கள் வெற்றி நிர்ணயிக்கப்படுகிறது.

❖ பணத்தை விரயம் செய்கிறவர்கள் செல்வத்தை மட்டுமே இழக்கிறார்கள், ஆன்றால், நேரத்தை விரயம் செய்கிறவர்கள் வாழ்க்கையை இழக்கிறார்கள்.

❖ வஞ்சித்துப் பெறும் உணவு சுவையாயிருக்கும் ஆனால், பின்னால் அது வாய் நிறைய மணல் கொட்டியது போலாகும்.

❖ முழு மனத்தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரை ஒருவர் அன்புடன் தாங்கி, ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ள முழு முயற்சியுடன் செயற்படுங்கள்.

# புத்தூர் எவறட்ஸ் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது அன்னை அணி



யாழ்.லீக்கின் அனுமதியோடு கோண்டாவில் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் நாவற்குழி அன்னை அணியை எதிர்த்து புத்தூர் எவறட்ஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்ததால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 04:03 என்ற கோல் கணக்கில் அன்னை அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது. (க)

# பரபரப்பான ஆட்டத்தில் வென்றது ஒலிம்பிக் அணி



யாழ்.லீக்கின் அனுமதியோடு கோண்டாவில் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் திருநெல்வேலி ஒலிம்பிக் அணியை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனீஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 01:00 என்ற கோல்கணக்கில் திருநெல்வேலி ஒலிம்பிக் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது. (க)

# கஜகோபனின் ஹற்றிக்கோல் கைகொடுக்க அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது றோயல் அணி



யாழ்.லீக்கின் அனுமதியோடு கோண்டாவில் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தி வருகின்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை கலையொளி அணி மோதியது.

ஆட்டநேர முடிவில் 05:01 என்ற கோல் கணக்கில் றோயல் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது. றோயல் அணி சார்பாக கோபன் 03, ருசந்தன் 02 கோல்களைப் பெற்று கொடுத்தனர். (ஜ)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**


# பலாலி விண்மீனை வீழ்த்தி டயமன்ஸ் அணி திரில் வெற்றி



அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் எதுவித கோல்களையும் பதிவு செய்யாததால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 05:04 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் அணி வெற்றி பெற்றது.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக சாரு தெரிவு செய்யப்பட்டார். (ஜ)

# சமநிலை தவிர்ப்பு உதையில் நாவற்குழி அன்னை அணி வெற்றி

யாழ்.லீக்கின் அனுமதியோடு கோண்டாவில் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தி வருகின்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் நாவற்குழி அன்னை அணியை எதிர்த்து புத்தூர் எவறட்ஸ் அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்ததால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 04:03 என்ற கோல் கணக்கில் அன்னை அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது. (ஜ)



# அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது குருநகர் பாடும்மீன் அணி



கோண்டாவில் வடக்கு மத்திய சனசமூக நிலைய வைர விழாவினை முன்னிட்டு நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அன்னை ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதியது. 6-4 என்ற கோல் கணக்கில் பாடும் மீன் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது. (ஜ-106)



**2019 இற்கான ஜப்பான் நாட்டில் நடைபெற்ற சர்வதேச ரீதியிலான கராத்தே சுற்றுப் போட்டியில் பதக்கம் வென்ற யாழ்/மத்திய கல்லூரி கராத்தே பயிற்சி ஆசிரியர் சென்சே எஸ்.விஜயராஜ் மற்றும் கல்லூரி மாணவர்கள் எஸ்.கலையினியன், எஸ்.சமாயில் ஆகியோரும் பாடசாலை சமூகத்தினரால் கடந்த 4 ஆம் திகதி கௌரவிக்கப்பட்டனர்.**

## கோத்தபாய ராஜ..

இடத்தில் மாத்திரமே ஜனநாயகம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனநாயகத்தின் மீது கோத்தாவுக்கு நம்பிக்கையில்லை என்பதையே இதுகாட்டுவதாகவும் தெரிவித்துள்ளார்.

தங்களுக்கு எதிராகக் கருத்து தெரிவிக்கும் அனைவரையும் சுட்டுத்தள்ளிய ராஜபக்ஷக்கள் ஆட்சியில் ஜனநாயகம், சுதந்திரம் இல்லாதொழிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடு மீண்டும் அந்த யுகத்தை நோக்கிச் செல்லக்கூடாதெனவும் பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார். (ம-3)

## வாக்குச்சீட்டு...

மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அதனால் வாக்களிக்கும்போது வாக்காளர்கள் மிக அவதானமாக வாக்களிக்க வேண்டும் என அவர் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார். (ம-3)

## தமிழ் அரசியல்...

மனோ கணேசன், சஜித் ஆட்சியில் அந்த பத்திரம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு களுதாவளை பொது மைதானத்தில் நேற்று நடைபெற்ற புதிய ஜனநாயக முன்னணியின் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் கூறியதைப்போன்று அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் தயார் நிலையில் உள்ளதெனவும் தேர்தல் வந்துவிட்ட காரணத்தால் அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாதுள்ளதாகவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் சஜித் பிரேமதாஸவின் ஆட்சியில் தான் அமைச்சராக இருக்கப் போவது உறுதியெனவும் அந்த அரசாங்கத்தில் மேற்படி அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப் பிக்கவுள்ளதாவும் தெரிவித்தார்.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து எதிர்காலத்தில் ஒரு தமிழ் அமைச்சர் ஒருவரை தெரிவு செய்யப்போவதாகவும் வாக்குறுதியளித்தார். (ம-3)

## 83 கிலோ கஞ்சா...

செய்துள்ளனர்.

சுண்டிக்குளம் கடற்கரை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போது கடற்கரையில் வைக்கப்பட்டிருந்த சந்தேகத்திற்கிடமான பொதிகள் சில அவதானிக்கப்பட்டன.

அவற்றை சோதனைக்கு உட்படுத்திய போது அதில் கேரள கஞ்சா கண்டுபிடிக்கப் பட்டது. (ம-3)

## புலிகளை அழித்த...

வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

நாங்கள் இன்று கோருவதெல்லாம் நீங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் யுத்தம் நடத்திய காலத்தில் கூறிய விடயங்களையே கேட்கின்றோம். உண்மைக்காக போராடியவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள். அவர்கள் போராடியது மக்களுக்காக. அவர்கள் மக்களின் உரிமைக்காக போராடினார்கள். விடுதலைப் புலிகளின் உரிமைக்காக அல்ல. எனவே மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

இந்தத் தேர்தலை நாங்கள் பகிஷ்கரிக்க முடியாது. எமது ஜனநாயக உரிமையை பயன்படுத்தி எமக்குப் பாதகமாக தேர்தல் முடிவு அமையாமல் எமக்கு சாத்தியமாக தேர்தல் முடிவு அமைய வேண்டும். நாங்கள் சகல கடமைகளையும் தெளிவாக ஆராய்ந்து ஒரு முடிவை எடுத்து அந்த முடிவை நடைமுறைப்படுத்த வேண்டும்.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடந்தபோது வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை. வாக்களித்திருந்தால் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்திருக்க முடியாது. அவர் ஜனாதிபதியாகி 10 வருடங்கள் எமது மக்கள் பட்ட துயரங்கள் நாங்கள் சொல்ல வேண்டியதில்லை.

அரசியல் ரீதியாக எம்மை பலவீனப்படுத்த முயன்றார்கள். இருக்கும் அதிகாரத்தினை குறைப்பதற்கு முயற்சித்தார்கள். மனித உரிமை மீறல்கள் அடிப்படை உரிமை மீறல்கள் நாள்தோறும் நடைபெற்றது. எமது மக்களை மதித்து நடக்கவில்லை. ஆகவே நாங்கள் தேர்தலை பகிஷ்கரித்து தவறான வழிக்கு செல்ல முடியாது.

அரசியல் தீர்வு சம்பந்தமாகவும் அதிகார பகிர்வு சம்பந்தமாகவும் மக்களிடத்தில் சமத்துவத்தை ஏற்படுத்துவது சம்பந்தமாக கோத்தபாயவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எதுவும் கூறப்படவில்லை. அதற்கு மாறாக சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தனது நிலைப்பாட்டை தெளிவாக கூறியிருக்கின்றார். அதாவது அதி உச்ச அதிகாரப் பகிர்வு.

அதி உச்ச அதிகாரப்பகிர்வு என்பது முதன் முறையாக எடுக்கப்பட்டதல்ல. மகிந்த ராஜபக்ஷ காலத்தில் 2006ஆம் ஆண்டு சர்வகட்சி கூட்டத்தினை கூட்டி எல்லோருடனும் கதைத்து அவர் ஆற்றிய உரையில் அதி உச்ச அதிகார பகிர்வு அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும் என அவர் பேசியிருக்கின்றார்.

இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்ட காரணத்தினால் யுத்தம் நடைபெறாத காரணத்தினால் அவை எல்லாவற்றையும் மறந்து தமிழ் மக்களை ஏமாற்றலாம் என நினைக்கின்றனர். அதற்கு நாங்கள் இடமளிக்க முடியாது. தாங்கள் கூறிய விடயத்தினையே நிறைவேற்ற விருப்பமில்லாமல் அவர்கள் இருக்கின்றனர்.

இன்று சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க தயா ரிக்கப்பட்ட விஞ்ஞாபனம். அந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் மறைமுகமாக சமஷ்டி ஒழிந்திருக்கின்றது.

அதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் அதனை மக்கள் ஏற்கக் கூடாது என அவர்கள் கூறுகின்றனர் எனத் தெரிவித்தார். (ம-3,250,281,299)

## மன்னாரில்...

யைச் சேர்ந்த நிஸங்க குமரசிறி தென்னக்கோன் (வயது-33) என்ற 2 பிள்ளைகளின் தந்தையான பொலிஸ் அதிகாரியே உயிரிழந்தவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவுவேளை கடமை நிமிர்த்தம் மன்னார் பொலிஸ் நிலையத்திலிருந்து மடு பொலிஸ் நிலையத்துக்கு மற்றொரு பொலிஸ் அதிகாரி ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் சென்று திரும்பி வந்து கொண்டிருந்தபோது உயிலங்குளம் பகுதியில் வீதியில் நின்ற எருமைமாடு குறுக்கே பாய்ந்ததில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகியுள்ளது.

படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவருடன் விபத்துக்குள்ளான மற்றொரு பொலிஸ் அதிகாரி யாழ். போதனா வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம்பிறேம்குமார்மேற்கொண்டார். (ம-3)

## திரு...

அவர் பேச முன்னர் திருகோணமலையில் ஐந்து மாணவர்களை கொலை செய்தது யார் என்பதை அவர் சொல்ல வேண்டும்.

திருகோணமலை கடற்கரை வீதியில் பல்கலைகழகத்திற்கு தெரிவான ஐந்து மாணவர்கள்கொலை செய்யப்பட்டார்கள். அவர்கள் கொல்லப்பட்ட இரண்டு நாட்களின் பின்னர் அவர்களின் படங்களை எடுத்துக் கொண்டு மகிந்த ராஜபக்ஷவிடம் சென்று, இவர்கள்தான் கொலை செய்யப்பட்ட பிள்ளைகள். யார் கொலை செய்தார்கள், ஏன் கொலை செய்தார்கள் எனக் கேட்டேன். பதில் இல்லை. இன்றும் பதிலில்லை.

நாமல் ராஜபக்ஷ கிளிநொச்சிக்கு வந்து, யாழ்ப்பாணம் வந்து எங்கள் மக்கள் சார்பாக பேசுவதற்கு முன்னர் இந்த இளைஞர்களை யார் கொன்றது என்பதை கூற வேண்டும் என்றார். (ம-3)

## முன்னாள் ஜனாதி...

பளை இராஜேஸ்வரி மண்டபத்திலும் நடைபெறும் மக்கள் சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளதோடு மாலை கிளிநொச்சி பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும் மக்கள் சந்திப்பிலும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,10)

## ரெலோவின் யாழ்...

நமது ஆதரவு சிவாஜிலிங்கத்திற்கே என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது ரெலோ கட்சியின் யாழ் மாவட்டக்குழு.

சில தினங்களுக்கு முன்னர் ரெலோவின் தலைமைக்குழு கூடி, சஜித் பிரேமதாஸ்வை ஆதரிப்பதென முடிவெடுத்துள்ள நிலையில், யாழ் மாவட்டக்குழுவின் இந்த தீர்மானம் கட்சிக்குள் பரபரப்பையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

ரெலோவின் யாழ் மாவட்டக்குழு கூட்டம் நேற்று யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியிலுள்ள கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கட்சியின் செயலாளர் என்.சிறிகாந்தா, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்கள் விந்தன் கனகரட்ணம், சபா.குகதாஸ் மற்றும் யாழ்.மாவட்ட முக்கியஸ்தர்கள் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

நேற்றைய கூட்டத்திற்கு முழுமையான அழைப்பு விடுக்கப்படவில்லையெனத் தெரிகிறது. சுமார் 65 பேர் யாழ் மாவட்டக்குழுவில் அங்கம் வகித்தாலும் சுமார் அரைப்பங்கினரே வந்திருந்தனர்.

இதையடுத்து நடந்த வாக்கெடுப்பில் சிவாஜிக்கு ஆதரவாக 23 பேர் வாக்களித்தனர். யாழ் மாவட்ட உறுப்பினர் விந்தன் கனகரட்ணம், வலி.கிழக்கு தவிசாளர் தியாகராசா நிரோஸ், நிர்மலநாதன், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கஜிதரன் உள்ளிட்ட 5 பேர் அதை எதிர்த்தனர். 4 பேர் நடுநிலை வகித்தனர்.

இதேவேளை, ரெலோவின் நேற்றைய கலந்துரையாடல் நடைபெற்ற யாழ் மாவட்ட அலுவலகத்தின் உள்ளும் வெளியிலும் சிவாஜிலிங்கத்தின் தேர்தல் பிரசார ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## அரசியலுக்காக...

ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற பிரசார கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டவுடன் வடகிழக்கு மாகாணங்களில் தனித்தனியாக விசேட அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு முழுமையாக அபிவிருத்தியடைந்த பகுதியாக மாற்றப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டில் இன வாதம், மத வாதத்தினை ஒழித்து ஒரு இளம் சமூகத்தினைக் கொண்ட நாடாக இலங்கையினை மாற்றுவேன். ஒருபோதும் மீண்டும் இந்த நாட்டில் கடத்தல், கொலை கலாசாரம், போதைப் பொருள் கடத்தல்களை அனுமதிக்கமாட்டேன் எனவும் இதன்போது சஜித் தெரிவித்தார். (ம-3)

## யுத்தத்தை...

கூறினேன். அதை இரண்டரை வருடத்திற்குள் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை கொண்டு வந்தேன் என பொதுஜன பெரமுனவின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-3)

## குற்றச்சாட்டை...

இருப்பதாக விக்னேஸ்வரன் தன்னிடம் தெரிவித்திருந்தார் என தமிழ் அரசியல்வாதி ஒருவர் குற்றம் சுமத்தியதை நிராகரித்துள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் சி.வி.விக்னேஸ்வரன்.

விக்னேஸ்வரன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த கேள்வி பதில் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-3)

























# கோத்தா வெற்றி பெற்றால் இனி...

யின் ஏற்பாட்டில் வவுனியாவில் சஜித் பிரேமதாசவை ஆதரித்து இடம்பெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ந்தும் கொடூரமான குடும்ப ஆட்சியைத் தக்கவைப்பதற்காக, பொதுஜன பெரமுன தரப்பினர் குடும்ப உறுப்பினரான கோத்தபாய ராஜபக்சவை இம்முறை களமிறக்குகின்றனர்.

இந்த வேளையில் இது சிங்கள மக்களுக்கான தேர்தல், சிங்கள தலைவர்களுக்கான தேர்தல் எனவே இந்த தேர்தலை பகிஸ்கரிக்க வேண்டுமென சிலர் கூறுகின்றனர். சிலர் யாருக்கென்றாலும் பரவாயில்லை, வாக்களியுங்கள் என்று கூறுகின்றனர். இவ்வாறான கருத்துக்கள் முற்றிலும் தவறானவை.

எமது குடும்பத்தைக் கொன்றொழித்த ராஜபக்ச குடும்பம் எவ்வாறு 2005ஆம் ஆண்டு ஆட்சிபீடம் ஏறியது என்று நாம் பார்க்கவேண்டும்.

அந்தத்தேர்தலில் எங்களுடைய வாக்களிப்பு தவிர்ப்பினால்தான் ராஜபகஷ குடும்பம் ஆடசிபீடம் ஏறியது.

அவர்கள் ஆட்சி பீடம் ஏறி, எமது இனத்தைக் கொன்றொழித்தார்கள். பல படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்றன. ஒரு கொடூரமான ஆட்சி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இடம் பெற்றது.

ராஜபகஷ குடும்பம் தமிழ் மக்கள் வேண்டமென ஒதுக்கினார்கள்.

அவ்வாறு எந்த மக்களை வேண்டாமென ஒதுக்கினார்களோ, அந்த தமிழ் மக்களாலேயே அவர்கள் ஆட்சியிலிருந்து துரத்தப்பட்டார்கள்.

அவ்வாறு அவர் தோற்கடிக்கப்பட்டபிற்பாடு, நான் ஈழத்தின் வாக்குகளாலேயே தோற்கடிக் கப்பட்டேன் என மகிந்த ராஜபக்ஷ உரை நிகழ்த்தினார்.

எங்களுடைய ஒரே ஆயுதம் வாக்குரிமையாகும். அதை பகிஸ்கரிக்கவேண்டும். அலலது அந்த ஆயுதத்தை பாவிக்கக்கூடாதெனக் கூறுவதற்கு எவருக்கும் அருகதையில்லை.

கடந்த 2005ஆம் ஆண்டுத் தேர்தலின் போது ரணில் விக்கிரசிங்க எமக்கு சமஸ்டி தருவதாக கூறினார். எனினும் நாம் அந்தத் தேர்தலை நாம் வாக்களிக்காது பகிஸ்கரித்தோம். ஆனால் அந்தக் காலகட்டத்தில் எம்மிடம் ஆயுதபலமிருந்தது. தற்போது அந்த ஆயுதபலமும் எம்மிடமில்லை.

வாக்குரிமை என்பது எம்மைப் பாதுகாப்பதற்கான ஆயுதமாகும். அந்த ஆயுதத்தையும் கீழே வைக்கும் படியாக, சிலர் தேர்தலை பகிஸ்கரிக்குமாறு கூறுகின்றனர்.

இந்தத் தேர்தலைப் பொறுத்தவரையிலே 35வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அவ்வாறு போட்டியிடுகின்ற வேட்பாளர்களில்ஒருவர் நிச்சயமாக ஜனாதிபதியாக வருவார். தமிழர்கள் வாக்களிக்கவில்லை என்பதற்காக, ஜனாதிபதி தேர்வுசெய்யப்பட மாட்டார் என்றில்லை. எனவே தமிழ் மக்களும் வாக்களிக்கவேண்டும்.

கோத்தபாய ராஜபக்ஷ என்பவர், ராஜபக்ச குடும்பத்திலேயே மிகவும் மோசமான ஒருவராவர். கடந்த கால யுத்தமும் அவருடையதுதான். கடந்த காலங்களில் இது கோத்தாபாயவின் யுத்தம் என்ற நூலும் வெளியிடப்பட்டது.

எனவே தமிழ் மக்களாகிய நாம், வாக்களிக்காமல் பகிஸ்கரிப்புச்செய்து அத்தகைய கொடூரமானவர்களை மீண்டும் ஆட்சிபீடம் ஏற்றப்போகின்றோமா.

இந்த தேர்தல் வெள்ளத்தை தடுப்பதற்கு அமைக்கப்படுகின்ற பாதுகாப்பு அணைக்கட்டு போன்றது. எனவே அனைத்து தமிழ் மக்களும் சரியான முறையில் இத்தேர்தலைப் பயன்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச எமது மக்களுக்கு சார்பான பல வாக்குறுதிகளை அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்துள்ளார்.

அரசியல்தீர்வு தொடர்பாக, ஒருமித்த பிளவுபடாத நாட்டிற்குள் அதியுச்ச அதிகாரப் பகிர்வு என்று அவர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதி முன்வைத்துள்ளார். இவ்வாறாக வாக்குறுதி வழங்குவதற்காவது அவருக்கு துணிவிருக்கின்றது.

அவ்வாறான தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் வாக்குறுதிகள் எதுவும் கோத்தபாயவினுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் இல்லை. அதற்கான துணிவும் அவரிடம இல்லை.

நாம் கடந்த ஜனவரியில் அரசியலமைப்புத் தொடர்பில், ஒரு திட்ட வரைபை பாராளுமனறில் முன்வைத்துள்ளோம். அதை நாம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி அந்த விடயத்தை நாம் முழுமையாக்கக்கூடிய சூழ்நிலையும் இருக்கின்றது.

சஜித் பிரேமதாசவை வெல்லவைப்பதற்காக அதிகமாக தமிழ்மக்கள் வாக்களிக்க வேண்டும். தமிழ் மக்கள் அனைவரும் ஒருமித்து சஜித் பிரேமதாசவிற்கு வாக்களிக்கவேண்டுமென கோரிக்கையாக கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (ம-3,250,281,299)


## நெல்லியடியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576

அருள்

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி. (C-8109)





## வேலை வாய்ப்பு

- எமது EXPORT நிறுவனத்திற்கு உங்கள் மாவட்டத்தில் இருந்து 50 நபர்களை 06 விதமான பதவிகளுக்கு தீர்மானிக்கவுள்ளோம்.
- மூன்றுமாத கால தகுதிகாண் காலத்தின் போது நாளொன்றுக்கு 750-1500 ரூபாயும் பின்னர் மாதம் ஒன்றுக்கு 45,000 ரூபாயும் பெற்றுக்கொள்ள முடியும்.
- கல்வித் தகைமை : O/L, A/L தோற்றியவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
- குறிப்பு :- இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

ஆர்வமுள்ளவர்கள் உங்கள் பெயர், தே.அ.அட்டை இலக்கம் என்பவற்றை 077 564 4967 என்ற இலக்கத்திற்கு SMS செய்யவும்.

மேலதிக தொடர்புகளுக்கு : 076 711 8479 / 021 722 3317 (918)


# இருண்ட சர்வதிகார ஆட்சியை கொண்டுவர இடமளிக்க வேண்டாம்

## சந்திரிகா வேண்டுகோள்

(புத்தளம்)

இந்த நாட்டில் எவ்வாறெல்லாம் கொள்ளையடிக்க முடியுமோ அவ்வாறு கொள்ளையடித்து நாட்டு மக்களை பிச்சைக்காரர்களாக்கிய ராஜபக்ஷவினரிடம் மீண்டும் ஆட்சியை ஒப்படைக்க வேண்டாம் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆலோசகரும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க புத்தளத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து புத்தளம் கரைத்தீவு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார். இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

யுத்தத்தை தனது அரசாங்கத்திலேயே முழுமையாக நிறுத்தப்பட்டதாக ராஜபக்ஷ சகோதரர்கள் தேர்தல் மேடைகளில் தெரிவித்து வருவதை உங்களால் காணமுடியும். நான் ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் நாட்டில் பல திட்டங்களை நடைமுறைப் படுத்தி, பல அபிவிருத்திப் பணிகளை செய்து 2005ஆம் ஆண்டு நான் இந்த நாட்டை மகிந்த ராஷபக்ஷவிடம் பொறுப்புக் கொடுத்த போது நிதிகூட மிச்சமாகவே இருந்தது. அதன் பின்னர் ராஜபக்ஷ குடும்பம் என்ன செய்தது என்பதை நாட்டிலுள்ள அனைவரும் அறிந்த விடயமே.

நாட்டிலுள்ள எல்லா வளங்களையும் சூறையாடி, கொள்ளையடித்து இந்த நாட்டு மக்களை கஷ்டத்துக்கு உள்ளாக்கி நாட்டையும் ஏழை நாடாக மாற்றினார்கள். ஒரு வீதியைப் போடுவதற்கு பல மில்லியன் ரூபாய்களை செலவு செய்தார்கள். அமெரிக்காவில் கூட ஒரு வீதியை புனரமைப்பதற்கு அவ்வளவு நிதி செலவு செய்யப்படுவதில்லை. ஆனால், மஹிந்த அரசாங்கத்தில் அதை விடவும் ஒன்பது மடங்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வீதிகள் புனரமைக்கப்பட்டது.

சஜித் தலைமையிலான புதிய அரசாங்கத்தில் இவற்றுக்கு நல்ல முடிவு எடுக்கப்படும் என்று வாக்குறுதியும் வழங்கப்பட்டுள்ளது. ராஜபக்ஷ அரசாங்கத்தில் இந்த நாடு பொருளாதார பாரிய பின்னடைவில் காணப்பட்ட போதிலும் இந்த அரசாங்கத்திலேயே அவை மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது.

பொலிஸ் திணைக்களம், நீதிமன்றங்கள் அரசியல் தலையீடுகள் எதுவுமின்றி சுதந்திரமாக இயங்க ஆரம்பித்தது. ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் சுதந்திரமாக தமது கருத்துக்களை தெரிவிப்பதற்கான ஊடக சுதந்திரம் வழங்கப்பட்டது.

எனவே, இவ்வாறானதொரு சுதந்திரமான யுகத்தை கொண்டுவரப் போகிறீர்களா அல்லது இருண்ட, சர்வதிகாரப் போக்குடைய ஆட்சியை மீண்டும் கொண்டுவருவதற்கு வாக்களிக்கப் போகிறீர்களா என்பதை நீங்கள்தான் முடிவெடுக்க வேண்டும். நான் இப்போது முடிவெடுத்து விட்டேன். ஆனால், நீங்கள் சிந்தித்து போடும் ஒவ்வொரு வாக்குகளும் உங்களையும், உங்களது எதிர்கால சந்ததியினரையும் பாதுகாத்து நிம்மதியாக வாழவைக்கும் என்றார். (ம-3)


## அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பு

தோற்றம்
14 . 11 . 1941

மறைவு
12 . 10 . 2019





## அமரர் காத்தமுத்து அரியரத்தினம்

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

கடந்த 12.10.2019 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் காத்தமுத்து அரியரத்தினம் அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளையதினம் 11.11.2019 திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் இன்பர்சிட்டி அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அந் நிகழ்விலும் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 11.30 மணியளவில் நடைபெறும் சபீண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : தயவுகூர்ந்து இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு கேட்டுக் கொள்கின்றோம். (C-8182)

இன்பர் சிட்டி, பருத்தித்துறை.

T.P.No. 077 269 5187

தகவல்: குடும்பத்தினர்



## காணி விற்பனை

திருநெல்வேலி ஆடியபாதம் வீதி, முருகனார் வீதியில் (இராமசாமி சந்தி) 27 பரப்பு காணி மொத்தமாகவும் துண்டுகளாகவும் விற்பனைக்கு உண்டு. (907)

தொடர்பு:- 077 728 6061

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg





DELIVERY IN 3-5 DAYS

0768226240 (C-8115)

V2 TRAVELS

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- நெல்லியடி
- கொடிகாமம்
- வல்வெட்டித்துறை
- பருத்தித்துறை
- மானிப்பாய்
- திருகோணமலை
- சாவகச்சேரி
- சுன்னாகம்
- மருதங்கேணி

## வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி (C-8116)

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் – மீசாலை – கிளிநொச்சி – கனகராயன்குளம்
முல்லைத்தீவு – மன்னார் – வவுனியா – திருகோணமலை

## காணி விற்பனை

மல்லாகம் சந்தியின் அண்மையில் K.K.S வீதி, மல்லாகம் நீதிமன்று வீதியை இணைக்கும் கோணப்புலம் குறுக்கு வீதியில் வீதி ஓரமாக 17 1/2 பரப்புக் காணி கிணற்றுடன் உடன் விற்பனைக்கு.

தொடர்பு (C-8184)

075 041 4028


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 241

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 | 10.11.2019 | தொலைபேசி : 021 222 3378



# தேர்தல் படோபகாரம்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## விளையாட்டுப் போட்டியில நடந்த ஆள் மாறாட்டத்தைப் பார்த்தியளோ

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்து சேர்ந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

மூத்த பத்திரிகையாளர் பி.எஸ். பெருமாள் அவர்கள் காலமாகி விட்டார். அவரின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் என்று கூற, மீண்டும் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

விபத்தில் காயமடைந்திருந்த கங்காணி கார்த்திகேயனும் ஆலடியில் அமர்ந்திருந்தார். இப்ப எப்படி இருக்குது. விதானையார் விசுவலிங்கம் கங்காணியாரிடம் விசாரித்தார்.

**கங்காணி:** கால் எலும்பு முறிந்ததால அது பொருந்துறதுக்கு இன்னும் சில மாதங்கள் எடுக்குமாம்.

**மூப்பர்:** விபத்தில உயிரிழப்பு மட்டுமல்ல அங்கவீனமும் ஏற்படுகுது. இருந்தும் அங்கவீனம் பற்றி யாரும் கவனம் எடுப்பதாகத் தெரியவில்லை. ஒரு குடும்பத் தலைவன் விபத்தில காயப்பட்டு ஆறு மாதம் படுக்கையில இருந்தால் அந்தக் குடும்பத்தின் கதி என்ன?

**சாத்திரியார்:** ஐயோ கடவுளே வீதியில இறங்கவே பயமாக இருக்குது. அந்தளவுக்கு வாகன நெருக்கடி ஒருபுறம், இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில ஓடித் திரிகிற மாயா ஜாலம் மறுபுறமாக எல்லாம் பயங்கரமாக இருக்குது.

**சிறாப்பர்:** உண்மைதான். இப்ப எல்லாமுமே பயங்கரம் தான்.

**விதானையார்:** சிறாப்பர் சொல்லுறதுக்குள்ள ஏதோ இருக்குது.

**சிறாப்பர்:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் இறுதி வருட மாணவன் ஒருவர் அண்மையில உயிரிழந்துள்ளார். இத்தகைய மரணங்களைக் கேட்கும் போதெல்லாம் பயங்கரமாகத்தானே இருக்குது.

**வாத்தியார்:** நானும் இதுபற்றிக் கதைக்க வேணும் எண்டு நினைத்தனான்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் சதீஸ்குமார் முதல் ஒவ்வொரு வருடமும் குறைந்தது ஒரு மாணவராவது தங்கட உயிரை மாய்த்துக் கொள்ளுகினம். இது தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஓர் ஆய்வு நடவடிக்கையைச் செய்ய வேணும்.

**பண்டிதர்:** யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்து மாணவர்கள் ஒரு சிலர் உயிரை மாய்த்துள்ளனர் என்பதற்குள் ஏதோ நெருக்கடிகளும் அதில் இருந்து அவர்கள் மீள முடியாத அளவில் கஷ்டங்களும் இருக்குது என்பதைக் கூறித்தானாக வேணும்.

எனவே இது விடயத்தில யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் சரியானதொரு விசாரணைக் குழுவை நியமித்து, மாணவர்களுக்கு ஏற்படுகின்ற உள நெருக்கீட்டிற்கான காரணங்கள் பற்றி அறிய வேணும்.

இதை விட்டிட்டு கறுத்தக் கொடி கட்டி உயிரிழந்த மாணவருக்காகக் கவலை வெளியிடுகிறதால எதுவும் நடக்கப் போறதில்லை.

எனவே இது விடயத்தில யாழ்.பல்கலைக்கழக பேரவை கட்டாயம் கவனம் எடுக்க வேணுமெண்டு ஆலடி மாநாட்டில கேட்டுக் கொள்கிறம்.

(ஆலடி மாநாட்டில மேற்படி தீர்மானம் எடுத்த பின்பு சில நிமிடம் மௌனம் நிலவியது. அந்த மௌனத்தை விதா னையார் விசுவலிங்கம் கலைத்தார்).

**விதானையார்:** அண்மையில நடந்த வலைப்பந்தாட்டப் போட்டியில யாழ்.மாவட்ட செயலக ஆண்கள் அணி ஆள் மாறாட்டம் செய்தது பற்றித்தானே எங்கும் கதையாக இருக்குது.

**மூப்பர்:** என்னைப் பொறுத்தவரை இந்தச் சம்பவத்திற்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் தான் பொறுப்பேற்க வேணும். ஆள் மாறாட்டம் செய்தமைக்காக யாழ்.அரச அதிபர் மன்னிப்புக் கேட்க வேணும்.

இந்த ஆள் மாறாட்டச் சம்பவம் யாழ்.மாவட்ட செயலகத்தின் வரலாற்றில ஏற்பட்ட ஒரு கறுப்புப் புள்ளி.

**கங்காணி:** ஏன் மூப்பர் 2015 ஆம் ஆண்டிலும் ஆள் மாறாட்டம் நடந்தது தானே. இவ்வாறு கங்காணியார் கூற அவசரப்பட்ட வாத்தியார் இதுகளைப் பற்றி இஞ்ச கதையாதீங்க.

2015 ஆம் ஆண்டில ஒரு செய்தி போட்டதுக்காக, யாழ்.மாவட்ட செயலகத்தின்ர விளம்பரங்கள் அனைத்தையும் வலம்புரிக்குத் தராமல் யாழ்.அரச அதிபர் தடுத்துப் போட்டார்.

வடமாகாணத்தில அதிகளவான வாசகர்களைக் கொண்ட வலம்புரிப் பத்திரிகைக்கு யாழ். மாவட்ட செயலகத்தின்ர விளம்பரத்தைத் தராமலே யாழ்.அரச அதிபர் தடுத்தவர். ஆகையால இஞ்ச ஒருத்தரும் இது பற்றிக் கதையாதீங்கோ. திரும்பவும் பழி தீர்த்துப் போடுவினம்.

**சாத்திரியார்:** அப்ப வலம்புரி போட்ட செய்தி சரி என்பது இப்ப உறுதியாகி இருக்குதுதானே.

**சிறாப்பர்:** அதுசரி மன்னார் திருக்கேதீச்சர நுழைவாயில் வளைவு கட்டப்படுமோ.

**கங்காணி:** அதெங்க நடக்கப் போகுது.

**விதானையார்:** இந்து சமயப் பேரவை ஒரு கூட்டம் போட்டதல்லோ. அந்தக் கூட்டத்தில என்ன தீர்மானம் எடுத்தவியள்.

**பண்டிதர்:** யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கூட்டம் போட்டு ஐந்து தமிழ் கட்சிகளைக் கூட்டி ஒன்றுபடுத்தினவியள் அல்லோ. அது மாதிரித்தான் இந்து சமயப் பேரவையின்ர கூட்டமும் நடந்திருக்குதாம்.

**வாத்தியார்:** ஆலடி மாநாட்டில இண்டைக்கு ஒரு முக்கியமான தீர்மானம் எடுக்க வேணும்.

வாத்தியார் திடீரென அறிவித்ததும் என்ன? வாத்தியார் திடீரென அறிவிக்கிறார். தேர்தலில யாருக்கு வாக்களிக்க வேணும் என்பது பற்றி ஏதேனும் முடிவெடுக்கப் போகிறாரோ சாத்திரியார் சதாசிவம் கூற,

சிசீ...அப்படியொரு தீர்மானத்தையும் நாங்கள் சொல்ல மாட்டம். நான் சொல்ல வந்தது மரணமடைந்தவர்களின் இறுதி ஊர்வலத்தில சீனவெடி கொளுத்துறது பற்றித் தான்.

இப்ப இறுதி ஊர்வலங்களில கொளுத்தப்படுகிற சீன வெடிகளால சூழல் மாசடையிறதோட, வீதியால போற வாற சனங்களும். மிகப் பெரும் அசௌகரியங்களைச் சந்திக்கினம்.

ஆகையால இறுதி ஊர்வலத்தில சீனவெடி கொளுத்திறதை தவிர்க்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஆலடியில எடுப்பம். இப்படி வாத்தியார் கூற, அந்தத் தீர்மானத்திற்கு அனைவரும் தங்களின் ஆதரவைத் தெரிவிக்க, ஆலடிப் பிள்ளையாரும் தனது ஆதரவைத் தெரிவிப்பது போல கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடு கண்டோம்






எதிர்வரும் 16 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற இருக்கிறது.


இதற்கு முன்னதாக தபால் மூல வாக்களிப்பு நடைபெற்றுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் யாரை ஆதரிப்பது என்ற வினாவுக்கு ஒரு சரியான முடிவைக் காண்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டனவாயினும் அந்த முயற்சிகள் எப்படியாக முடிந்து போனது என்பது யாவரும் அறிந்ததே.

உண்மையில் தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றுபடுத்தி அனைத்துத் தமிழ் கட்சிகளும் ஒன்றுபட்டு எடுக்கக் கூடிய தீர்மானம்; ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் யாரை ஆதரிப்பது என்ற வினாவுக்கு விடையாக அமையும் என எதிர்பார்க்கப்பட்டது.

இதனடிப்படையில் சுயாதீனக்குழு தமிழ் அரசியல்





கட்சிகளைச் சந்தித்து ஒரு உடன்பாட்டை ஏற்படுத்த முற்பட்டது.

எனினும் அந்த முயற்சி கைகூடுவதற்கு முன் னதாக யாழ்.பல்கலைக்கழக மாண்வர் ஒன்றியம் காய்க்குள் பழம் ஓடிய கதையாக தாம் தலையிட்டு தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றுபடுத்து கின்ற முயற்சியில் இறங்கியது.

இதன் காரணமாக தனது முயற்சியை சுயாதீனக் குழு ஒத்தி வைத்தது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒற்றுமை முயற்சி எவ்வாறாக முடிந்து போனது என்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையில்லை.

இவை ஒரு புறமிருக்க, 13 அம்சக் கோரிக்கை என்ற விடயத்தை ஜனாதிபதி வேட்பாளர்கள் நிராகரிப்பதற்கு முன்னதாக, தமிழ் அரசியல் கட்சிகள் அதனைக் கைவிட்டன என்று கூறுவது தான் பொருத்தப்பாடாக இருக்கும்.

இப்போது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் யாரை ஆதரிக்க வேண்டும் என்ற முடிவுகளை தமிழ் அரசியல் கட்சிகள் அறிவிப்புச் செய்கின்றன.

இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதெனத் தீர்மானித்தது.

கூடவே தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), ரெலோ என்பனவற்றின் தனித் தனித் தீர்மானங்களும் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு என்பதாக அமைய, ஒட்டுமொத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானமும் சஜித் பிரேமதாஸவுக்கான ஆதரவாக இருந்தது.

இங்கு ரெலோவின் போக்கு சற்றுக் குழப்பத்தை ஏற்படுத்தி இருந்தது.

அதாவது தமிழரசுக்கட்சி வவுனியாவில் கூடி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதென தீர்மானித்து தனது முடிவை வெளிப்படுத்தியது.

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தீர்மானத்தைப் பார்த்த ரெலோவின் செயலாளர் நாயகம் உடனடியாக தமது தரப்புச் செய்தியை விடுத்தார்.





தமிழரசுக் கட்சியின் முடிவு ரெலோவின் முடிவன்று. ரெலோ தனியாகக் கூடி முடிவெடுக்கும் என்பதாக அவரின் கருத்து இருந்ததுடன் அந்தக் கருத்தில் தமிழரசுக் கட்சியின் தீர்மானத்தில் ஒரு உடன்படாத் தன்மையும் வெளிப்பட்டிருந்தது.

இந்நிலையில் ரெலோவின் தீர்மானம் வேறாக அமையப் போகிறது என அரசியல் நோக்கர்கள் கருதிய போதிலும் ரெலோவும் தனது மத்திய குழுவைக் கூட்டி சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது என முடிவு செய்தது.

இதனோடு ஜனநாயகப் போராளிகள் கட்சியும் சஜித்தை ஆதரிப்பது என அறிவித்தது.

இவை ஒருபுறமாக இருக்க, மறுபுறத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் ஆகியோர் கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரித்து தமது கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

தவிர, யாருக்கு வாக்களிப்பது என்ற தீர்மானத்தை தமிழ் மக்களே எடுப்பார்கள் என தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்று சுட்டு விரலால் காட்டுவதற்கு எவரும் 13 அம்சக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.

13 அம்சக் கோரிக்கையை ஏற்றுக்கொள்பவரை ஆதரிப்பது என்றே ஐந்து தமிழ்க் கட்சிகளின் கூட்ட த்தில் தீர்மானிக்கப்பட்டது.

எனவே அந்தத் தீர்மானத்தின் படி 13 அம்சக் கோரிக்கையை ஜனாதிபதி வேட்பாளர்கள் ஏற்றுக் கொள்ளாத நிலையில், யாரை ஆதரிப்பது என்ற முடிவை தமிழ் மக்களிடம் விட்டு விடுவதுதான் பொருத்தம் என்ற வகையில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் கருத்து அமைந்திருந்தது.

இதன் வழியில் சுரேஷ் பிரேமச்சந்திரனின் கருத்தும் அமைவதைக் காண முடியும்.


எது எவ்வாறாயினும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இவரைத் தெரிவு செய்தால் நல்லது என்று கூறுமளவிற்கு எவரும் இல்லை என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

அதேநேரம் பெயர் குறிப்பிட்டு இவரை ஆதரியுங்கள் என்று கூறுவது ஒரு அரசியல் கட்சியின் கடமையாக இருக்க வேண்டும் எனக் கருதப்பட்டாலும் அவ்வாறு பெயர் குறித்துக் கூறுகின்ற போது, தேர்தல் முடிவு வேறு விதமாக அமைந்தால், ஆட்சிக்கு வருபவர் தமிழ் இனத்தை வஞ்சம் தீர்ப்பது பற்றியே சிந்திப்பார்.

எனவே அவர் இவர் என்றில்லாமல் தமிழ் மக்கள் எடுக்கின்ற முடிவுக்கு நாம் தலைசாய்ப்போம் என்பதாகக் கருத்துக்கள் அமையும் போது அது அரசியல் பகைமையைத் தவிர்ப்பதாக இருக்கும்.

திருநீலகண்டன்


வடக்கின் துரித
விவசாய மீள்எழுச்சி
வட மாகாண மக்களுக்கு
முன்னாள் விவசாய பிரதியமைச்சர்
கௌரவ அங்கஜன் இராமநாதன்
முன்னெடுத்த
செயற்றிட்டங்கள் சில
பழச்செய்கை ஊக்குவிப்பு
1000 குளங்கள், 1000 கிராமம்
புனரமைப்பு
10 இலட்சம் மரக்கன்றுகள்
நடுகைத்திட்டம்
விவசாயக் கிணறுகள்
புனரமைப்பு
Banana Processing
Jaffna
விவசாய வீதிகள், வேலிகள்
அமைத்துக்கொடுத்தல்
மானிய விலையில் நீர்ப்பாசன தொகுதி,
வெங்காயக் கொட்டில்கள் வழங்கல்
பழங்கள் பதனிடும்
நிலையங்கள் நிறுவுதல்
Ministry of Agriculture
வீட்டுத் தோட்டங்களை ஊக்குவித்தல்
உருளைக்கிழங்கு உற்பத்தி
அபிவிருத்தி வலயங்கள்.
X








எந்த ஜனாதிபதி வேட்பாளரும் தமிழருக்கு நன்மை பயக்கும் திட்டங்களை தமது விஞ் ஞாபனத்தில் உள்ளடக்கவில்லையே?

**அருட்கதிர் — துன்னாலை**

**ரோசம் கெட்டவன் இராசாவிலும் பெரியவன் என்கிறார்களே?**

சிலரைப் பாருங்கள் வாக்குறுதிகளை அள் ளித் தெளித்துக் கொண்டே இருப்பார்கள். ஆனால் தீபாவளி, புதுவருடம், பொங்கல் கடந்து கொண்டே இருக்கும். ஆனால் அவர் களின் இந்த அடித்து விடுதல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

**நீலாம்பரி — விசுவமடு**

**சஜித் தோல்வியடைந்தால் கூட்டமைப் பின் நிலை என்ன?**

தயவு செய்து மேலே இருக்கும் கேள்வியை வாசித்து விட்டு வாருங்களேன்... வாசித்து விட்டீர்களா?

இரண்டு வேட்பாளர்கள் இருவரில் யார் ஜனா திபதியாக வருவார் என்பதை கணிக்க முடி யாத அளவில் இருக்கிறது போட்டி.

இந்த நிலையில் தமிழர்களின் ஒட்டுமொத்த ஆதரவும் ஒருவருக்கு வழங்கப்படும் சந் தர்ப்பத்தில் ஒருவேளை அந்த முடிவு தோல் வியில் முடிந்தால் எதிர்த்தரப்பிடம் நாம் பேச முடியுமா?

மீண்டும் பழைய குருடி கதவைத் திறவடி என்பதாய் எதிர்ப்பரசியல் போதுமடா சாமி.

**சேகர் — மானிப்பாய்**

**சினிமாப் பாணி கொலை, கொள்ளை தொடர்ந்து கொண்டே இருக்கிறதே?**

எம் இளைஞரிடம் சினிமா பொழுதுபோக்கு என்பதை மீறி வாழ்வியல் என்பது தொற்றிக் கொண்டு விட்டது.

ஒருவரின் படம் வெளியாகும் போது பாரிய போஸ்டர் அடித்து அதற்கு பாலாபிஷேகம் செய் கிறார்கள் என்பதை வியப்பாகப் பார்த்த நாம் அதை இப்போது முன்னே பார்க்கிறோம். சினிமா ரசனை இருக்க வேண்டும்.

அதற்காக இப்படிப்பட்ட முட்டாள்தனங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவையல்ல. அதிலும் நாம் கொடிய போரினால் நொந்து நூலாகி மீண்டெழத் துடிக்கும் இனம் என்பதை மறந்து செயற்படக் கூடாது.

சமூகவிரோதச் செயற்பாடுகள் அனைத்திற்கும் முக்கிய காரணம் சினிமாவே.

புலிகள் வேறு, தமிழர்கள் வேறா?

**இன்பன் — வடமராட்சி**

**தமக்கு அடிபட்டால் வலிக்கிறது என்று துடிக்கும் மனிதர் மற்றவர் துடிக்கும் போது ரசிக்கிறார்களே?**

இதுதான் தற்போதைய நவீன மனிதன். உனக்கு வந்தால் இரத்தம், எனக்கு வந்தால் தக்காளிச் சட்னியா என்பது போலத்தான் இதுவும்.

மனதில் கோர குணங்களை பதுக்கி வைத்துக் கொண்டு பற்களை சிரிப்பதற்கு மட்டும் பயன்படுத்திக் கொண்டிருக்கும் இந்த மனி தரிடம் அன்பு, கருணை, விட்டுக்கொடுப்பு, இம்மியும் இல்லை என்றே கூற வேண்டும்.

தாய் அல்லது தந்தை இறந்து விட அதை பேஸ்புக்கில் பதிவிட்டு அதற்கு எத்தனை லைக் கொமன்ற் வந்தது என பார்த்து ரசிக்கும் கொடூர மனநிலை எம்மிடம் எப்படித் தொற்றிக் கொண்டது. ஏனென்றால் தமிழினம் அப்படிப் பட்டதில்லையே.

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள்

**021 567 1532**

என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்

**தர்மா — கொடிகாமம்**

**எந்த ஜனாதிபதி வேட்பாளரும் தமிழருக்கு நன்மை பயக்கும் திட்டங்களை தமது விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கவில்லையே?**

என்ன செய்ய தமிழர் சிறுபான்மை இனமாகி விட்டதே. தமிழர் உரிமை சார்ந்த விஞ்ஞா பனம் யார் வெளியிட்டாலும் அதை வைத்து எதிர்ப் பிரசாரம் செய்து அவரை வீழ்த்தும் அளவில் இருக்கிறது நிலை.

தெற்கைப் பொறுத்தவரை தமிழருக்கு உரிமை கொடுத்தால் அது தமிழீழம் மலர்வதற்கு சமம் எனும் மனநிலையே.

இந்தக் குறுகிய வட்டத்திற்குள் தான் சிங்கள மக்கள் இருக்கிறார்கள்.

தமிழர் என்றால் பயங்கரவாதிகள் என்று சிந்திக்கும் அவர்கள் தமிழர் ஏன் போராடத் தலைப்பட்டனர் என்று சிந்திக்கிறார்கள் இல்லை. இதுவே எமக்கான தீர்வு தள்ளிப் போகக்காரணம் ஆகிறது.

சினிமாப் பாணி கொலை, கொள்ளை தொடர்ந்து கொண்டே இருக்கிறதே?

**மது — யாழ்ப்பாணம்**

**யாழ்ப்பாணத்தில் பார்க்கும் இடமெல்லாம் குப்பை நிறைந்து கிடக்கிறதே?**

எங்களிடம் இருக்கும் குப்பை முகாமைத் துவம் அந்தக் குப்பைகளை எடுக்க விடுகிறது இல்லை போலும்.

அண்மையில் ஒரு வீட்டுக்கு சென்றிருந்தேன். வாசலில் ஒரு உரப்பை இருந்தது. அந்த வீட் டுக்கார அம்மா சொன்னார் குப்பையை ரக் டருக்கு கொடுத்தன். தரம் பிரிச்சுத் தரட்டுமாம்.

நான் வாங்கி வைச்சிட்டன். பின்னேரமா கொண்டுபோய் அந்தச் சந்தியில் போட்டிட்டு வந்திடுவன். அதை அவைதானே எடுப்பினம்.

அதிகாரிகளே இப்போது புரிகிறதா ஏன் வீதி களில் குப்பை நிறைந்து கிடக்கிறது என்பது? சிந்தியுங்கள் எமது நகரத்தை குப்பை இன்றி அழகாக வைத்திருக்க இப்போது இருக்கும் திட்டம் சரிதானா என்பதை.

**தர்ணிகா — கௌந்தில்**

**ஒரு அரசு செய்த இனப் படுகொலையே இன்னொரு அரசு காட்டிக் கொடுக்குமா?**

காலம் காலமாக எமக்கான உரிமைகளைத் தருவதாகக் கூறி எம்மை ஏமாற்றும் ஆட்சி யாளர்கள் எமக்கான எதையும் தரப்போவது இல்லை.

முடிந்தவரை எம்மவர்களை விலைக்கு வாங்கி குருவீச்சையாய் ஒட்டி, உறிஞ்சும் வரை உறிஞ்சிவிட்டு தூக்கி எறிந்து விடுவார்கள்.

தேர்தல் என்று வரும்போது தரும் வாக்குறு திகளை தூக்கி எறிந்து விட்டு அவரைக் காட்டிக் கொடுக்கேன், இவரை மின்சாரக் கதிரையில் இருந்து காத்தேன், சர்வதேச நீதிமன்றம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்று உறு முவார்கள். எமக்கான நீதி மறுக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

**திகளன் — யாக்கரு**

**புலிகள் வேறு, தமிழர்கள் வேறா?**

பால் சுத்தமான தனிப்பாலாகத்தான் இருந் தது. அதில் கொஞ்சம் கொஞ்சமாக நீர் கலக்கப்பட்டது. பாத்திரம் நிறைய ஆரம் பித்தது. பார்ப்பவர்கள் வியந்தார்கள். அடடா இவ்வளவு பாலா என..

ஆனால் அதில் நீர்தான் நிறைகிறது என்று யாருக் கும் தெரியவில்லை. இறுதியில் பாத்திரத்தில் இரு ந்த நீர் சிந்த ஆரம்பித்தது. சுத்தமான பால் காணாமல் போகிறது. நீர் தன் வேலையை முடித்து விட்டேன் என்று சந்தோசத்தில் சன் மானத்தை வாங்கிக் கொண்டு ஆவியானது. புரிகிறதா எனக்கும் புரியவில்லை ஏதோ எழுதிவிட்டேன்.


## மானம் கெட்ட பிழைப்பு இது

இறப்புக்களும் இழப்புக்களும்
கணக்கற்று நிகழ்ந்த மண்ணில்
மறப்பதற்கும் மன்னிப்பதற்கும்
வாய்ப்பு இல்லை
மானத்துக்காக உரிமைக்காக
மடிந்தவர்களோ ஏராளம்
இதற்குள் எல்லாம் மறந்து
ஈனத்தனமாக
கைகோர்ப்பவர் சிலரும்
இருக்கத்தான் செய்கின்றனர்
ஒன்றரை இலட்சம் பேர்கள்
இன்னுயிர்களை இழந்தார்கள்
ஓரிலட்சம் பெண்கள்
துணைகளை இழந்தார்கள்
அங்கங்களை இழந்து அன்றாடம்
அவலப்பட்டு வாழ்பவர் ஆயிரமாயிரம்
மாளிகையில் புரண்டவருக்கு
அன்று நிகழ்ந்த
மரண ஓலங்கள்
கேட்க வாய்ப்பில்லை
அபிவிருத்திக்காக
அற்ப சலுகைக்காக
அவற்றை மறப்பதற்கும்
இனி வாய்ப்பு இல்லை
இறந்து போனவர்களின்
கல்லறைகளையே
உழுது புரட்டிய உத்தமர்கள்
அவரை
மறந்தும்கூட அந்த ஆத்மாக்களும்
மன்னிக்காது- இதற்குள்
"எமக்கு வாக்குப் போடுங்கள்
எல்லாமே தருகிறோம்"
போலிகளின் புலம்பல் வேறு

வாணியழகன், கிளிநொச்சி

## சொந்த மண்ணை முத்தமிட்டு

சி.கிருஷ்ணவேணி
வயாவிளான் தெற்கு,
வயாவிளான்.



எண்பத்தாறில் ஓர்நாள்
ஏதிலிகளாய்ப் புறப்பட்டோம்
வட்டமடித்தன வானத்தில் வல்லூறுகள்
கொட்டமடித்தன துப்பாக்கிச் சன்னங்கள்

சடசட வெனவே குண்டுகள் பாய்ந்திட
படபட வெனவே நெஞ்சம் துடித்திட
கடகட வெனவே கிடைத்ததை அள்ளி
தடதட வெனவே தாவியே வந்திட்டோம்

அகதி என்ற பெயர் சுமந்து
அனு தினமும் நொந்து நின்றோம்
சகதியாய் போருக்குள்
சடுதியாய் சிக்குண்டோம்

ஊரான ஊரிழந்தோம்
பாராளும் பண்பிழந்தோம்
தயாள குணம்மிகுந்த
வயாவி ளான்தனையிழந்தோம்

கல்லடி வேலன் கல்விச்சாலை
பல்லோர் போற்றும் ஆலயங்கள்
தேவ நற்கருணை தேவாலயங்கள்
பாவத்தின் சுமைகளாய்ப் பறிபோயினவே

ஊர் திரும்ப முடியவில்லை
ஊற்றெடுக்கிறது பேராசை
ஓய்ந்துவிட்டது போரோசை
எம்வாழ்வில் விடியவில்லை

வாழ்வின் ஒளியாய் செம்மண்ணும்
பசி போக்கிடும் நன்னீரும் இழந்து
முகாம்களில் முகம் புதைத்து
முகவரி தொலைத்து விட்டோம்

ஆமையாய் ஊமையாய் வாழ்ந்து
அடிமையாய் குடிமையாய் ஒடுங்கி
நெடுமையாம் காலம் விழித்து
கடுமையாய்க் கனல்கிறது நெஞ்சம்

உயிர் பிரியும் வேளைதனில்
சொந்த மண்ணை முத்தமிட்டு
சொந்தங்களே புடைசூழ
சொர்க்கலோகம் செல்லவேண்டும்

என்னிறுதி ஆசைதனை
நிறைவேற்றி வைப்பவர் யார்?
கடவுள்தான் கண்திறந்து
கருணைதனைக் காட்டிடாரோ?

## மத்தாப்பூ

த.லக்ஸ்மன்
நல்லூர்

சின்ன தீபம் சிதறிப் பறந்திட
சிந்திட்ட துளிகள் விசித்திரமாய் காட்டிட
நீட்டு குச்சியில் பூசிய நிறங்கள்
வீசிடும் மின்னலாய் கண்ணைப் பறித்திட
அகரவரிசையும் அறியா மழலை
அந்தர வெளியில் அற்புதம் காட்டிட
காற்றில் கூட சித்திரம் வரைய
சின்னக் கரங்கள் விரும்பி வேண்டிட
சரசர செடியை மத்தளமாக்கி
சிந்திய மணிகள் நர்த்தனம் ஆடி
ஒற்றைத் தண்டில் வெள்ளைப்பூக்கள்
ஒன்றாய் சேர்ந்து மிளிர்வது போல
தீபாவளிக்கு ஏற்றிய மத்தாப்பு
சின்னச் சிறகை விரித்துப் பறந்திடும்
மின்மினி போலக் கண்டவர்
கண்களைக் கொள்ளை கொள்ளுது

## அரசியல் பிழைத்தோர்க்கு.... 03

சாணக்கியம் சாணக்கியம் என்று
சறுக்குமாய்ப் போல் சறுக்குவார்
சறுக்க மாட்டார்
சறுக மாட்டார்
வறுகுவதில் மட்டும் நேர்த்தி

உண்மை நேர்மை என்பார்
உரிமை வேண்டும் என்பார்
தேர்தல் வந்து விட்டால்
ஆதாயம் தேடி
அங்குமிங்குமாய் தாவித்தாவி
ஈருமருளாமல் நிறைப்பார்
அவர் தம் வங்கிக் கணக்கை

'இந்தா வருகிறது தீர்வு'
இவரின் தாரக மந்திரமிது
இதுவரை அவரின் தீர்வு
இழுப்பாணியாய்ப் போனதே தவிர
இதமாய் வந்ததில்லை

நல்லதாய் மலர்ந்த ஆட்சி
நடுவில் முட்டி நிற்க
முதலாளாய்ப் போய் நின்று
முட்டுக் கொடுத்து நின்றார்
முதுகில் தாங்கி நின்றார்

நல்லா இருப்பியளோ நீர்
நாசமாய்ப் போவீரென்று - சனம்
மண்ணை அள்ளித்திட்ட
மனுசன் மீண்டும் சொல்கிறது
'இந்தா வருகிறது தீர்வு'

மாவை. நா.கஜேந்திரா

## மௌனத்தின் தேடல்- 471




## கலங்காதே

வெள்ளைச் சட்டையொடு
முட்கம்பிவேலிதனைக்
கையில் பிடித்தபடி
பள்ளிப் பருவப்பெண்ணே!
ஏன்– உன் கண்ணில் சோகம்
எதற்கும் கலங்காதே!
உன் துயரினைப் போக்கிட
நாளை நிலைமை மாறும்
நம்பிக்கை கொண்டிடுவாய்
நன்றாகப் படித்திடுவாய்

கே.முத்துராஜா
பெரியகுளம்

## மௌனத்தின் தேடல் -472



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## புத்தூக்கம் மீண்டெழுக

படை முகாமின்
பயங்கரம் முட்கம்பி
எட எங்கு தொடினும்
எகிறிப் பாயும் குருதி
எட்டுத் திசையும்
எதிர்த்து நிற்கும்
அரிவாள் கூராய்
பதுங்கும் படைக்குப்
பாதுகாப்பெனில்
பிதுங்கும் விழி ஏன்
புத்தூக்கம் மீண்டெழுக

கந்தபாலன், நல்லூர்.

## புண்ணியம்

ஏய் மனிதா! உலகில் ஆயிரமாயிரம்
அன்னசாலைகளை அமைப்பதைவிட
நாம் ஒரு கல்விக் கூடத்தை
அமைப்பது சிறந்தது
அதனால் இந்த ஏழைச்சிறுமியின்
கல்வித் தாகம் தீர்ந்திடும் நம்
வாழ்வில் புண்ணியம் சேர்ந்திடும்

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## வஞ்சிக்கும் நெஞ்சங்கள்

விழிப்புலன் இழந்த பாவியான
இப்பாவைமீது
பரிதாபமில்லாவிடினும்
வழித்துணைதான் வழங்காவிடினும்
வலதுகுறைந்த பாவையிவளின்
வலிவேதனைகள் உணராத
வஞ்சனை மிகுந்த நெஞ்சங்கள்
நிறைந்த காலமிதுவா?

தங்கத்தமிழன்
காரைநகர்

## மனிதம் மலரும் எம்மண்

தனித்துவிடப்பட்டுத்
தவிக்கும் நிலைமையினை
இனியும் தமிழ் மண்ணில்
எழுதற்கே நியாயமில்லை
கனிந்துனது வாழ்வு
கல்வியினால் சிறக்கட்டும்
மனிதம் மலர்ந்த எம்மண்
மதிப்புத்தரும் துணிந்திடுக

த.சிவகாமி, நல்லூர்

## கண்கொத்திப் பறவை உனை...

கண்ணிலே சோகம்
முட்கம்பிக்குள்
சிறைவாசம்
விண்ணிலே ஒளிரும்
வெண்ணிலவு முகத்தில்
உண்ண உணவுமில்லை
உறவுக்கு துணையுமில்லை
எண்ணம் ஏங்கிற்றோ
ஏதேனும் கண்கொத்திப்
பறவை உனைவட்டமிடுமோ
பெண்மை பெரு நீயே
பிறப்பால் உயர்ந்தாய் உணர்
கண்திறக்கும்
உனக்கு உய்யும் வழி

தணிகைவாசன்
தாவடி

## தடைகளைத் தகர்த்தெறி பெண்ணே!

பாரதி கண்ட புதுமைப்பெண்ணே
பாராள விரைந்து வா– நீ
பகைவரை உன் பார்வையாலே
எரிக்கும் சக்தி–நீ
வீரத்தின் விளைநிலம் நீ
ஈழத்தாயின்
வீரத்தமிழ்மகள் நீ
விரைந்து வா பெண்ணே
உன் எதிரே உள்ள
தடைகளைத் தகர்த்தெறி
கல்வி எனும் ஆயுதமேந்தி
பகைவரை கூண்டோடு எரிக்கும்
நீதிதேவதையாக விரைந்து வா நீ

கண்மணி
உரும்பிராய்

## இனியாவது இனி

தொட்டதெல்லாம்
தொல்பொருளென்று
சொல்லிச்சொல்லி
தொல்லை பல தந்து
முள்வேலி போடுவதும்
கள்ளத்தனமான
காடழிப்பைச் சிறிதும்
கண்டுகொள்ளாமல்
வாழும் காணி நிலங்களை
காட்டுடன் சேர்ப்பதும்
நித்தமும் நடக்கையில்
சத்தத்துடன் நெருங்கி வரும்
தேர்தலில் தெரிவாகக்கூறும்
தேன் போன்ற வார்த்தைகள்
புளிப்படையாதிருக்க
இனியாவது வரவேண்டும்
இங்கு புனிதர்கள்

க.நாகராசா
நுணாவில்



சிறுகதை

# ஆச்சியின் ஆலோசனைகள்

அந்தக் கிராமத்தில் வயது கூடியவரென எல்லோராலும் மதிக்கப்படுபவர் செல்லாச்சியேதான். இவவுக்கு செல்லாச்சி என்ற பெயர் இருந்தபோதும் தற்போது ஆச்சி என்றே யாவரும் அழைப்பார்கள்.

ஆச்சிக்கு இப்போது நூறு வயதை எட்டிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இவவைப் பார்ப்பவர்கள் எவராயினும் நூறு வயதென்பதை நம்பமாட்டார்கள். முதுமையை எடுத்தியம்பாத சில கோலங்களும் ஆச்சியின் நடை உடை பாவனையுமே இதற்குக் காரணமாகும்.

ஆச்சிக்கு கண்பார்வையிலும் குறைச்சலில்லை. பற்களும் நன்றாக இருப்பது போலவே தெரிகின்றது. தலைமுடியும் முற்றாக வெள்ளையாகவில்லை. உடலுறுதியும் திடகாத்திரமாகவே காணப்படுகிறது.

இந்த ஆச்சி தனக்குத் தெரிந்தவர்கள் யாரைக் கண்டாலும் பயனுள்ள பல அறிவுரைகளைச் சொல்லத் தவறுவதில்லை. அன்றொரு நாள்பொழுது போக்காக ஆச்சியின் வீட்டிற்குச் சென்றாள் கமலா.

வாடி புள்ளை...! என்று வரவேற்ற ஆச்சி தனக்கு முன்னாலிருந்த கதிரையிலிருக்குமாறு கையைக் காட்டினாள். கமலா இருந்தவுடன் அவளைக் கவனமாகப் பார்த்தபடியே ஆச்சி கேட்டாள்.

உன்ரை உடம்பு முன்னைய விட பருமனாகியிட்டுது போல கிடக்கு. மாமிச உணவுகளை அதிகமாகச் சாப்பிடுறாயோ?

மீன், இறைச்சி இல்லாவிட்டால் என்ரை ஆளுக்குச் சாப்பாடு இறங்காது. அவற்றை சாட்டிலை நானும் பிள்ளையளும் கொஞ்சம் கூடத்தான் சாப்பிடுறம். இப்ப கொஞ்ச நாளுக்குள்ளதான் உடல் எடை கூடியிருக்கு. உடல் பருத்துக் குண்டானால் நடக்கவுமேலாது, சில நோய்களும் வரலாமென்று சொல்லுகினம். இதைக் கேட்டாப்பிறகு மருந்துக்கடையில இரண்டாயிரம் ரூபாவுக்கு ஒரு மருந்து வாங்கிக் குடிக்கிறன்.

ஏடி புள்ளை கமலா...! நான் சொல்லுறதைக் கேள். ஒரு வைத்தியரின் ஆலோசனையில்லாமல் ஒரு மருந்தையும் பாவிக்கக்கூடாது. உன்ரை உடற்பருமனுக்கு என்ன காரணமென வைத்தியர் ஒருவர் பரிசோதித்து அதற்கேற்ற மருந்தைப் பாவிக்க வேணும். இதை விட்டிட்டு நீ உன்ரை கணக்கிலை வைத்தியம் செய்தால் இன்னும் பல நோய்களுக்கு ஆளாக வேண்டி வரலாம்.

கமலா...! நான் சொல்லுறதைக் கேளும். சிலர் நம்புகிறார்கள். மாமிச உணவிலைதான் அதிக சத்து இருக்கிது என்று. இதொரு தவறான எண்ணமாகும். ஆடு, மாடுகள் மாமிசத்தை உண்பதில்லை. அவை மெலிந்து போயா இருக்கின்றன. நம் நாட்டில் மிகவும் பலமுள்ள மிருகம் யானையாகும். இது எதனைச்சாப்பிடுகிறது. மரங்களின் இலைகளையும் காய்கனிகளையும் தானியங்களையும் தானே?

மரக்கறி வகைகளைத் தவிர்த்து மாமிச உணவை அதிகம் சாப்பிட்டால் உடல் பருமனாவதுடன் உயர் குருதி அழுக்கம், சலரோகம், இருதய நோய்கள், பாரிசவாதம் போன்றவை வரலாம்.

அந்தக் காலத்திலை எங்கட அம்மா குரக்கன் புட்டு, ஒடியற்புட்டு, ஒடியற் கூழ், பனாட்டு , பழங்கஞ்சி போன்றவற்றைத் தந்தே என்னை வளர்த்தவ. இதனால தான் நான் இன்றுவரை வைத்தியசாலைப் பக்கம் போகாமல் இந்த ஊரிலை வயது கூடிய ஆள் என்ற பெருமையோட இருக்கிறன்.

இன்று பலரும் விரும்பும் மாமிச உணவுக்காக உயிர்களைக் கொலை செய்து அதன் ஊனை உண்பது அருவருப்பானது. இந்து மதக் கோட்பாடுகளையும் அசிங்கப்படுத்துகிறது. இத்துடன் பாவத்தையும் தேடிப் பல நோய்களுக்கும் ஆளாக்குகிறது.

கமலா! இப்ப கனபேர் உடல் பருமனாகி தொப்பை வயிற்றோடை மூச்சு இழுத்துக்கொண்டு இருக்கினம். இவையளுக்கு இந்த நிலை ஏன் வந்ததென்று தெரியுமோ? மூன்று நேரமும் வயிறு முட்டச் சாப்பிட்டிட்டு சோடாவையும் குடிச்சு சொக்லெட்டுக்களையும் வாயிலை போட்டுக் கொண்டு ரீவிக்கு முன்னாலை இருந்தால் என்ன நடக்கும்? உடலெங்கும் இரத்த ஓட்டம் சீராக நடைபெறாமல் ஓமோன்களின் தொழிற்பாடு குறைவடைய தசை வளர்ச்சியடையும்.

இப்ப நெல்லுக்குற்ற, மா அரைக்க, உடுப்புக் கழுவ என பலவகையான இயந்திரங்கள் வந்ததாலை வியர்வை சிந்த வழியில்லை. இதனாலை நோய்கள் வந்து ஐம்பது அறுபது வயதிலேயே பலர் தம் வாழ்க்கையை முடித்துக் கொள்கிறார்கள்.

ஆச்சி...! நீங்கள் கூறுவது போலத்தான் வைத்தியர்களும் சொல்லுகிறார்கள். ஒவ்வொருதரும் கொழுப்புள்ள உணவுகளைத் தவிர்ப்பதுடன் இனிப்பையும் உப்பையும் மட்டுப்படுத்தட்டாம். இதோடை உடற்பயிற்சிகளையும் செய்யட்டாம். உடற்பயிற்சி செய்ய முடியாதவர்கள் தினமும் ஒரு மணித்தியாலமாவது நடப்பது நல்லதாம். இப்படி நடைப்பயிற்சி செய்தால் சலரோகத்தைக் கூடக் கட்டுப்படுத்தலாமாம்.

வைத்தியர்கள் கூறுவது முற்றிலும் உண்மையே. அந்தக்காலத்தில் வாழ்ந்தோர் தேத்தண்ணிக்குப் பதிலாக பழங்கஞ்சியைக் குடித்ததனால் எவருக்குமே சலரோகம் வரவில்லை. இறைச்சியும் மாதத்தில் ஒருநாளாவது சாப்பிடுவது சந்தேகமே. இதனால் குருதி அழுத்தமோ இரத்தக் குழாய்களில் கொழுப்புப் படிவுகளோ ஏற்படவில்லை.

இன்று பலவிதமாக வந்திருக்கும் செயற்கை உணவுகளை எப்ப சாப்பிடத் தொடங்கினோமோ அன்றிலிருந்து நோய்களுக்கும் பஞ்சமில்லை. இவற்றுள் மிகவும் பயங்கரமானதாக புற்றுநோயும் தலைகாட்டுகிறது என்று ஆச்சி மேலும் தொடர்ந்தாள்.

இப்பதான்எனக்குஞாபகத்திலைவருகுது. உம்முடைய உடற்பருமனைக் குறைப்பதற்கு உணவில் சேர்க்கும் வாசனைத் திரவியங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. தினம் கறிவகைகள் சமைக்கும் போது எலுமிச்சம்புளி, மிளகு, கறிவேப்பிலை, இஞ்சி, உள்ளி, வெங்காயம், வெந்தயம் ஆகியவற்றைப் போதியளவு சேர்த்துக் கொண்டால் உணவே மருந்தாகி உடல் எடை குறைவடையும்.

வைத்தியர்கள் சொன்னமாதிரி உடற்பயிற்சியும் செய்யிறது நல்லது. இதற்காக வீட்டுத் தோட்டமொன்றை ஆரம்பித்தால் அதிக பயன் கிடைக்கும். வீட்டுத் தோட்டம் செய்யிறதாலை பூச்சி நாசினி தெளிக்காமலும் வாடி வதங்காமலும் மரக்கறிகள் கிடைப்பதுடன் நடக்கிறது... குனியிறது... இருக்கிறது... போன்ற பல பயிற்சிகளும் நடைபெறுகின்றன. இப்பயிற்சிகள் எல்லாக் கழிவுப் பொருட்களையும் வெளியேற வழிவகுக்கும். இரத்தோட்டத்தையும் சீராக்கும். உடல் எடையும் கூட விடாது. ஆரோக்கியமும் நன்றாகவே அமையுமெனச் சொன்ன ஆச்சி தன்னுரையை முடித்தது போல் மௌனமானாள்.

அப்போது ஆச்சியின் ஆலோசனைகளுக்கெல்லாம் நன்றி தெரிவித்துக்கொண்ட கமலா தன் வீடு நோக்கி மெல்ல மெல்ல நடந்தாள்.

**சி.காசிப்பிள்ளை**
**கொடிகாமம்**

# ஈழத்து மகளே எ

## காணாமற்போன கதாநாயகிக்கு இயக்குநரின் கண்ணீர்க் கடிதம்

**என்னுடைய "கடல் குதிரைகள்" தான், நீ நடித்த முதல் திரைப்படம். அதுவே உன்னுடைய கடைசிப் படமாக ஆகிவிடக்கூடாது என்கிற பரிதவிப்புடன் இதை எழுதுகிறேன்.**



"உச்சிதனை முகர்ந்தால்", "கடல் குதிரைகள்" ஆகிய படங்களின் இயக்குநர், புகழேந்தி தங்கராஜ். கடல் குதிரைகள் திரைப்படம், கூடங்குளம் அணுஉலை போராட்டம் நடைபெற்ற இடிந்தகரை கிராமம் மற்றும் ஈழத்தமிழர்களின் போராட்ட வாழ்க்கையைப் பின்னணியாகக்கொண்டு உருவாக்கப்பட்டது. அதில், பிரஷாந்தி என்ற ஈழப்பெண் நடித்திருந்தார். இந்தப் படத்தில் நடித்ததிலிருந்து அவருக்கு பொலிஸார் விசாரணை, மிரட்டல்கள் தொடர்ந்தன. கடந்த சில மாதங்களாக, அவரும் அவரது குடும்பத்தினரும் எங்கிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இந்நிலையில், "எங்கிருக்கிறாய் பிரசாந்தி?" என்று ஒரு தந்தையின் தவிப்போடு இயக்குநர் புகழேந்தி தங்கராஜ் எழுதிய கடிதம் ஜுனியர் விகடனில் பிரசுரமாகியது. அக்கடிதம் இங்கு அப்படியே பிரசுரமாகிறது.

**"அன்பும் அறிவும் அர்ப்பணிப்பும் கொண்ட தமிழ்மகள் பிரஷாந்திக்கு,**

ஒவ்வொரு நொடியும் உன் நினைவுச் சுமையில் நசுங்கிக் கொண்டிருக்கிற புகழேந்தி தங்கராஜ் எழுதும் மடல். என்னுடைய "கடல் குதிரைகள்' தான், நீ நடித்த முதல் திரைப்படம். அதுவே உன்னுடைய கடைசிப் படமாக ஆகிவிடக்கூடாது என்கிற பரிதவிப்புடன் இதை எழுதுகிறேன். "கடல்குதிரைகள்" படம் சென்ற ஆண்டு வெளியானது. அதற்குப் பிறகு உன்னை சந்திக்கிற வாய்ப்பு கிட்டவில்லை. ஓரிருமுறை என்னை அலைபேசியில்அழைத்து நலம் விசாரித்திருக்கிறாய்... அவ்வளவுதான்!

இரண்டு மாதங்களுக்கு முன், திடீரென ஒருநாள் அலைபேசியில் அழைத்த உன் குரலில் பதற்றம் தெரிந்தது. அவசரமாகச் சந்திக்க வேண்டுமென்றாய். அடுத்த ஒரு மணி நேரத்தில், கடற்கரை காந்தி சிலையருகே சந்தித்தோம். என்னைப் பார்த்ததும் ஓடிவந்து கைகளைப் பற்றிக்கொண்டு நீ அழுததும், நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டுமென்று முழு உரிமையுடன் பொறுப்பை என்மீது சுமத்தியதும், நேற்றுதான் நடந்ததைப்போலிருக்கிறது. கியூ பிராஞ்ச் அலுவலகத்திலிருந்து விசாரணைக்கு அழைத்ததாகத் தெரிவித்தபோதே உன் குரல் உடைந்துவிட்டது. அதற்குப் பிறகு உன்னால் பேச முடியவில்லை. ஒரு பெண் அதிகாரி, உன்னுடைய 'டேட்ஸ்' பற்றி அலைபேசியில் விசாரித்ததாக உன் தாயார் தெரிவித்த பிறகுதான், உன் கலக்கத்தின் காரணம் புரிந்தது.

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. பொலிஸில் இருக்கிற நல்ல அதிகாரிகளையும் சந்தித்திருக்கிறேன் என்பதால், இப்படியெல்லாம்கூட அதிகாரிகள் இருக்கிறார்களா? என்கிற அதிர்ச்சியிலிருந்து அவ்வளவு சீக்கிரத்தில் விடுபட முடியவில்லை. கடல் குதிரைகளில் நடிக்க வந்தபோது, 16 வயது முடிந்துவிட்டதாகச் சொன்னாய். அதைவைத்துப் பார்த்தால், இப்போது உனக்கு 20 முடிந்திருக்கும். வளர்ந்துவிட்டிருக்கும் ஒரு சிறுமி தொடர்பான சிக்கல் என்பதால், இந்தப் பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காண்பது என்கிற கேள்விதான் பெரிதாக இருந்தது. பத்திரிகையாளர்களிடம் முறையிடலாமா? அல்லது ஈழப்பிரச்சினையில் உண்மையான அக்கறை கொண்ட தலைவர்கள் எவரிடமாவது முறையிடலாமா? என்று யோசித்தேன். 'யோசித்தேன்' என்று சொல்வதைவிட, 'யோசித்தோம்' என்று சொல்வதுதான் பொருத்தமானது.

கடைசியில், வைகோவைத் தொடர்பு கொண்டு பேசலாமென்று தீர்மானித்தோம். அவர் ஒருவரால்தான் எவரையும் எளிதாகத் தொடர்புகொள்ள முடியும். சட்டப்படியோ தார்மீக அடிப்படையிலோ நீதி கேட்க முடியும். அதனால்தான் அவரை அணுகுவதென்று முடிவெடுத்தோம். நமது துரதிர்ஷ்டம், அவரை அணுகி விடயத்தைச் சொல்வதற்குள், உடல் நலக்குறைவால் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுவிட்டார். டாக்டர் மைத்ரேயனும் வைகோவைப் போன்றவர்தான். ஈழப் பிரச்சினையில் உடனடியாகத் தன்னால் ஆனதை செய்யக்கூடியவர். ஆனால், சொந்தக் கட்சியில் அவருக்கு இழைக்கப்பட்ட அநீதியால் அவர் வெளியுலகுக்கு வராதிருந்த நிலையில், அவரை அணுகத் தயங்கினேன்.

யார் மூலம் உன் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்கிற முடிவுக்கு உடனடியாக வரமுடியாத நிலையில், பெண் பத்திரிகையாளர் ஒருவரிடம் பிரச்சினையை எடுத்துச்சொல்லி, அதற்கு எந்த விதத்தில் தீர்வு காணமுடியும் என்று வழிகாட்டும்படி கேட்டுக் கொண்டேன். அவரிடம் உன் தொடர்பு எண்ணையும் கொடுத்தேன்.

நீ நெருப்பின் விளிம்பில் நின்றுகொண்டிருக்க, அதை அணைப்பதற்கான முயற்சியில் நான் முழுமையாக இறங்குவதற்கு முன்பாகவே, உன்னுடைய தொடர்பு முற்றிலுமாக அறுந்துவிட்டது. காலையிலும் மாலையிலும் இரவிலும் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்த உன்னிடமிருந்து, 3 மாதமாக எந்தத் தகவலுமில்லை. எங்கே இருக்கிறாய், என்ன ஆனாய்... தமிழ் நாட்டுக்குள்தான் இருக்கிறாயா? கியூ பிராஞ்ச் உன்னை விசாரித்தார்களா? இல்லை... அவர்களால் உனக்கு ஏதாவது பிரச்சினை ஏற்பட்டதா? எதுவுமே தெரியாத நிலையில் கண்ணைக் கட்டி காட்டில் விட்டதைப் போல நிலைகுலைந்து நிற்கிறேன், இரண்டு மாதங்களாக உடுக்கை இழந்தவன் கைபோல உனக்கு உதவியிருக்க வேண்டிய நான்தான், என் பொறுப்பை உணராமல் காலதாமதம் செய்துவிட்டேனோ என்கிற குற்ற உணர்வில்தான் விடிகிறது ஒவ்வொரு நாளும்! இங்கே இருந்தால்எப்படியாவது என்னைத்தொடர்பு கொண்டிருப்பாய். எங்கேயிருக்கிறாய் என்பதை நிச்சயமாக எனக்குத் தெரிவித்திருப்பாய். ஆனால், அப்படி எந்தத் தகவலும் உன்னிடமிருந்து எனக்கு வரவில்லை. கியூ பிராஞ்ச் தொல்லையைத் தாங்க முடியாமல், வேறெங்காவது போய்விட முயன்று, எல்லையற்ற இன்னல் களை எதிர்கொண்டிருக்கிறாயா? என்பதும் தெரியவில்லை.

2015இல், கூடங்குளம் இடிந்த கரையிலிருந்து ஐந்தாறு கடல் மைல் தொலை வில், நடுக்கடலில் "கடல்குதிரைகள்' படப்பிடிப்பு. இலங்கைக் கடற்படையின் தாக்குதலுக்கு உள்ளான படகிலிருந்து நீயும் டேவிட் பெரியாரும் நீந்திவருகிற காட்சி யைப் படமாக்கிக் கொண்டிருந்தோம்.

கதையின்படி, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிற டேவிட்டை ஒரு கையால் இழுத்துப் பிடித்தபடி நீ நீந்திவர வேண்டும். உங்கள் பாதுகாப்புக்காக மூன்று படகுகளில் மீனவத் தோழர்கள் தயார் நிலையில் இருந்தார்கள். நீந்துவதில் சிரமமிருப்பதாகத் தெரிந்தால், கடலில் குதித்து உங்களை அவர்கள் மீட்டு வந்துவிட வேண்டுமென்று ஏற்பாடு. கரையில்தான் அலை இருக்கும், நடுக்கடல் அமைதியாக இருக்குமென்கிற நம்பிக்கையோடுதான் கடலுக்குள் போனோம். மலை மாதிரி உருண்டு புரண்டு எழுந்துவந்த பிரமாண்ட அலைகள், அந்த நம்பிக்கையைத் தகர்த்துக்கொண்டிருந்தன. உன்னை கடலில்குதிக்கச்சொல்லவே அஞ்சினேன்.

படப்பிடிப்பையே இரத்துசெய்துவிடலாமா? என்று யோசித்தேன். அப்போது, என் கையைப் பிடித்து நீ எனக்குத் தைரியம் சொன்னதை ஒருபோதும் நான் மறக்க முடியாது.

"நீங்க கவலைப்படாதீங்க அங்கிள்... நான் சமாளிச்சிடுவேன். எனக்கு ஒண்ணும் ஆகாது. இவ்வளவு தூரம் உள்ளே வந்துட்டு திரும்பப் போக வேண்டாம்"என்று என்னை சமாதானப் படுத்திவிட்டுத்தான் கடலில் குதித்தாய்!

சிறிதுதூரம்தான் நீந்தியிருப்பாய், டேவிட்டிடம் தடுமாற்றம் தெரிய, நீயும் தடுமாறுவதாக எனக்குத் தோன்றியது. ஒரு பெரிய அலையில் நீ மூழ்கி விடுவதைப் போல் தோன்ற, ஒரு நொடி ஆடிப் போய்விட்டேன். அப்போதிருந்த பயத்தில் நான் அவசர அவசரமாக விசிலடிக்க, மீனவத் தோழர்கள் கடலில் குதித்து உங்களை இழுத்துக்கொண்டு வந்து படகில் ஏற்றிவிட்டார்கள்.

"உனக்கு ஒண்ணும் ஆகலையே" என்று கேட்டேன். "நீங்கதான் பயந்துட்டீங்க" என்று சொல்லிவிட்டு சிரித்தாய்! "எனக்கு ஒன்றும் ஆகலை" என்றாய். "நீ சிரமப்படுவ்து மாதிரி தெரிந்தது" என்றேன். "இல்லை அங்கிள்... கஷ்டப்பட்டு நீந்தி வ்ருவது மாதிரி தெரிய வேண்டுமென்பதற்காகத்தான் அலையில் மூழ்குகிற மாதிரி நடித்தேன்" என்றாய்! வியப்புடன் பார்த்தேன். வழக்கம்போல வெள்ளந்தியாகச் சிரித்தாய்."நீ ஈழத்திலிருந்து உயிர்தப்பி இங்கே வந்திருக்கிறாய். உனக்கு ஏதாவது ஆகிவிட்டால், நான் வெளியே தலைகாட்டவே முடியாது. அந்தப் பழியிலிருந்து ஒருபோதும் விடுபட முடியாது. எல்லாவற்றுக்கும் மேலாக, எனக்கு நீச்சல் தெரியாது. "நீச்சல்கூட தெரியாத நீ ஒரு ஈழத்துப் பிள்ளையை நடுக்கடலில் கொண்டுபோய் தள்ளிவிட்டாயே"என்று யாராவது கேட்டால் நான் என்ன பதில் சொல்ல முடியும்? அந்த அச்சத்தில்தான் விசிலடித்தேன்' என்றேன். "பயப்படாதீங்க அங்கிள்... எனக்கு ஒண்ணும் ஆகாது" என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னாய்...

# ங்கிருக்கிறாய்?




நடுக்கடல் படப்பிடிப்பு மறுநாளும் தொடர்ந் தது. ஆழ்கடலில் நீண்டதூரம் போய், உன்னை நீந்திவரச் சொன்னோம். டேவிட்டை ஒரு கையால் இழுத்தபடி அச்சமில்லாமல் நீந்திவந்தாய். படப்பிடிப்பு மதியத்துக்கு மேலும் தொடர்ந்தது. கமரா இருந்த படகில் நானும், வேறொரு படகில் நீயும் இருந்ததால், கைக்குட்டை மூலம்தான் உனக்கு "அக்ஷன்" சொல்லவேண்டியிருந்தது. கைக்குட்டையை அசைத்ததும் நீயும் டேவிட்டும் கடலில் குதிப்பீர்கள். படகு உங்களை விட்டுவிட்டு எங்கள் பக்கம் வந்துவிடும். மீண்டும் கைக் குட்டையை அசைத்ததும் நீங்கள் நீந்த ஆரம் பிப்பீர்கள். பிற்பகலில், ஓர் இடத்தில் நீ நீந்தி வருவதைப் படமாக்கிக்கொண்டிருந்தபோது, உண்மையிலேயே நீ சிரமப்படுவதாகத் தோன் றியது. நான் மட்டுமல்ல, எல்லோருமே அதை உணர்ந்தனர். நான் விசிலடிப்பதற்கு முன்பே மீனவத் தோழர்கள் கடலில் குதித்துவிட்டார்கள். எங்கள் படகிலிருந்த இடிந்தகரை சகோதரி மெல் றெட் கூட பயந்துபோய் கடலில் குதித்து உன்னை நோக்கி நீந்தத் தொடங்கினார். அதற்குள் மற்ற வர்கள் உங்களை மீட்டு வந்துவிட்டார்கள். அன்று இரவு உணவுக்குப் பிறகு, எனக்கிருந்த சந்தேக த்தை உன்னிடம் மீண்டும் மீண்டும் தெரிவித்த பிறகே, உனக்கு ஓரளவுதான் நீச்சல் தெரியும் என்பதை ஒப்புக்கொண்டாய். சென்னைப் புத்தகக் கண்காட்சியில், என் புத்தகம் ஒன்றில் கையெழு த்து வாங்க வந்தபோது பார்த்த ஈழத்துச் சிறுமி யான உன்னை, கடல் குதிரைக ளுக்காகத் தொடர்பு கொண்டபோது, "நீச்சல் தெரியுமா?" என்றுதான் முதலில் கேட்டேன். "தெரியும்" என்று உறுதி யான குரலில் நீ கூறியதால்தான் நடிக்கவைத்தேன்.

முள்வேலி முகாமிலிருந்து தப்பி, நீந்தியே தமிழகத்துக்கு வந்துவிடுகிற ஈழச் சிறுமியாக, ஈழத்தைச் சேர்ந்த ஒரு சிறுமியே நடித்தால் பொருத்தமாக இருக்குமென்கிற ஆர்வமே அதற்குக் காரணம்.

என்னுடைய அந்த ஆர்வத்தைவிட, உன்னுடைய ஆர்வம் அதிகமாக இருந்திருக்கிறது. அதுதான், பெரிதாக நீச்சல் தெரியாத உன்னை நடுக் கடலில் துணிவோடு நீந்த வைத்திருக் கிறது. கடல்குதிரைகள் படத்தின் ஓர் இடத் தில் தலைவாசல் விஜய், "அது அந்த மண்ணுக்கே உரிய குணம்" என்று சொல் வார். அந்தக் குணம், ஈழம் என்கிற வீரம் செறிந்த மண்ணில் பிறந்த உனக்கு இயல்பாகவே இருந்தது.

இடிந்தகரை அருகே, உடற்பயிற்சி செய்யும் காட்சியைப் படம்பிடித்தபோது, உனக்கும் உன்னுடைய பள்ளித் தோழி களாக நடித்த மற்ற நான்குபேருக்கும் உடற்பயிற்சி அசைவுகளைச் சொல்லிக் கொடுத்துவிட்டு, படம்பிடிக்கத் தொடங்கி னோம்.

மற்ற நால்வரின் அசைவுக்கும் உன் அசைவுக்கும் ஏதோ ஒரு வித்தியாசம் தெரிய, மீண்டும் படமாக்கினோம். அப்போ தும், மற்றவர்கள் ஒரு மாதிரியும் நீ வேறு மாதிரியும் கைகளை அசைப்பது தெரிந் தது. உன்னை அழைத்து கடுமையாகக் கண்டித்தேன். "ஐவரின் அசைவும் ஒரே மாதிரி இருக்க வேண்டும். மற்றவர்கள் நான் சொன்னமாதிரியே செய்ய, நீ மட்டும் உன் இஷ்டத்துக்குச் செய்கிறாயே... சொன் னால் கேட்கமாட்டியா" என்று கடிந்து கொண்டேன்.

அருகே நின்ற கதாநாயகி ஸ்ரீ சொல்லித் தான், நீ இடக்கை பழக்கம் கொண்டவள் என்கிற உண்மை தெரிந்தது. மற்றவர்கள் வலதுகையிலிருந்து ஆரம்பிக்க, நீ இடது கையிலிருந்து தொடங்கியதுதான் பிரச் சினை. கொஞ்சம் கடுமையாகப் பேசிய தற்காக உன்னிடம் மன்னிப்புக் கேட்டேன். "என் மேலதான் பிழை. நான்தான் சாரி சொல்லணும்" என்று சொல்லிவிட்டுச் சிரித்தாய்! அது, கள்ளங்கபடமில்லாத ஒரு பூவின் புன்னகை.

ஒருநாள், நடுக்கடல் படப்பிடிப்பு முடிந்து திரும்பும்போது, மழை பிடித்துக் கொண் டது. நீ இருக்கிற படகு கண்ணிலேயே தெரியாத அளவுக்கு அடைமழை. கடலின் ஆவேசம் அதிகரித்து, அலைகளின் வேகம் கூடியிருந்தது.

உன் படகு பத்திரமாகக் கரைபோய்ச் சேர வேண்டும் என்கிற பரிதவிப்பில், என க்குள் பதற்றம் தொற்றிக்கொண்டது. கரையை நெருங்கிய நிலையில், இடிந்த கரை லூர்துமாதா ஆலயத்தின் கோபுரம், மழை விழுதுகளுக்கு இடையே மெலிதா கத் தெரிய, "என் பிரஷாந்தியைப் பத்திரமா கக் கரையில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடு தாயே" என்று மனப்பூர்வமாகப் பிரார்த்தித் துக் கொண்டேன்.

கரை வந்து சேர்ந்தபோதுதான், உன் படகு எங்களுக்கு முன்பே கரை சேர்ந்திருப் பதும், நீ கரையில் நின்றுகொண்டிருப்பதும் தெரிந்தது. நான் படகிலிருந்து இறங்கிய தும் ஓடிவந்து கையைப் பற்றிக் கொண்டு, "உங்க படகைக் காணோமேன்னு பயந்து போயிட்டேன்" என்றாய்! கரையிறங்கிய தும், நேராக லூர்து மாதா ஆலயத்துக் குத்தான் போனேன். நீயும் என்னைப் பின் தொடர்ந்து வந்துவிட்டாய். "என் பிள்ளை யைப் பத்திரமாகக் கொண்டுவந்து கரை சேர்த்ததற்கு நன்றி தாயே" என்று நான் மனத்துக்குள் பிரார்த்தித்துக்கொண்டி ருந்தேன். அருகிலேயே நீயும் மண்டி யிட்டுப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தாய்! உன் கண் கலங்கியிருந்தது. ஏனென்று நீயும் சொல்லவில்லை, நானும் கேட்க வில்லை.

இப்போது, உன்னைக் குறித்த என்னு டைய அச்சம்கூட அர்த்தமற்றதாக இருக்க லாம். நாளையே நீ என்னைத் தேடிவந்து, என் கையைப் பிடித்து வெள்ளந்தியாகச் சிரிக்கலாம். "எனக்கு ஒண்ணும் ஆகலை அங்கிள்... நான் நல்லாத்தான் இருக்கேன்" என்று இயல்பாகப் பேசலாம்.

நான் என்னளவில் ஒரு தைரியசாலி யைப் போல தோற்றமளித்தாலும், மற்ற வர்கள் விடயத்தில் அநியாயத்துக்குப் பயப்படுபவன். இந்த கியூ பிராஞ்ச் என்கிற காவல்துறைப் பிரிவு, ஈழத்துச் சொந்தங் களை எப்படியெல்லாம் கிள்ளுக்கீரையாகக் கருதுகிறது என்பதை தம்பி செந்தூரன் விடயத்தில் கண்கூடாகப் பார்த்தவன். அதனால்தான் பயப்படுகிறேன்.

ஈழ அகதிகளுக்கு இழைக்கப்படுகிற அவமரியாதைகளையும் அநீதிகளையும் எதிர்த்து 23 நாள் உறுதிகுலையாமல் உண்ணாவிரதம் இருந்தவன், தம்பி செந்தூரன். இருபதாவது நாளன்று, என்னி டம் செந்தூரன் சொன்னது இப்போதும் நினைவிருக்கிறது.

"தொப்புள் கொடி உறவுகள் என்கிற நம்பிக்கையில்தான் உயிருக்குப் பயந்து இங்கே ஓடி வரோம். விருந்தினர் மாதிரி எங்களை உபசரிக்கத் தேவையில்லை. குறைந்தபட்சம் மனிதர் கள் மாதிரியாவது நடந்த வேண்டாமா? சந் தேகத்துடனேயே பார்ப்பது என்ன நியா யம்? எங்களில் யாராவது ஒருத்தர் இந்த அநீதியை எதிர்த் துப் போராடி செத்தாத் தான் அதிகாரத்தில் இருப்பவர்கள் திருந்து வார்கள்' என்று செந்தூரன் சொன்னதை, அப்படியே மைத் ரேயனிடம் சொன்னேன். ஜெயலலிதா அம்மையார் இருந்தபோதே, இதையெல் லாம் அவருடைய கவனத்து க்கு எடுத்துச் சென்றவர் அவர். அதனால் தான் அவரிடம் இதைச் சொன்னேன்.

23ஆவது நாள், அந்த உண்ணா விரதம் முடிந்தது. மூன்று நாள் கழித்து மருத்துவர் சிவராமனிடம் செந்தூரனை அழைத்துச் சென்றபோது, செந்தூரனின் சர்க்கரை அளவைப்பார்த்து அவர் அதிர்ந்து போனார். சர்க்கரை அளவு 480 ஆக இருந்தது. இப்போது, செந்தூரனும் மங்கை யும் குழந்தைகளும் நலத்துடன் இருக் கிறார்கள் என்பது ஆறுதலளிக்கிற நல்ல செய்திதான் என்றாலும், அவர்கள் கடந்து வந்த அந்த மோசமான நாள்களை அருகி லேயே இருந்து பார்த்ததால்தான், உன் குறித்த அச்சம் அதிகரிக்கிறது.

அவுஸ்திரேலியாவுக்கு படகில் போன அகதிகள் உயிரிழந்த சம்பவங்களும், சோமாலியா கடற்கொள்ளையர்களிடம் பிடிபட்டதாகச் சொல்லப்பட்ட ஈழ அகதிகள் குறித்த அவலக் கதைகளும், என் அச்சத் தைப் பல மடங்காக்குகின்றன.

ஓரளவே நீச்சல் தெரிந்த நிலையிலும் நடுக்கடலில் குதிக்கச் சொன்னவுடன் குதித்த என் பிரஷாந்தி, எங்கேயிருந்தா லும் பத்திரமாகத் திரும்பி வரவேண்டும் என்று சென்னையிலிருந்தபடியே இடிந்த கரை லூர்து அன்னையிடம் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன், மகளே!

"தாயே, அந்த ஈழத்துக் குழந்தையை மீண்டும் என்னிடம் ஒப்படை. அவளோடு சேர்ந்து இடிந்தகரைக்கு வந்து உன்னை வணங்குகிறேன்." என்று லூர்து அன்னை யின் முன் மனப்பூர்வமாக மண்டியிட்டு நிற்கிறேன். என்னுடைய இந்தப் பிரார்த் தனை நிறைவேற வேண்டும் பிரஷாந்தி.

நீ எங்கேயிருந்தாலும் சரி.

எப்படியாவது என்னை அலைபேசி வாயிலாக அழை.

"நீங்கதான் பயந்துட்டீங்க அங்கிள். எனக்கு ஒண்ணும் ஆகலை' என்று ஒரு வார்த்தை பேசு.

அந்த அழைப்புக்காகக் காத்திருக்கி றேன் மகளே!

ஜூனியர் விகடன்

# சீனா-இந்தியாவிற்கு இடையிலான புவிசார் அரசியல் போட்டி

# சிக்குண்டுள்ள யாழ்ப்பாணம்

கொழும்பிலிருந்து 400 கிலோ மீற்றர் தூரத்தில் யாழ்ப்பாணத்தில் இலங்கையின் மூன்றாவது சர்வதேச விமானநிலையம் ஆரம்பிக்கப்பட்டதை தொடர்ந்து சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான பூகோள அரசியல் அதிகார போட்டியில் இலங்கையின் முன்னர் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடபகுதி சிக்குப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 17 ஆம் திகதி யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டமை .ஜனாதிபதி தேர்தலில் மக்களின் வாக்குகளை பெறுவதற்கான ஒரு முயற்சியே என குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்த தேர்தல் கொழும்பிற்கும் அதன் இரு கொடையாளர்களிற்கும் இடையிலான உறவுகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தவுள்ளது.

நவம்பர் 16 ஆம் திகதி தேர்தலிற்காக வாக்குகளை பெறும் ஒரு அவசர முயற்சியாகவே இந்த விமான நிலையத்தை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது என முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான இலங்கையின் எதிர்க்கட்சியினர் குற்றம்சாட்டியுள்ளனர்.




எனினும் இந்த குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் இந்த விமானநிலையம் மூன்று கட்டங்களாக உருவாக்கப்படவுள்ளது, இதில் முதல் கட்டமே பூர்த்தியாகியுள்ளது என தெரிவித்துள்ளது.

முன்னர்உள்ளுர்விமான நிலையமாக காணப்பட்ட இந்த விமானம் நிலையம் தற்போது சர்வதேச விமானங்களை கையாள்வதற்கு ஏற்ற விதத்தில் தரமுயர்த்தப்பட்டுள்ளது, இந்த விமான நிலையத்தின் முதற்கட்ட தரமுயர்த்தல் பணிகளிற்காக 2.2 பில்லியன் இலங்கை ரூபாய் செலவாகியுள்ளது இதில் 300 மில்லியன் ரூபாய்களை இந்திய அரசாங்கம்நன்கொடையாக வழங்கியுள்ளது.

இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையத்தை சீனாவின் கடனுடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது சொந்த ஊரான அம்பாந்தோட்டையில் முன்னெடுத்தார்.

2013 இல் திறக்கப்பட்ட இந்த விமானநிலையம் உண்மையில் பணத்தை வீணடித்த ஒரு நடவடிக்கையே, மேலும் எந்த ஒரு வர்த்தக போக்குவரத்து சேவையையும் கையாளாததால் இது உலகின் வெறுமையான விமானநிலையம் என அழைக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையத்திற்கும் இந்த அவமானம் ஏற்படலாம்.


இந்த விமானநிலையம் ஆரம்பத்தில் அலையன்ஸ் எயர் இந்தியாவின் விமான சேவைகளை மாத்திரம் கையாளும்.தற்போதைக்கு வேறு எந்த விமானசேவையும் இந்த விமானநிலையத்தை பயன்படுத்தப்போவதாக அறிவிக்கவில்லை.

இந்த விமானநிலைய வீழ்ச்சிகள் சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான அதிகார போட்டியின் ஒரு பகுதியாக காணப்படுகின்றன.

இந்தியா- இலங்கையை எப்போதும் தனது செல்வாக்கிற்கு உட்பட்ட நாடாக கருதுவதுடன் பாரம்பரியமாக தனது அயல்நாட்டுடன் நெருங்கிய பொருளாதார உறவுகளை பேணி வருகின்றது.

அதேவேளை இலங்கை சீனாவை மத்திய கிழக்கின் எண்ணெய் உற்பத்தி நாடுகளுடன் இணைக்கும் கடற்பாதையில் உள்ளதால் சீனா பாரிய கடன்கள் மூலதனம் மற்றும் முதலீடுகள் மூலம் இலங்கையை கவருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

ஆனால் சீனாவின் பிரசன்னம் அதிகரிப்பது இந்தியாவை பதட்டமடையச் செய்துள்ளது, 2015 இற்கு முன்னர் காணப்பட்ட மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் வெளிப்படையாக சீனா ஆதரவானதாக விளங்கியது ஆனால் தற்போதைய அரசாங்கம் அந்த நிலைப்பாட்டை பின்பற்றவில்லை.



இந்த மாற்றத்தை அவதானித்துள்ள இந்தியா இலங்கையில் பல பாரிய அபிவிருத்தி திட்டங்களில் முதலீடு செய்துள்ளது.

வீடமைப்பு திட்டம்,அவசர அம்புலன்ஸ் போன்ற திட்டங்களிற்கு நிதிவழங்கியுள்ளதுடன் யாழ்ப்பாண சர்வதேச விமானநிலைய திட்டத்திற்கும் நிதி வழங்கியுள்ளது.

மேலும் சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பதை கட்டுப்படுத்தும் விதத்தில் கொழும்பு துறைமுகத்தின்கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கான உடன்படிக்கையில் இந்தியா ஜப்பானுடன் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளது.

இந்த துறைமுகம் சீனாவின் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்படும் போர்ட்சிட்டி திட்டத்திற்கு அருகிலேயே காணப்படுகின்றது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதியின் மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ யாழ்ப்பாண சர்வதேச விமானநிலையம் அவசரமாக திறக்கப்பட்டதை இலங்கைக்கு ஏற்பட்ட அவமானம் என வர்ணித்தார்.

நிக்கி ஏசியன் ரிவியுவிற்கு வழங்கிய பேட்டியில் நாமல் ராஜபக்ஷ யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை திறந்தமை நிச்சயமாக அரசியல் நோக்கம் கொண்ட நடவடிக்கை என குறிப்பிட்டார்.

யாராவது விமான நிலையத்திற்கு சென்றால் அதன் உண்மை தன்மையை அவர்கள் அறிந்துகொள்வார்கள் என குறிப்பிட்ட அவர் விமான நிலையத்தில் உரிய வடிகால் அமைப்பு வசதிகள் இல்லை, மழைபெய்தால் வெள்ளம் நிரம்பி விடுகின்றது,

விமான நிலையம் மோசமான நிலையிலுள்ளது, எனவும் குறிப்பிட்ட அவர் இந்த அரசாங்கம் அரைகுறையாக உருவாக்கப்பட்ட விமான நிலையத்தை ஏன் திறந்தது என்பது வெளிப்படையான விடயம் எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் 2015 இல் மகிந்த ராஜபக்ஷவை அகற்றுவதற்கு முக்கிய பங்காற்றியுள்ளது.

யாழ்ப்பாணத்தின் அனேக வேட்பாளர்கள் தற்போதைய ஜனாதிபதிக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையம் குறித்த குற்றச்சாட்டுகளை நிராகரித்த சுற்றுலாப்பயணத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க பல காலத்திற்கு முன்னரே விமான நிலையத்திற்கு திட்டமிட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

புதிய பட்டுப்பாதை குறித்த இலங்கை அமைப்பொன்றை சேர்ந்த மாயா மஜ்ரன் இலங்கையின் ஜனாதிபதி தேர்தலில் யார் வென்றாலும் இலங்கை குறித்த சீனாவின் ஆர்வம் குறையாது என குறிப்பிட்டார்.

இலங்கையின் பூகோள அமைவிடம் காரணமாக அவர்கள் இலங்கையை விரும்புகின்றனர், யார் வந்தாலும் அவர்கள் தங்களின் செல்வாக்கிற்கு உட்பட்டவர்களாக மாறுவதையும் தாங்கள் சொல்வதை செய்வதையும் சீனா உறுதிப்படுத்தும் என அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மனேஜர் போரத்தின். விவேகானந்தன் நிரஞ்சன் அரசாங்கத்தின் நடவடிக்கையை நியாயப்படுத்துகின்றார்.

யாழ்ப்பாணம் விமான நிலையத்தை பொருளாதார அடிப்படையில் பார்க்க வேண்டும் அரசியல் அடிப்படையில் இல்லை என அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த விமானநிலையத்தின் மூலம் நாங்கள் எங்கள் மக்களிற்கு அதிகளவு சந்தை வாய்ப்புகளை உருவாக்கலாம் என அவர் குறிப்பிடுகின்றார்.

தமிழ்நாட்டில் 70 மில்லியன் மக்களை கொண்ட சந்தை உள்ளது இதனை நாங்கள் எங்களிற்கு சாதகமாக பயன்படுத்த வேண்டும் இதன் மூலம் வேலைவாய்பின்மைக்கும் ஏனைய விடயங்களிற்கும் தீர்வை காணலாம் எனவும்அவர் குறிப்பிடுகின்றார்.


நவம்பர் 16 ஆம் திகதி இலங்கைக்கு மிகவும் தீர்க்கமானதாக விளங்கப் போகின்றது, தேர்தல் முடிவுகள் இலங்கைக்கும் சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவுகளில் முக்கிய தாக்கத்தை செலுத்தப் போகின்றன.

நிக்கேய் ஏசியன் ரிவியு

# இலங்கை ஜனாதிபதித் தேர்தல் - 2019

# சஜித் - கோத்தபாய தமிழர்களுக்கு அளிக்கும் வாக்குறுதி என்ன?





இலங்கையில் எதிர்வரும் 16 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் 35 வேட்பாளர்கள் இந்தத் தேர்தல் களத்தில் போட்டியிடுகின்றனர்.

இதன்படி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் புதிய ஜனநாயக முன்னணி ஆகிய கட்சிகளின் வேட்பாளர்கள் தொடர்பில் நாட்டில் அதிகளவில் பேசப்பட்டு வருகின்றது.

நாட்டை ஆட்சி செய்யும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணி சார்பில் சஜித் பிரேமதாஸவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ர்ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் பாதுகாப்பு முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் களமிறங்கியுள்ளனர்.

இந்த இரண்டு வேட்பாளர்களும் தமது தேர்தல் அறிக்கைகளை வெளியிட்டுள்ள நிலையில், அந்தத் தேர்தல் அறிக்கைகள் ஊடாக தமிழர்களுக்கு என்று சில தீர்வுகள் மற்றும் திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

புதிய ஜனநாயக முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகள் தமது தேர்தல் அறிக்கையில் தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கியுள்ளன.

அத்துடன், இரண்டு தரப்பினரும் இலங்கைக்கு புதிய அரசியலமைப் பொன்றின் அவசியத்தை வெவ்வேறு விதத்தில் வெளிப்படுத்தியுள்ளனர்.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்திலிருந்து முன்னோக்கி நகர்வோம் என சஜித் பிரேமதாஸ கூறியுள்ள அதேவேளை, 19 ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்பட்டு புதிய அரசியலமைப்பை கொண்டு வருவோம் என கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கிராமியப் பொருளாதாரம், புத்தாக்கம், முயற்சியாண்மை, நவீன தொழில்நுட்பம், உயர்கல்வி, முன்பள்ளி, சமூக சமச்சீரான பொருளாதாரம், பெண்களுக்கு முன்னுரிமை, ஊழல் - மோசடியற்ற ஆட்சி, அடிப்படைவாதத்திற்கு எதிரான போர், போட்டி மிக்க உலக மற்றும் உள்நாட்டு சந்தையை உருவாக்கல், போதைப்பொருளுக்கு எதிராக கடும் சட்டம், இலங்கைக்கு முன்னுரிமை, இலங்கையின் அமைவிடம், சட்டவாட்சி, சுதந்திரமான ஊடகத்துறை, வினைத்திறன் வாய்ந்த பொதுச் சேவை, போக்குவரத்து, சுகாதார சேவைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை மையப்படுத்தி சஜித் பிரேமதாஸவின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தேசியப் பாதுகாப்பு, நட்புறவுடனான வெளிநாட்டுக் கொள்கை, ஊழல் - மோசடியற்ற அரச நிர்வாகம், மக்களுக்கு பொறுப்புக் கூறும் அரசியலமைப்பு மீள் திருத்தம், மாற்றம் கொண்ட பிரஜை - வளமான மனித வளம், மக்களை மையப்படுத்திய பொருளாதாரம், தகவல் தொழில்நுட்ப விருத்தி, பௌதீக வள அபிவிருத்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகாமைத்துவம், சட்டத்தினை மதிக்கும் ஒழுக்கமுள்ள சமூகம் உள்ளிட்ட விடயங்களை மையப்படுத்தி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

இந்த இருவரும் தமிழர்களுக்கு என்று அறிவித்துள்ள தேர்தல் வாக்குறுதிகள் என்னென்ன என்று பார்க்கலாம்.

### சஜித் பிரேமதாஸவின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள தமிழர்களுக்கான திட்டங்கள்

1. தோட்டத் தமிழ் விவசாயிகளின் நிலையான வருமானத்துக்கு உத்தரவாதமளிக்க அவுட் - க்ரோவர் திட்டம் குறித்து தனியார் மற்றும் அரச நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்த பொறிமுறை.

2. தோட்டப் பகுதிகளில் 10 தேசிய பாடசாலைகள்.

3. கௌரவம், சமத்துவம், அபிவிருத்தி, பொருளாதார பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

4. தொழிற்றுறை மற்றும் சேவைத் துறைக்கு மலையக இளைஞர்கள் உள்ளீர்ப்பு.

5. 7 பேர்ச் காணியுடன் தனி வீடுகள் மலையக மக்களுக்கு வழங்கப்படும்.

6. நியாயமான மற்றும் சமமான சம்பள அதிகரிப்பு.

7. பெருந்தோட்ட சுகாதாரமானது ஏனைய பகுதிகளைப் போன்று தர முயர்த்தப்படும்.

8. உயர் கல்வியை மேம்படுத்த ஹைலேண்ட் பல்கலைக்கழகம் திறக்கப்படும்.

9. நாடு முழுவதும் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் மலையகத் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான விசேட செயற்றிட்டம்.

10. மலையக இளைஞர்களுக்கான தொழில் பயிற்சியை உறுதிப்படுத்தல் உள்ளிட்டவை மலையக மக்களுக்கான உறுதிமொழிகளாக சஜித் பிரேமதாஸவின் தேர்தல் அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

11. மலையக சமூக மேம்பாட்டுக்காக விசேட ஜனாதிபதி செயலணி.

12. தொழில் வலயங்களும் அவற்றுடன் தொடர்புற்ற தொழிற்பயிற்சி நிறுவனங்களும் தோட்ட பிரதேசங்களில் இங்குள்ள இளைஞர்களுக்காக அமைக்கப்படும்.

13. தோட்டத்தொழிலாளர்களுக்கு ரூ.1500 நாளாந்தச் சம்பளம்.

14. நீண்டகால இடம்பெயர்வுகளினால் பாதிக்கப்பட்டவர்களின் மீள்குடியேற்றம், வீடுகள் மற்றும் வணிக மறுசீரமைப்பு ஆகியன மேற்கொள்ளப்படும்.

15. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனோரை கண்டுபிடிக்கும் முயற்சி.

16. காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை முழுமையாக ஆதரித்தல்.

17. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவித்திட்டங்கள் மற்றும் இழப்பீடுகளை வழங்குதல்.

18. இன சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது.

### கோத்தபாய ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள தமிழர்களுக்கான திட்டங்கள்

01. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் நுண்கடனினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அர்சாங்கத்தின் தலையீட்டில் கடன் மற்றும் விவசாயக் கடனை பெற்றுக்கொடுத்தல்.

02. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புனர்வாழ்வளிக்கப்பட்ட இளைஞர்களுக்கு அவர்களது வாழ்க்கையை சரியான முறையில் கொண்டு செல்வதற்கான முதலீடுகளை மேற்கொள்ளுதல்.

03. மனிதாபிமான நடவடிக்கைகளின்போது பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீட்டுத் தொகையை அதிகரித்து வழங்குதல்.

04. தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் 1000 ரூபாவாக அதிகரிக்கப்படும்.

05. மேலதிக வருமானங்களை பெற்றுக்கொள்வதற்காக பாவனைக்கு உட்படுத்தாதுள்ள நிலங்களில் விவசாயம் செய்வதற்காக வழிவகைகள் செய்யப்படும்.

06. பெருந்தோட்டங்களில் மேலதிக கணித, விஞ்ஞானப் பாடசாலைகள் உருவாக்கப்படும்.

07. சகல வசதிகளுடனும் கூடிய குறைந்த மாடி வீடுத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படும்.

08. கர்ப்பிணி மற்றும் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்தை பெற்றுக்கொடுக்க புதிய திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படும்.

09. மலையக இளைஞர்களின் தொழில் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான பல்கலைக் கழக சபைபோன்று ஹற்றனில் ஒதுக்கப்பட்டுள்ள காணியில் நிறுவப்படும்.

10. மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை திறப்பதற்கான வழிவகைகள் செய்யப்படும் என்பதுடன், தோட்டத் துறையை மையப்படுத்திய கைத்தொழில் வலயமொன்றை நிறுவ நடவடிக்கையெடுத்தல்.

11. தோட்டத்துறையை அபிவிருத்தி செய்ய சிறந்த முகாமைத்துவ பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்படும்.

12. இவரின் வாக்குறுதியில் மலையக புத்திஜீவிகளின் நீண்டகால கோரிக்கையாகவுள்ள தனிப் பல்கலைக்கழகம் குறித்து எவ்வித அறிவிப்புகளும் இல்லை.

13. வடக்கு, கிழக்கில் அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

14. பெரிய மற்றும் நடுத்தர விவசாயங்களை மேற்கொள்வதற்காக அரசாங்கத்தின் காணிகளை குத்தகைக்கு வழங்குவதுடன், விவசாயிகளுக்கு விவசாயங்களை மேற்கொள்வதற்கான அனுமதியும் வழங்கப்படும்.

15. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள இளைஞர்களுக்கு அதே மாகாணத்தில் அரச வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

16. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் சேவைக்கு ஆட்கள் இணைத்துக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில், தமிழ் மொழி அறிவு குறித்து கவனம் செலுத்தப்படும்.

17. குறித்த இரண்டு மாகாணங்களிலும் விவசாய பொருட்களை சேகரிப்பதற்கான பொருளாதார வலயங்களை நிறுவுதல்.

இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கான திட்டங்கள் பல வெவ்வேறு விதத்தில் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இரு வேட்பாளர்களும் பெரும்பாலும் ஒரே எண்ணத்திலான திட்டங்களையே முன்வைத்துள்ளமையை காண முடிகின்றது.

இந்த நிலையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் கட்சிகள் இணைந்து 13 நிபந்தனைகளை வெளியிட்ட போதிலும், இந்த இரண்டு வேட்பாளர்களும் தமது தேர்தல் அறிக்கைகளில் வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகளின் நிபந்தனைகளை உள்வாங்கவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

நன்றி B.B.C

# 'மகன் வருகைக்காகக் காத்திருக்கிறேன்' தளதளக்கும் குரலில் பேரறிவாளனின் தந்தை

பேரறிவாளனுக்கு இரண்டாவது முறையாக ஒரு மாத பரோல் வழாங்கியிருக்கிறது,

ராஜீவ் காந்தி கொலை வழக்கில், பேரறிவாளன் உட்பட ஏழு பேரும் 28 ஆண்டுகளாக சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார்கள். இவர்களை விடுதலை செய்ய ஒன்றரை ஆண்டுக்கு முன்பு தமிழக அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றி, ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்துக்குப் பரிந்துரைக் கடிதம் அனுப்பியது.



இது தொடர்பாக, ஆளுநர் எந்த முடிவையும் எடுக்காமல் அமைதியாக இருப்பதால், ஏழு பேரும் மன உளைச்சலில் இருப்பதாகத் தகவல்கள் வருகின்றன. வேலூர் மத்திய சிறையில் இருந்த பேரறிவாளன் சிறுநீரகப் பிரச்சினை, மூட்டு வலியால் கடுமையாக அவதிப்பட்டார்.

வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தார். உடல் பிரச்சினை குணமாகாததால், சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது வைத்தியசாலையில் மேல் சிகிச்சை பெறப் பரிந்துரை செய்யப்பட்டார். அதைத்தொடர்ந்து, சென்னை புழல் மத்திய சிறைக்கு மாற்றப்பட்டு, அங்கிருந்தபடி ராஜீவ் காந்தி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இதனிடையே, 2017 ஆம் ஆண்டு பேரறிவாளனின் தந்தை குயில்தாசனின் உடல் நிலை பாதிக்கப்பட்டதால், பேரறிவாளனை பரோலில் விடுவிக்கத் தாய் அற்புதம்மாள் தமிழக அரசிடம் கோரிக்கை வைத்தார்.



அந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் பேரறிவாளனுக்கு ஒரு மாதம் பரோல் கிடைத்தது. சிறகடித்த பறவையைப் போல் வெளியில் வந்த அவர் வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டையிலுள்ள தன் வீட்டில் தங்கினார். இத்தனை ஆண்டு சிறைவாசத்துக்குப் பிறகு அவருக்குக் கிடைத்த முதல் பரோலும் அதுதான். உடல்நிலை பாதித்த தந்தையை அருகிலிருந்து பார்த்துக் கொண்டார். எப்போதும், 'அறிவு அறிவு' என்று நினைத்துக் கொண்டே உருகும் தாயை விட்டு நகரவில்லை. 'அறிவுக்கு இந்த இனிப்புத்தான் பிடிக்கும். அதைத்தான் அவன் விரும்பிச் சாப்பிடுவான்' என்று பார்த்துப் பார்த்துக் கவனித்துக்கொண்டார் தாய் அற்புதம்மாள்.

பரோல் முடிந்து மீண்டும் பேரறிவாளன் சிறைக்குத் திரும்பியபோது, குடும்பமே சோகத்தில் மூழ்கியது. "19 வயதில் சிறைக்குச் சென்ற தன் மகன் இளமைக் காலம் முடிந்து 47 வயதில் வெளியில் வந்தான். அவனுக்குத் திருமணம் செய்து வைத்து அழகு பார்க்க என்னால் முடியவில்லையே" என்று தாய் அற்புதம்மாள் கதறி அழுதார்.

வெளியுலகுக்குப் பேரறிவாளன் மீதான பார்வை எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். அற்புதம்மாளுக்கு அவர் என்றும் சின்னஞ்சிறு குழந்தைதான். இந்த நிலையில், இரண்டாவது முறையாக மீண்டும் பரோல் கேட்டு பேரறிவாளனே விண்ணப்பித்திருந்தார்.

இதற்குத் தமிழக அரசு ஒப்புதல் வழங்கியதைத் தொடர்ந்து, புழல் மத்திய சிறை நிர்வாகம் பேரறிவாளனை ஒரு மாத பரோலில் வெளியில் அனுப்ப முடிவு செய்திருக்கிறது.

இன்னும் ஓரிரு நாட்களில் அவர் வெளியில் அனுப்பப்படலாம் என்று தகவல்கள் வருகின்றன. இந்த முறையும் ஜோலார்பேட்டையில் உள்ள தன் வீட்டில் தங்குவதற்குத் தான் வாய்ப்பிருக்கிறது. "ஊடகங்களுக்குப் பேட்டி அளிக்கக் கூடாது, அமைப்பு சார்ந்த நிர்வாகிகளைச் சந்திக்கக் கூடாது, பொது இடங்களுக்குச் செல்லக் கூடாது' போன்ற பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் சொல்கிறார்கள்.

மகன் வருகையையொட்டி, பேரறிவாளனின் தந்தை குயில்தாசனிடம் பேசினோம்,

"எனக்கு உடல்நிலை சரியில்லை. என்னைப் பார்க்க மகன் விரும்புகிறார். என் மகள் வழி பேர்த்திக்கு திருமணம் நடைபெற உள்ளது. தாய் மாமன் என்ற முறையில் திருமணத்தில் கலந்துகொள்ள வேண்டும். இதுபோன்ற காரணங்களால் தான் அறிவு பரோலுக்கு விண்ணப்பித்தார். என் மகன் நிரபராதி என்று மக்கள் நினைக்கிறார்கள்.

அரசியல் கட்சிகளின் விமர்சனங்களையும் விடுதலைக்கான எதிர்ப்புகளைப் பற்றியும் நான் கண்டுகொள்வதில்லை. மகனைப் பார்க்க ஆவலுடன் காத்திருக்கிறேன்'' என்றார் மகிழ்ச்சி பொங்க.

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : குழந்தையும் தெய்வமும்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர்கள்: ரி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா



அன்புள்ள மான் விழியே
ஆசையில் ஓர் கடிதம்
நான் எழுதுவதென்னவென்றால்
உயிர் காதலில் ஓர் கவிதை !

அன்புள்ள மன்னவனே
ஆசையில் ஓர் கடிதம்
அதை கைகளில் எழுதவில்லை
இரு கண்களில் எழுதிவந்தேன் !

நலம் நலம்தானா முல்லை மலரே
சுகம் சுகம்தானா முத்துச்சுடரே
நலம் நலம்தானா முல்லை மலரே
சுகம் சுகம்தானா முத்துச்சுடரே
இளையகன்னியின் இடை மெலிந்ததோ
எடுத்த எடுப்பிலே நடை தளர்ந்ததோ
வண்ணப் பூங்கொடி வடிவம் கொண்டதோ
வாடைக் காற்றிலே வாடி நின்றதோ

அன்புள்ள மான்விழியே
ஆசையில் ஓர் கடிதம்
நான் எழுதுவதென்னவென்றால்
உயிர் காதலில் ஓர் கவிதை

நலம் நலம்தானே நீ இருந்தால்
சுகம் சுகம்தானே நினைவிருந்தால்
நலம் நலம்தானே நீ இருந்தால்
சுகம் சுகம்தானே நினைவிருந்தால்
இடை மெலிந்தது இயற்கை அல்லவா
நடை தளர்ந்தது நாணம் அல்லவா
வண்ணப் பூங்கொடி பெண்மை அல்லவா
வாடவைத்ததும் உண்மை அல்லவா

அன்புள்ள மன்னவனே
ஆசையில் ஓர் கடிதம்
அதை கைகளில் எழுதவில்லை
இரு கண்களில் எழுதிவந்தேன்
அன்புள்ள மான் விழியே
ஆசையில் ஓர் கடிதம்
நான் எழுதுவதென்னவென்றால்
உயிர் காதலில் ஓர் கவிதை


உனக்கொரு பாடம் சொல்ல வந்தேன்
எனக்கொரு பாடம் கேட்டுக் கொண்டேன்
உனக்கொரு பாடம் சொல்ல வந்தேன்
எனக்கொரு பாடம் கேட்டுக் கொண்டேன்
பருவம் என்பதே பாடம் அல்லவா
பார்வை என்பதே பள்ளி அல்லவா
ஒருவர் சொல்லவும் ஒருவர் கேட்கவும்
இரவும் வந்தது நிலவும் வந்தது

அன்புள்ள மான் விழியே
ஆசையில் ஓர் கடிதம்
அதை கைகளில் எழுதவில்லை
இரு கண்களில் எழுதிவந்தேன்



# உங்களுக்கு ஒரு நாடு நாட்டுக்கு ஒரு எதிர்காலம்

" நீங்கள் உங்கள் பொறுப்பை நிறைவேற்றுங்கள், நான் எனது பொறுப்பை நிறைவேற்றி பாதுகாப்பான நாட்டையும் சுபீட்சமான தேசத்தையும் கட்டியெழுப்புவேன் "



பயனுள்ள பிரஜை, மகிழ்ச்சியாக வாழும் குடும்பம், ஒழுக்க விழுமியங்களைக் கொண்ட சமூகம் மற்றும் செழிப்பான தேசம் என்ற நான்கு வகையான இலக்குகளை வெற்றிகொள்ள வேலைத் திட்டமொன்றையும், முன்னேற்றமான எதிர்காலத்தையும் உருவாக்குவோம் என்று கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



## ஒவ்வொரு குடும்பத்திற்கும்

- வீடுகள் அற்றவர்களுக்கு தமது வருமானத்திற்கு ஏற்ப இலகு தவணைக் கொடுப்பனவின் மூலம் வீடொன்று.
- நடுத்தர குடும்பத்தினருக்கு வருமானத்திற்கு ஏற்ப வீடுகள்.
- இளைஞர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு சலுகை கொடுப்பனவு திட்டத்தின் கீழ் நகர்ப்புறங்களில் வீடுகள்.
- புனரமைக்க முடியாத மாடி வீடுகளுக்கு பதிலாக புதிய மாடி வீடுகள்.
- இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் குடிசைவாசிகளுக்கு நகர்ப்புற வீடமைப்புத் திட்ட முறையில் வீடுகள்.
- அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு முதலாவது வீட்டை நிர்மாணிப்பதற்கு வரிச் சலுகை.
- வீடமைப்பு வங்கி மூலம் சலுகை வட்டியில் வீட்டுக் கடன்.
- சகல வீடுகளுக்கும் 24 மணிநேரமும் சுத்தமான குடிநீர் வசதி (3 வருடங்களுக்குள்).



## சொகுசுமிக்க பயணங்களுக்கு

- கொழும்பு - கண்டி அதிவேகப் பாதையை விரைவில் நிர்மாணித்தல்.
- வடக்கு மற்றும் இரத்தினபுரி அதிவேகப் பாதைகளின் நிர்மாணிப்பை விரைவாக ஆரம்பித்தல்.
- பிரதான பாதைகளின் முந்திச்செல்லும் ஒழுங்கைகள் (Overtaking lanes) மூலமாக வாகன நெருக்கடிக்கு தீர்வு.
- சேதமடைந்த பிரதான பாதைகளை சர்வதேச தரத்திற்கு ஏற்ப நவீனமயப்படுத்தல்.
- கொழும்பு நகரை இணைக்கும் பல சொகுசு பஸ் சேவைகளை ஏற்படுத்தல்.
- சகல பஸ்களிலும் பயன்படுத்தக்கூடிய e-ticket சேவையை அறிமுகப்படுத்தல்.
- மிக வேகமான சொகுசுமிகு இரயில் சேவைகளையும், சாதாரண இரயில்களுக்கு மேலதிகமாக சொகுசுமிகு இரயில் சேவைகளையும் வழங்குதல்.
- இரயில் சேவையை டிஜிட்டல் முறையின் மூலம் அனுமதிப் பத்திரம் வழங்குதல். Online Service தன்னியக்க வசதிகள்.



## வெளிநாட்டிலுள்ள உங்களுக்கு

- வெளிநாடுகளில் பணிபுரிவோர் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் ஈட்டும் வெளிநாட்டுச் செலாவணியில் வருமான வரியிலிருந்து நீக்கப்படும்.
- அப்பணம் வங்கிகளில் வெளிநாட்டு பணச் சேமிப்பாக வைத்திருக்கும் போது அறவிடப்படும் வரி நீக்கப்படும்.
- ஆண்டொன்றிற்கு 50,000 டொலர் வீதம் பத்தாண்டுகளுக்கு இலங்கைக்கு தொடர்ந்தும் வெளிநாட்டுச் செலாவணியை அனுப்பும் வெளிநாட்டில் பணிபுரிவோர் அல்லது வெளி நாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு தீர்வை அற்ற வாகன அனுமதிப் பத்திரம்.
- 6 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் வெளிநாடுகளில் பணிபுரிவோருக்கு பங்களிப்பு ஓய்வூதிய முறை அறிமுகப்படுத்தப்படும்.
- வெளிநாடுகளில் பணிபுரிவோர் மற்றும் வெளிநாடுகளில் வசிப்போர்க்கு புதிய தொடர் மாடி வீடுகளில், தவணைக் கட்டண முறையில் சகல வசதிகளுடன் கூடிய வீடுகள்.



## வடக்கு கிழக்கு மக்களுக்கு

- வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் இளைஞர் யுவதிகளுக்கு பல்கலைக்கழக கல்லூரிகள், தொழில்சார் கல்வி நிறுவனங்கள், உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்பம் விவசாய ஆராய்ச்சி போன்றவற்றை ஆரம்பித்து உரிய பயிற்சிகள் வழங்கப்படும்.
- வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து, வலுவூட்டுவதற்கான புத்தாக்க நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படும்.
- வடக்கு கிழக்கு யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள்.
- வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் பெண்களுக்கு அரசினால் பல்வேறு தொழிற்துறைகளுக்கு சலுகைக் கடன்.
- புனர்வாழ்வளிக்கப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு தமது வாழ்க்கையை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான முதலீடுகள்.
- வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக கைத்தொழில்களுக்கு மூலதனங்கள் வழங்கப்படும்.
- அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள தனியார் காணிகள் அதன் உரிமையாளர்களுக்கு விடுவிக்கப்படும்.



## பொதுமக்களுக்கும், சிரேஷ்ட பிரஜைகளுக்கும்

- வரியைக் குறைப்பதன் மூலம் அத்தியாவசிய பொருட்களின் விலை குறைவை நிலையாக முன்னெடுத்துச் செல்லல்.
- நடைமுறையிலுள்ள எரிபொருள் விலை சூத்திரம் உடனடியாக ரத்து செய்யப்படும்.
- வறுமை ஒழிப்பை இலக்காகக் கொண்ட வேலைத்திட்டம் ஒன்று கிராமிய மற்றும் நகர பொருளாதாரத்தில் முன்னெடுக்கப்படும்.
- பாடசாலை மாணவர்களுக்கு சீருடை, பாதணிகள், புத்தகப் பைகளை சலுகை முறையில் வழங்க வவுச்சர்கள் மற்றும் போஷாக்குள்ள ஒருவேளை உணவை வழங்குவதற்கும் சமநிலையான முயற்சிகள் முன்னெடுக்கப்படும்.
- சிரேஷ்ட பிரஜைகளுக்கு 2500 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படும்.
- 65 வயதிற்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட மருந்து கொள்வனவிற்கு மானியம்.



## தோட்டப்புற சமூகத்திற்கு

- தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1000 ரூபாயாக அதிகரிக்கப்படும்.
- சகல குடும்பங்களுக்கும் சம்பளத்திற்கு மேலதிகமாக, தற்போது பயன்படுத்தப்படாத காணிகளில் இடைப் பயிர்களைப் பயிரிட்டு மேலதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கான வேலைத் திட்டம்.
- பெருந்தோட்ட மக்கள் வாழும் பகுதிகளில் தற்போது குறைபாடாக காணப்படும் கல்வி வசதிகள் வழங்கப்படும். அத்துடன் தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களும் பெற்றுக்கொடுக்கப்படும்.
- தோட்டத் தொழிலாளர்களுக்கு வசதிகள் மிக்க வீட்டுத் திட்டங்கள்.
- கர்ப்பிணித் தாய்மார் மற்றும் சிறுவர்களின் போஷாக்கு நிலையை மேம்படுத்துவதற்கு புதிய போஷாக்குத் திட்டமும், சுகாதார வசதிகளும் முன்னெடுக்கப்படும்.
- இளைஞர் யுவதிகளுக்கு நவீன தொழில்நுட்பப் பயன்பாட்டை வழங்குவதற்காக விவசாய கல்லூரி ஒன்றும், தமிழ் மொழி மூல ஆசிரியர் பயிற்சி கல்லூரி ஒன்றும் உருவாக்கப்படும்.

**நம்பிக்கைமிகு இலங்கையின் நிமித்தம் வாக்களித்திடுங்கள்!**

ගෝඨාභය රාජපක්ෂ
கோட்டாபய ராஜபக்ஷ
Gotabaya Rajapaksa

தேசத்திற்குப் பொறுப்பு கூறும்

# கோட்டாபய

# தங்கை தந்த அறிமுகம்; 14 வருட டேட்டிங் பிரமாண்டமாக நடந்த நடால் திருமணம்





டென்னிஸ் விளையாட்டின் உச்ச நட்சத்திரம் ரஃபேல் நடால். களிமண் களம் என்று வந்துவிட்டால் இவரை வீழ்த்துவது அத்தனை சுலபம் கிடையாது. இதுவரை 19 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றிருக்கும் நடாலின் திருமணச் செய்தி பலருக்கு ஆச்சர்யம் தான்.

காரணம், களத்தில் என்னுடைய டென்னிஸ் ஆட்டம் முடிந்த பின்னர்தான் திருமணம்' எனப் பலமுறை சொல்லியிருக்கிறார். இந்த நிலையில் நேற்று ஸ்பெயினில் இருக்கும் தீவான மல்லோர்காவில் தனது நீண்ட நாள் காதலியான ஸிஸ்கா பெரெல்லோவை திருமணம் செய்துகொண்டார்.

மல்லோர்காவில் உள்ள பிரப்ல கோட்டையில் இந்தத் திருமணம் நடைபெற்றது. சுமார் 350 நபர்கள் மட்டுமே இந்த நிகழ்வில் அழைக்கப்பட்டனர்.

அவர்களில் 1975 முதல் 2014 வரை ஸ்பெயின் மன்னராக இருந்த ஜுவான் கார்லோஸும் ஒருவர் என்று கூறப்படுகிறது. இந்த திருமண நிகழ்வில் கலந்து கொண்ட யாரும் புகைப்படம் எடுக்க அனு மதிக்கப்படவில்லை. உலக பிரபல சமையல் கலை ஞரான டகோஸ்டா(Quique Dacosta) தான் திருமண விழாவுக்கான உணவு வகைகளை தயாரித்துள்ளார்.

33 வயதான நடால், 31 வயதாகும் ஸிஸ்கா பெரெல்லோவை 2005 ஆம் ஆண்டு தனது சகோதரி மூலம் தான் சந்தித்தார். நடாலின் சகோதரியும் ஸிஸ்காவும் குழந்தைப் பருவம் முதல் நண்பர்கள் என்பது குறிப் பிடத்தக்கது. கடந்த 14 வருடங்களாக நடாலும் ஸிஸ்காவும் காதலித்து வந்தனர். பிசினஸ் படிப்பை படித்து முடித்த பெரெல்லோ முதலில் ஒரு இன்ஷூரன்ஸ் நிறுவனத்தில் பணியாற்றினார். நடாலுடனான காதலுக்குப் பின்னர் ரஃபேல் நடால் ஃபவுண்டேஷனின் திட்ட மேலாளராக நியமிக்கப்பட்டார்.

சமூக வலைதளங்களில் அதிகம் தலைகாட்டாத பெரெல்லோ. கிராண்ட் ஸ்லாம் ஆட்டங்களில் நடால் விளையாடும் போட்டிகளில் கலந்துகொண்டு கண்டுக ளிப்பார். ஆனாலும் போட்டியின் போது நடாலுடன் அவர் பயணிப்பதில்லை. இது தொடர்பாக அவர் கூறுகையில், 'ஒரு தொடரின் போது போட்டி, பயிற்சி நேரம் போக நடால் அமைதியை விரும்புவார். அதனால் அவரை தனிமை யில் விட்டுவிடுவேன். அதைத்தான் அவரும் விரும்புவார்" என்றார்.

நேற்று திருமணம் நடைபெற்ற நிலையில் நடாலுக்கு அதைக் கொண்டாட அதிக நேரம் இல்லை. அடுத்தடுத்த டென்னிஸ் தொடர்கள் வருவதால் விரைவாகப் பயிற்சி செய்ய வேண்டும். அதனால் திருமணத்துக்குப் பிந்தய ஹனிமூன் திட்டம் குறித்து எதுவும் அறிவிக் கப்படவில்லை. ஆனால்,-கடந்த செப்டம்பர் மாதமே இந்த ஜோடி ப்ரீ-வெட்டிங் ஹனிமூனுக்காக பஹாமாஸ் சென்று வந்துள்ளது.

இத்தனை காலமாக நடாலின் காதலியாக போட்டிக ளுக்குச் சென்றுவந்த பெரெல்லோ, இனி மனைவியாக வலம் வர இருக்கிறார்.

நடாலின் நண்பரும் களத்தின் கடுமையான போட்டியாளருமான ரோஜர் ஃபெடரர், சுவிஸ் நாட்டில் நடக்கும் உள்ளூர் தொடர் காரணமாக நடாலின் திருமணத்தில் கலந்துகொள்ள முடிய வில்லை என்ற தகவலும் வெளியாகியுள்ளது.






# காதல் மனைவியிலும் கிரிக்கெட் மீதே காதல்

கிரிக்கெட்-என்ற சொல்லைக் கேட்டாலே ஆழ்ந்த உறக்கத்திலிருந்தும் கூட விழித்துக்கொள்ளும் அளவுக் குத் தீவிர ரசிகர்களை உலகம் முழுவதிலும் பார்க்கலாம். இதற்கெல்லாம் ஒருபடி மேலே சென்று பாகிஸ்தானைச் சேர்ந்த கிரிக்கெட் ரசிகர் ஒருவர், கிரிக்கெட் பார்த்துக் கொண்டே தனது திருமணச் சடங்குகளில் பங்கேற்கும் புகைப்படம் ஒன்றை இணையத்தில் பதிவிட்டுள்ளார். அது தற்போது வைரலாகி வருகிறது.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண் டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணியானது அவுஸ்திரே லிய அணியுடன் இருபது-20 போட்டிகளிலும் டெஸ்ட் தொடர்களிலும் விளையாடி வருகிறது. பாகிஸ்தான்-அவுஸ்திரேலியாவுக்கு இடையேயான முதல் இருபது-20 போட்டி மழையின் காரணமாக நின்றுபோன நிலையில், இரண்டாவது இருபது-20 போட்டி கடந்த 5 ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் உள்ள கான்பெர்ராவில் நடைபெற்றது.



இதில் டாஸ் வென்ற பாகிஸ்தான் அணி பேட்டிங் கைத் தேர்வுசெய்து விளையாடி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 150 ஓட்டங்களைச் சேர்த்தது. அடுத்து விளையாடிய அவுஸ்திரேலிய அணி 18.3 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 151 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இந்தநிலையில், அமெரிக்காவில் வசித்துவரும் பாகிஸ்தானைச் சேர்ந்த ஹசன் தஸ்லீம் என்ற தீவிர கிரிக்கெட் ரசிகரின் திருமணம் கடந்த 5 ஆம் திகதி நடை பெற்றது. ஹசனுக்கு கிரிக்கெட் பார்க்காமல் திரு மணச் சடங்குகளில் அரைமனதாகப் பங்கேற்க் விருப்ப மில்லை. எனவே, மணமகளுடன் கிரிக்கெட் பார்த்துக் கொண்டே திருமணச் சடங்குகளில் பங்கேற்றுள்ளார்.

அந்தப் புகைப்படத்தைத் தனது இணையத்தில் பகிர்ந்த ஹசன் ஹதான் ஒரு தீவிர கிரிக்கெட் ரசிகர் என்றும் எப்போதும் மேட்ச் பார்ப்பதைத் தவறவிட்ட தில்லை என்றும் தனது திருமண இரவாக இருந்தா லும் கிரிக்கெட் பார்ப்பதைத் தவற விடமாட்டேன் என்றும் பதிவிட்டுள்ளார்.

இந்தப் பதிவு இணையத்தளத்தில் வைரலாகி வரும் நிலையில், சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) தனது ட்விட்டர் பக்கத்தில் ஹசனின் போஸ்ட் டைப் பகிர்ந்து "அமெரிக்க கிரிக்கெட் ரசிகரிடம் ஒரு மெசேஜ் வந்துள்ளது" எனப் பதிவிட்டு `Couple Goals' ஹேஷ்டேக் மூலம் வாழ்த்துச்செய்தியைத் தெரி வித்துள்ளது. இது கிரிக்கெட் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று வருகிறது.

# நினைத்தாலே இனிக்கும்

வீட்டில் பிரிட்ஜ் இல்லாத நாட்களில் ஐஸ் தண்ணீருக்காக ஏங்கியிருக்கிறேன். இப்போது என் வீட்டிலும் ஏஸி, பிரிட்ஜ் இருக்கிறது. நம்ப மாட்டீர்கள வாங்கிய நாளிலிருந்து. இன்று வரை பிரிட்ஜில் நீரை வைத்து குளிர்ச்சியாக்கி குடித்ததே இல்லை.

அங்குமிங்கும் பார்த்துப்பார்த்து. வீட்டில் வாங்கி வைத்த டைனிங் டேபிளில் இப்போதெல்லாம் உட்கார்ந்து சாப்பிடத் தோன்றுவதில்லை .

அலுவலகம் மற்றும் வெளியிடங்களில் டேபிளில் அமர்ந்து சாப்பிட்டு அலுத்துப்போனவனுக்கு, வீட்டிலிருக்கும் போது தரையில் அமர்ந்து சாப்பிட்டால் மட்டுமே பரம திருப்தி ..!


சோஃபாவும் அப்படித்தான்!பீட்ஸா, பர்கர்ன்னு என்றெல்லாம் விதவிதமான பேர்கள் சொல்லினாலும் கூட, என்ன இருந்தாலும் வாழை இலை சாப்பாட்டுக்கு இணையுண்டா?" என்று கடைசியில் மனமாற்றம் அடைந்தவர்களில் நானும் ஒருவன் !

**4 GB RAM, quardcore processor,128 GB in built memory** என்று அனைத்துமே பார்த்து. அதிக காசைப் போட்டு வாங்கிய மொபைல் போனில் வெறுமனே **Facebook, WhatsApp** இல் மூழ்குவதை நினைத்து அவ்வப்போது சிரித்துக்கொள்வேன்.

ஆயிரம் பரிசோதனைகளைச் செய்து பார்த்த பிறகு வாங்கி வைத்தேன்,ஒரு தொலைக்காட்சி பெட்டி.ஆனால் இப்போதெல்லாம் நான் நாளொன்றுக்கு, இல்லை இல்லை வாரத்திற்கு ஒரு அரை மணிநேரம் டிவி பார்த்தாலே அது பெரிய விஷயம் ..!

கால மாற்றம் இப்போது கையிலேயே உலகத்தை காணும் வசதி இருக்கிறது .அதற்காக ஒரு வருடத்திற்கு சந்தாகூட செலுத்தியாகி விட்டது.எல்லாம் இருந்தும், எதையும் சரிவர பய்ன்பாட்டுக்கு கொண்டு வருவதில்லை.

பயன்படுத்துவதும் இல்லை ...வெத்து பந்தான்னு கூட சொல்லுவேன் .அப்படித்தான் ஆகிப்போச்சி பொழப்பு. அன்லிமிட்டட் சாப்பாட்டை வாங்கிவிட்டு அளவுச் சாப்பாடு சாப்பிடுபவனைப் போல அதை அளவாகத்தான் பயன்படு



த்த முடிகிறது.எல்லாவற்றையும் நினைத்துப்பார்த்தால். எல்லாமே ஒரு மாயையாக தோன்றுகிறது. இது ஒரு **Duplicate** வாழ்க்கை என்று நன்றாகவே உணர முடிகிறது.

வீட்டை மிதித்தவுடன் களைப்பில் "சரி கொஞ்ச நேரம் கண்ணயரலாம்" என்ற நினைப்பில், தினசரி எனக்காகக் காத்திருக்கும் தலையணையைத்தான் கண்கள் தேடுகிறது.

இப்படியாக பல சுய பரிசோதனைகளின் வாயிலாக சில விடயங்கள் உரைத்தன, உணர்த்தவும் செய்தது, இப்போது பணவரவு, சகல வசதிகளோடு இருந்தாலும், வாழ ஆசைப்படுவது என்னவோ நமது பழைய மனதுக்குப்பிடித்த நெருக்கமான வாழ்வைத்தான்!ஆயிரம் இருந்தும், வசதிகள் இருந்தும் நோ பீஸ் ஒப் மைண்ட் இதை படிச்சவங்களுக்கு புரியுதோ, புரியலையோ ஆனால் அனுபவிச்சங்க இதை கண்டிப்பா உணருவாங்க.

# வாழ்க்கையென்பது

ஒரு குரு வெளிநாட்டுப் பயணம் செய்வதற்காக,மிகப் பிரபலமான விமானம் ஒன்றில் பயணம் செய்தார். விமானம் நடுவானில் பயணித்தபோது பணிப் பெண், எல்லோருக்கும் வரவேற்பு பானமாக விலை உயர்ந்த மதுபானத்தைக் கொடுத்து, உபசரித்தபடி வந்து கொண்டிருந்தார்.

இப்போது குருவின் முறை வந்தது. அவரிடமும் பணிப் பெண் ஒரு மதுக்கோப்பையை நீட்டினார். அவர் வாங்க மறுத்துவிட்டார்.பணிப்பெண்,"ஐயா , எங்கள் விமானத்தில் பயணிக்கிற ஒவ்வொருவருக்கும்நாங்கள் கொடுக்கும் உயர்தரமரியாதை இது.ஏற்றுக் கொள்ளுங்கள் " என்றார். மதகுரு, "அம்மா, உங்கள் அன்புக்கு நன்றி.இது எனக்கு வேண்டாம் " என்றார்.

"பணிப்பெண் விடவில்லை."உலகிலேயே விலை உயர்ந்த மதுவகை இது. "கொஞ்சம்குடித்தால் அப்புறம் விடவேமாட்டீர்கள் " என்றார்."அப்போதும் மதகுரு ஏற்றுக் கொள்ளவில்லை.பணிப் பெண் கடைசியாகச் சொன்னார்,

"இவ்வளவு தூரம் நான் சொன்னதற்காக ஒரு துளியேனும் பருகுங்களேன் . குரு சொன்னார்,"அம்மா , நான் ஒரு சிந்தனையாளன்,மதுவெல்லாம் பருக மாட்டேன். நீங்கள் ஒன்று செய்யுங்கள்.இதை விமான ஓட்டியிடம் கொடுத்து விடுங்கள் ". அவர் அப்படிச் சொன்னதும் பணிப் பெண் ஆடிப்போனார்.

"ஐயோ, பணியில் இருக்கிற விமானி எப்படி மது அருந்த முடியும்...? இதை, அவர் குடித்தால் அவர் புத்தி தடுமாறி விமானம் விபத்துக்கு உள்ளாகுமே.இத்தனை உயிர்கள் பறிபோகுமே" என்று பதறினார். குரு சொன்னார்,"சகோதரி,வாழ்க்கையும் இப்படிப்பட்டதுதான். தகாத காரியங்களை செய்தால்புத்தி தடுமாறி விபத்து நேரிடும்.


வாழ்க வையகம் வாழ்க வளமுடன்...



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1884


### சுபேசன்

கவனித்திருக்கிறீர்களா. சிலர் தப்பு பண்ணிட்டா மன்னிப்புக் கேட்பதற்குப் பதில் நம்மிடம் பேசுவதை நிறுத்திக்கொள்கிறார்கள்



### செந்தூரன்

எண்ணங்களில் நீ அழகாக இரு. உன் தோற்றம் எப்படியிருந்தாலும் கவலை கொள்ளாதே



### ஆரோகி

இரக்க குணமுடையவர்கள்தான் எளிதாக ஏமாற்றப்படுகிறார்கள். அதுவும் இளிச்சவாயன் என்ற பட்டப் பெயருடன்



### விமல்

அணிந்திருக்கும் முகமூடி கிழியும் வரை அனைவரும் நல்லவர்களே



### குபேரன்

உயரத்தில் இருந்து பார்த்தால் மற்றவர்கள் சிறியவர்களாக உனக்குத் தெரியலாம்... ஆனால் நீயும் அவர்களில் ஒருவன்தான் என்பதை ஒருபோதும் மறந்துவிடாதே...



### வான்மதி

நடிக்கத் தெரியாத அன்பில் அதிகம் இருப்பது கோபமும் சண்டையும் மட்டுமே



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

german cooperation giz NAITA



# அனுமதிகள் ஆரம்பம்

## இப்போது விண்ணப்பியுங்கள்

**SLGTI** KILINOCHCHI SRI LANKA GERMAN TRAINING INSTITUTE

இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனமானது (SLGTI) யாழ். பல்கலைக்கழகத்தின் அயல் நிறுவனமாக அறிவியல்நகர் கிளிநொச்சியில் அமைந்துள்ளதுடன் ஜேர்மனிய நியமங்களுக்கு ஏற்றவாறு ஆறு முக்கிய துறைகளில் எதிர்காலத்தை சரியான முறையில் திட்டமிடக் கூடியவாறு தொழிற்பயிற்சியை வழங்கும் ஓர் நிறுவனமாகும்.

## SLGTI இல் எனது கல்வித் தெரிவுகள் என்ன?

01

| இயந்திரத் தொழில்நுட்பம் | F | P |
|---|---|---|
| எந்திரவினைஞர் (தேசிய தொழில் தகைமை மட்டம் -4) | ☑ | |
| தேசிய தொழில் தகைமை மட்டம் -5ற்கான அடிப்படை கற்கைநெறி | ☑ | |
| உற்பத்தி தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் -5 ) | ☑ | |



02

| மோட்டார்வாகனத் தொழில்நுட்பம் | F | P |
|---|---|---|
| மோட்டார்வாகன திருத்துனர் (தேசிய தொழில் தகைமை மட்டம் -4) | ☑ | |
| தேசிய தொழில் தகைமை மட்டம் -5ற்கான அடிப்படை கற்கைநெறி | ☑ | |
| மோட்டார்வாகனத் தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் -5) | ☑ | ☑ |



03

| மின்னியல் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம் | F | P |
|---|---|---|
| தையல் இயந்திர திருத்துனர் (தேசிய தொழில் தகைமை மட்டம் -4) | ☑ | |
| தேசிய தொழில் தகைமை மட்டம் -5ற்கான அடிப்படை கற்கைநெறி | ☑ | |
| இயந்திர மின்னணுவியல் (தேசிய தொழில் தகைமை மட்டம் -5) | ☑ | ☑ |
| இயந்திர மின்னணுவியல் (தேசிய தொழில் தகைமை மட்டம் -6) | ☑ | ☑ |



04

| கட்டுமானத் தொழில்நுட்பம் | F | P |
|---|---|---|
| கட்டுமான மேற்பார்வையாளர் (தேசிய தொழில் தகைமை மட்டம் -4) | ☑ | |
| தேசிய தொழில் தகைமை மட்டம் -5ற்கான அடிப்படை கற்கைநெறி | ☑ | |
| கட்டுமான தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் -5) | ☑ | |



05

| உணவு பதனிடல் தொழில்நுட்பம் | F | P |
|---|---|---|
| தேசிய தொழில் தகைமை மட்டம் -5ற்கான அடிப்படை கற்கைநெறி | ☑ | |
| உணவு தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் -5) | ☑ | ☑ |
| உணவு தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் -6) | ☑ | ☑ |



06

| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | F | P |
|---|---|---|
| தேசிய தொழில் தகைமை மட்டம் -5ற்கான அடிப்படை கற்கைநெறி | ☑ | |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் -5) | ☑ | ☑ |
| வன்பொருள் மற்றும் வலையமைப்பு தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் -6) | ☑ | ☑ |



முழு நேரம்(F) and பகுதி நேரம்(P)

பகுிநோ கற்கைநெறி தொடர்பான விவாங்களை slgti வலைப்பக்கத்தில் காணலாம்

## நான் SLGTI இல் பயில்வதற்கு தகுதியுடையவரா?

### நான் SLGTI இல் பயில்வதற்கு தகுதியுடையவரா?

- நீங்கள் ஒரு இலங்கைப் பிரஜையாக இருத்தல்.
- தேசிய தொழிற்தகைமை மட்டம் 4 : க.பொ.த (சா / த) பரீட்சையில் (குறைந்தது 06 பாடத்தில் ) சித்தியடைந்திருத்தல்
- அடிப்படை கற்கைநெறி : குறிப்பிட்ட துறையில் தேசிய தொழிற்தகைமை 3 பூர்த்தி செய்திருத்தல் அல்லது க.பொ.த (உ / த) பரீட்சையில் (குறைந்தது 3 பாடங்களில் ) சித்தியடைந்திருத்தல்.
- தேசிய தொழிற் தகைமை மட்டம் 5 : குறிப்பிட்ட துறையில் தேசிய தொழிற்தகைமை மட்டம் 4 பூர்த்தி செய்திருத்தல் அல்லது எம்மால் வழங்கப்பட்ட அடிப்படை கற்கைநெறி பூர்த்தி செய்திருத்தல்.
- தேசிய தொழிற் தகைமை மட்டம் 6 : குறிப்பிட்ட துறையில் தேசிய தொழிற் தகைமை மட்டம் 5 பூர்த்தி செய்திருத்தல்.

### SLGTI இன் பயிற்சிநெறிக்காக எவ்வாறு விண்ணப்பிக்க முடியும்?

- www.slgti.com என்ற இணையத்தளத்திற்கு பிரவேசித்து விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்ய முடியும்.
- தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொள்ள முடியும்– தொ.பேசி இல–021 492 7799.
- கிளிநொச்சி அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்ய முடியும்.
- விண்ணப்ப முடிவுத்திகதி 30th November 2019.

### SLGTI இல் தங்குமிட வசதியினைப் பெற்றுக் கொள்ள முடியுமா?

- 250 மாணவர்கள் (ஆண் மற்றும் பெண்) SLGTI இல் தங்குமிட வசதியினைப் பெற்றுக்கொள்ள முடியும்.


### ஏனைய வசதிகள்

- உங்களது ஆங்கில எழுத்து மற்றும் பேசும் திறனை விருத்தி செய்ய ஆங்கில வள நிலையம்.
- கிறிக்கட்,கரப்பந்து மற்றும் கூடைப்பந்து விளையாட்டு வசதிகள்.
- சமூக கலாச்சார நிகழ்வுகள் (நாடகம்,திரைப்படம்).
- மூன்று வேளை உணவுக்கான சிற்றுண்டிச்சாலை.









## தெரிவு செய்வதற்கான 5 காரணங்கள்

கோட்பாடு மற்றும் நடைமுறைப் பயிற்சி– வகுப்பறைக் கற்பித்தலுடன் மட்டும் நில்லாது நீங்கள் பெற்றுக்கொண்ட கோட்பாடு ரீதியான அறிவினை யதார்த்தமான உலக நடைமுறைக்கு அமைவாக பிரயோகிப்பதற்கான பயிற்சிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

வேலைவாய்ப்பு–சமகால தொழிற்சந்தையின் தேவைக்கு ஏற்றவகையில் இங்கு தொழிற்பயிற்சி பாடநெறிகள் வழங்கப்படுவதால் இப்பயிற்சிநெறியினை பூர்த்தி செய்யும் போது உங்களுடைய வேலைவாய்ப்பு அரச அல்லது தனியார் துறையில் உறுதிப்படுத்தப்படுவதோடு, வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான வழிவகைகளையும் உங்களால் ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

சுயதொழில் முயற்சியாண்மை – நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன் அபிவிருத்தி பயிற்சிகளை அடிப்படையாகக் கொண்டு சுய தொழிலொன்றை உருவாக்கிக்கொள்ள முடியும்.

திறமையான மற்றும் சரியானநேரத்தில்: நீங்கள் உங்களுடைய நேரத்தையும் பணத்தையும் விரயம் செய்யாது கல்வி மற்றும் திறன்களை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

தேசிய மற்றும் சர்வதேசரீதியில் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள சந்தர்ப்பத்தையளிக்கும் ஒரு தொழில் தகைமையினை பெற்றுக்கொள்ள முடியும்.

**SRI LANKA - GERMAN TRAINING INSTITUTE**

Ariviyal Nagar, Kilinochchi.

021 492 7799 / 021 206 0137

info@slgti.com

FOR MORE INFO 021 492 7799 www.slgti.com /srilankagerman

**YOUR FUTURE STARTS HERE!**